# வருடாந்த அறிக்கை

# 2018

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

# அறிமுகம்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால், 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பெறுபேறுகள் மேற்படி வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு உள்ளது.

எதிர்காலத்திற்குரிய தீர்வுகள் மற்றும் முடிவுகளை மேற்கொள்ளும் போதும் அவ்வாறே, வெளித் தரப்பினர்களுக்கு நிறுவனம் தொடர்பான பிரதிபிம்பம் ஒன்றினைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கும் மேற்படி வருடாந்த அறிக்கை உறுதுணையாக அமையும். விஷேடமாக எதிர்வரும் வருடத்திற்கான ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளும் போதும் கூட இங்கு குறிப்பிடப்பட்டு உள்ள செயலாற்றுகைகள் முக்கியம் பெறும்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இளைஞர்களை ஒருங்கிணைத்துக்கொண்டு இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி நிறுவன ரீதியான இலக்குகளை அடைவதற்காக பயன்படுத்தப்பட்ட உபாய முறைகள் மற்றும் அதன் மூலம் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள் என்பன இதன் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றன.பௌதீக மற்றும் மனித வளங்களை இளைஞர்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்திய விதம் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் தொடர்பாக ஆர்வமுள்ள வெளிவாரியான தரப்பினர்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது தீர்மானங்களை மேற்கொள்வதற்காக வருடாந்த அறிக்கையினைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அவ்வாறே நிறுவனமானது எதிர்பார்க்கப்பட்ட திசையில் பயணம் செய்துள்ளதா என்பதனை அறிந்து கொள்வதற்கு வருடாந்த அறிக்கை மிகவும் முக்கியமானது.

2018 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில், இளைஞர் கழகங்களைத் தாபித்தல், இளைஞர் தலைமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள், இளைஞர் விளையாட்டு விழாக்கள்,விளையாட்டுக் குலாம்கள், துருணு ஷ்ரம சக்தி மக்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், இளைஞர்களுக்கான விருது வழங்கும் வைபவம், இளைஞர் நாடக போட்டித் தொடர்கள், தேசிய கலாச்சார விழா, (நிஸ்கோ) இளைஞர் கூட்டுறவுச் சங்க நிகழ்ச்சித்திட்டம், வெளிநாட்டுக் குலாம்கள், சர்வதேச இளைஞர்களின் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள்,ஊடகச் செயலமர்வுகள் ஆகிய ஏராளமான நிகழ்ச்சித் திட்டங்கள் பல வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

அலுவலர்களின் தொழில்சார் தகைமைகளை விருத்தி செய்தல் மற்றும் உயர் கல்வி அல்லது தொழில்சார் திறன்களைக் கொண்ட அலுவலர்களை இணைத்துக்கொள்ளும் தேவைப்பாடு என்பன உச்ச அளவில் நிலவுகின்றன. பௌதீக வளங்களின் தட்டுப்பாடு,சம சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் போட்டியிடுவதற்கு நிறுவனத்தில் போதிய வளங்கள் இல்லாமை, என்பன இவ்வாண்டிலும் நிறுவனம் சார் சவால்களாகக் காணப்பட்டன. மேற்படி பிரச்சினைகளுக்குரிய தீர்வாக பயிற்சிகளுக்குரிய தேவைப்பாடுகளை பகுப்பாய்வு செய்ததன் பின்னர் அலுவலர்களைப் பயிற்றுவித்தல், அலுவலர்களுக்குப் பதவியுயர்வு வழங்குதல், தொழில்சார் மட்டத்திலுள்ள சிரேஷ்டர்களின் உதவியினைப் பெற்றுக்கொள்ளல், மற்றும் முகாமைத்துவத் தகவல் கட்டமைப்பினை (MIS) இற்றைப்படுத்துதல் மற்றும் பௌதீக வளங்களை இற்றைப்படுத்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் தீவிர தேவைப்பாடு நிலவுகின்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சகல அலுவலக ரீதியான பணிகளையும் மிகவும் வெற்றிகரமாக கொண்டு நடாத்துவதற்காக வழிகாட்டல்களையும் மற்றும் தலைமைத்துவத்தினையும் வழங்கிய கௌரவ பிரதமர், அமைச்சர் உட்பட தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சகல அலுவலர்கள் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் / பணிப்பாளர் நாயகம் அவர்கள் உட்பட இதற்காக ஒத்துழைப்பினை வழங்கிய சகலரையும் கௌரவத்துடன் நினைவு கூறுகின்றோம்.

திட்டமிடல்கள் மற்றும் அபிவிருத்திப் பிரிவு

செயல் நோக்கு

இலங்கை நாட்டின் வலுமிக்க  இளைஞன்.

செயற்பணி

உள்நாட்டு மற்றும் சர்வதேச வாய்ப்புக்களைப் பயன்படுத்தி வாழ்வின் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக இலங்கை நாட்டு இளைஞரை வலுவூட்டுவதற்கான வசதிகளை வழங்குதல்.

# நோக்கங்கள்

- தேசிய உணர்வு தொடர்பான ஊக்கம், ஒழுக்கம் தொடர்பான உணர்வு, சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகள் தொடர்பான புரிந்துணர்வு மற்றும் உழைப்பின் அபிமானம் தொடர்பான உணர்வு என்பவற்றினை இளைஞர்களுக்கிடையே வலுப்படுத்தல்.

- தேசிய அபிவிருத்தி முன்மொழிவுத் திட்டங்களில் இளைஞர்களின் பங்களிப்பினை ஏற்படுத்திக்கொள்ளல்.
- இலங்கையிலும் மற்றும் ஏனைய நாடுகளிலும் உள்ள இளைஞர்களுக்கிடையே நட்புறவு மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு என்பவற்றினை ஏற்படுத்தல்.
- இளைஞர்களுக்கிடையே போட்டித்தன்மை மற்றும் வெற்றி என்பன தொடர்பான உணர்வுகளை ஏற்படுத்துவதற்காக ஊக்குவித்தல்.
- இளைஞர்களின் அறிவினை விரிவுபடுத்தல் மற்றும் அபிவிருத்தியுடன் தொடர்பான துறைகளில் பயிற்சியினை வழங்குதல்.
- இளைஞர்களுக்கு இடையில் கலாச்சார இலக்கிய மற்றும் கலை ரீதியான செயற்பாடுகளை ஊக்குவித்தல்.
- இளைஞர்களுக்கு இடையில் தேகாரோக்கியத்தின் விருத்தி மற்றும் விளையாட்டுத்துறை விருத்தி என்பவற்றிற்கான ஊக்குவிப்பினை வழங்குதல்.
- இளைஞர்களுக்கு பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கினை வழங்குதல் தொடர்பான வசதிகளை வழங்குதல்.
- அங்கவீன இளைஞர்களுக்கு உதவி செய்தல்.
- அரசின் பொருளாதாரத் திட்டங்களை வலுப்படுத்தும் நோக்குடன், நீண்டகால கொள்கைகளின் அடிப்படையில் விளைதிறனுடைய வகையில் முதலீடு செய்வதன் ஊடாக இளைஞர்களுக்கு முறையான வேலை வாய்ப்பிற்கான சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- கொள்கைகளை உருவாக்கும்போதும் மற்றும் நடைமுறைப்படுத்தும்போதும் இளைஞர்களின் பங்களிப்பிற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.
- இளைஞர் அமைப்பினைத் தாபித்தல் மற்றும் இளைஞர்களின் நலன்புரிக்காக ஏற்கனவே தாபிக்கப்பட்டு உள்ள அமைப்புக்களுக்கு உதவுதல்.
- இளைஞர் சேவைகளின் பரவலினைத் திட்டமிடல், ஒன்றிணைத்தல், மேம்படுத்தல் மற்றும் செயற்படுத்தல்.
- ஒவ்வொவ்வொரு இளைஞர்களுக்கும் உரித்தான இயல்பான பண்புகளை விருத்தி செய்தல்.

## செயலாளரின் வாழ்த்துச் செய்தி

இலங்கையின் இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஸ்தாபிக்கப்பட்டு உள்ள முதலாவதும் மற்றும் அவ்வாறே பாரிய அரச நிறுவனமுமாகிய தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 2018 ஆம் ஆண்டில் இளைஞர்களின் நலன்புரி மற்றும் அபிவிருத்தி என்பவற்றினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட பாரிய நிகழ்ச்சிகள் தொடர்பான விடயங்களை எடுத்துக் காட்டும் வருடாந்த அறிக்கைக்காக வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்கக் கிடைத்தமை தொடர்பாக மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இளைஞர் யுவதிகளின் விளையாட்டுத் திறன்களை கூடியளவில் விருத்தி செய்து அவர்களை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்லும் நோக்கில் பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி அவற்றில் திறமைகளை வெளிக்காட்டிய இளைஞர் யுவதிகளுக்காக நடாத்தப்படும் 2018 ஆம் ஆண்டின் தேசிய இளைஞர் விளையாட்டு விழாவினை, மாத்தறை கொட்டவில மாவட்ட விளையாட்டுத்துறைக் கட்டிடத் தொகுதியில் மிகவும் கோலாகலமாக நடாத்தக் கிடைத்தமை, இந்நாட்டில் வினைத்திறனுடன் செயற்படும் இளைஞர்களுக்குக் கிடைக்கப்பெற்ற பாரியதொரு வெற்றியாக நான் கருதுகின்றேன். அவ்வாறே நாடகத் துறையில் பிரவேசித்து உள்ள இளைஞர் யுவதிகளின் உள்ளார்ந்த ஆற்றல்களை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்லும் தேசிய இளைஞர் நாடக விழா கடந்த செப்தம்பர் மாதம் மருதான டவர் ஹோல் ஆடக அரங்கத்தில் மிகவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டதுடன் இம்முறை பல்வேறு கலை நிகழ்ச்சிகளின் ஊடாக திறமைகளை வெளிப்படுத்திய வளர்ந்து வரும் கலைஞர்களை கௌரவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய இளைஞர் விருது விழா, கடந்த நவெம்பர் மாதம் கொழும்பு தாமரைத் தடாக ஆடக அரங்கில் மிகவும் விமர்சையான வகையில் நடாத்தப்பட்டது. இங்கு நாடகத் துறை மற்றும் அவ்வாறே, பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் திறமைகளை வெளிக்காட்டிய 170 இற்கும் அதிகமான இளம் கலைஞர்களுக்கு இளைஞர் விருதுகளை வழங்கக் கிடைத்தமை மகிழ்ச்சிக்கு உரிய விடயம் ஒன்றாகும்.

மேலும், இலங்கை பூராகவும் பரவிக் காணப்படும் நாடகத் துறையில் ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகளுக்காக நாடக மற்றும் நடனக் கலை டிப்ளோமா பாடநெறி ஒன்றும், நடனம் மற்றும் இசைத்துறையில் திறமைகளை வெளிக்காட்டும் இளைஞர் யுவதிகளுக்காக மஹரகம பெல்வூட் மற்றும் எரிமிணியாய கலா நிலையமும் 2018 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

அவ்வாறே, தென்னாசியாவின் பாரிய தொண்டர் இளைஞர் அமைப்பாகிய இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தினை வலுவூட்டிய வகையில் 2018 ஆம் ஆண்டில் 11 350 இளைஞர் கழகங்களைத் தாபிப்பதற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு ஆற்றல் கிடைத்தது. மேற்படி சம்மேளனத்தின் ஊடாக தேசிய இளைஞர் தினம் மற்றும் சர்வதேச இளைஞர் தினம் என்பவற்றினை முன்னிட்டு ஏராளமான நிகழ்ச்சிகளை மிகவும் கோலாகலமான முறையில் நடாத்தக் கிடைத்தமை இந்த நாட்டு இளைஞர்களுக்குக் கிடைக்கப்பெற்ற பாரியதொரு வெற்றியாகும். மேலும் மேற்படி வருடத்தில் இளைஞர் பாராளுமன்றத்தினை வலுவூட்டிய வகையில் வெற்றிகரமான சில கூட்டத்தொடர்களும் அவ்வாறே சில கல்வி மற்றும் பயிற்சிச் செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன. இந்நாட்டு இளைஞர் யுவதிகளுக்காக பாடசாலை ஊடகச் செயலமர்வுகள், மாகாண மற்றும் தேசிய ஊடகச் செயலமர்வுகள் என்பன சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு ஆற்றல் கிடைத்தமை மேலும் ஒரு பாரிய வெற்றியாகும்.

இதற்கு மேலதிகமாக, நிபொன் மாற்று நட்புறவுக் கப்பல் நிகழ்ச்சித்திட்டம், சர்வதேச இளைஞர் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள் சர்வதேச இளைஞர் சமவாயம், மாணவ தலைவர் நிகழ்ச்சிகள், பிரதேச இளைஞர் முகாம்கள், தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சிகள், தேசிய இளைஞர் விருது வழங்கல் நிகழ்ச்சிகள், எடின்பரோப் பிரபு சர்வதேச தினத்தனைக் கொண்டாடுதல் இளைஞர் சேவைகள் ரூபவாஹினி சவால் வெற்றிக்கிண்ணம் மற்றும் சுப்பர் லீக் போட்டித்தொடர் என்பவற்றினை மிகவும் வெற்றிகரமான முறையில் நடாத்தியமை ,வொலிபோல்/கபடி/ஜூடோ /கராத்தே ஆகிய விளையாட்டுக் குழாம்களைப் பேணி வருதல் "எதிர்கால இலக்கு எனும் தொனிப்பொருளின் கீழ் 2018 யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தினை நிகவெரட்டிய கால்நடை வள விவசாயப் பண்ணை வளாகத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இளைஞர்கள் 7000 பேரின் பங்களிப்புடன் நடாத்தியமை யூத் வித் டெலன்ட் ரியலிட்டி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் துருணு ஷ்ரம சக்திக் கருத்திட்டங்கள் 200 நிகழ்ச்சித்திட்டம் தேசிய இளைஞர் திரைப்பட விழா போன்ற பாரிய நிகழ்ச்சித்திட்டங்கள் ஏராளமானவை இந்த நாட்டு இளைஞர்களுக்காக 2018 ஆம் ஆண்டில் இளைஞர் சேவைகள் மன்றம் நடைமுறைப்படுத்தி உள்ளது என்பதனை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்க முடிந்தமை நான் பெற்ற ஒரு அதிஷ்டமாகக் கருதுகின்றேன்.

செயலாளர்,

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றல் மற்றும் புனர்நிர்மாணம் வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.

## தலைவர் / பணிப்பாளர் நாயகம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டு உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் பரம்பரைக்கு சேவைகளை வழங்குவதற்காக நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் மற்றும் மாவட்டத்திலும் அலுவலகங்களை ஸ்தாபித்து உள்ளதுடன், அதற்கு மேலதிகமாக 54 பயிற்சி நிலையங்களில் இளைஞர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.மேற்படி மன்றமானது, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றல், புனர் நிர்மாணம்,மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் மேற்படி அமைச்சின் ஊடாக இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உரிய வகையில் மேற்பார்வை, ஆலோசனைகள், வழிகாட்டல்கள், மற்றும் வருடாந்த ஒதுக்கீடுகள் என்பன வழங்கப்படுவதுடன், மன்றத்தின் செயலாற்றுகையினை எடுத்துக் காட்டும் 2018 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கைக்காக எனது செய்தி ஒன்றினை வழங்கக் கிடைத்தமையினையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேற்படி மன்றம், வருடாந்தத் திட்டத்திற்கு அமைய நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதுடன், இதன் கீழ் ஒவ்வொவ்வொரு இளைஞர் யுவதிகளுக்கும் உரித்தான ஆற்றல்களை விருத்தி செய்யும் நோக்கில் சில பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டு அதன் கீழ் இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் நுண்கலைத் திறன்கள் அபிவிருத்திப் பிரிவின் ஊடாக வருடாந்தம் இளைஞர் விருது விழாவினை நடாத்தி நுண்கலைத் திறன் ஆற்றல்களை விருத்தி செய்வதற்கு இளைஞர்கள் ஊக்குவிக்கப்படுவர். அவ்வாறே மஹரகம தேசிய இளைஞர் மத்தியநிலையத்தினைச் சார்ந்த வகையில் 06 மாதங்களுக்கு ஒரு முறை 20 முழு நேரப் பாடநெறிகளையும் மற்றும் 28 பகுதி நேரப் பயிற்சிப் பாடநெறிகளையும் நடைமுறைப்படுத்தி அதனூடாக பாரியளவு எண்ணிக்கையிலான பயிலுநர் இளைஞர் யுவதிகளை நாட்டிற்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

விஷேட கருத்திட்டப் பிரிவின் ஊடாக யொவுன்புர தேசிய இளைஞர் முகாம் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுவதுடன், அதனூடாக தலைமைத்துவம், ஆளுமை என்பவற்றுடனான ஒழுக்க நெறியுடைய இளைஞர் குழு ஒன்றினை கிராமத்திற்கும் நாட்டிற்கும் வழங்குவதற்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. விஷேடமாக கிராமத்திற்கு ஒரு கோடி எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக நாடு பூராகவும் உள்ள இளைஞர் யுவதிகளினால் தமது பிரதேசத்தின் தேவைப்பாடுகளை அடையாளம் கண்டு பாதைகள், பாலங்கள் என்பவற்றினை நிர்மாணித்தல் மத வழிபாட்டுத் தலங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஏனைய கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு இளைஞர்களின் உழைப்பினை மிகவும் பயனுறுதியுள்ள வகையில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. நிஸ்கோ வீடியோப் பிரிவின் ஊடாக ரூபவாஹினி டிப்ளோமாப் பாடநெறிகள் நடாத்தப்படுவதுடன், அதனூடாக தேசிய தொழில்சார் தரச் சான்றிதழ்களை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. தேசிய இளைஞர் விருது வழங்கல் பிரிவின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் எடின்பரோ சர்வதேச விருது வழங்கல் மூலம் இளைஞர் யுவதிகளை மற்றையவர்களுக்குப் பணி புரியும் பணியில் ஈடுபடுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து அதனூடாக இளைஞர் யுவதிகளுக்கு உயர் கல்வி வாய்ப்புக்களின் போது புள்ளிகளை வழங்கும் வேலைத் திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்படுவதனால் அதனூடாக இளைஞர் யுவதிகளுக்கு மிகவும் பயனுறுதி உள்ள சேவை ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக ஊடகப் பிரிவின் மூலம் மாகாண மட்டத்தில் ஊடகச் செயலமர்வுகளை நடாத்தி இளைஞர் யுவதிகளுக்கு ஊடகத் துறைக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு உள்ளன. இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக தேசிய கொள்கைகளை உருவாக்கும் போது இளைஞர்களின் பங்களிப்பினையும் மற்றும் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் பெற்றுக் கொள்வதற்கான வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு உள்ளன. இதற்கு மேலதிகமாக விஷேட இசைக்குழுக்களைத் தாபித்து இசைத் துறையில் ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகளின் திறன்கள் அபிவிருத்தி செய்யப்படுவதுடன், விளையாட்டுத்துறை அபிவிருத்திப் பிரிவின் ஊடாக வருடாந்தம் நடாத்தப்படும் தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் மூலம் சிறந்த உடல், உள சமநிலையுடன் கூடிய மற்றும் சிறந்த ஆளுமையினை உடைய இளைஞர் யுவதிகளை நாட்டிற்கு அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.சர்வதேச இளைஞர் அபிவிருத்தி பிரிவு, கூட்டுறவு அபிவிருத்திப் பிரிவு, கைத்தொழில் மற்றும் தொழில்சார் பயிற்சிகள் பிரிவு என்ற வகையில் இளைஞர் யுவதிகளின் செயலாற்றுகைக்கு உறுதுணையாக அமையும் பிரிவுகள் தாபிக்கப்பட்டு உள்ளன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் தாபிக்கப்பட்டு உள்ள இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் நாட்டின் செயற்பாட்டுடன் கூடிய இளைஞர் யுவதிகள் ஏராளமானோர் இணைந்துள்ள ஒரே தொண்டர் அமைப்பாகும். இதன் அடிப்படையில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் இளைஞர் கழகங்கள் தாபிக்கப்பட்டு உள்ளதுடன் பிராந்திய, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் மேற்படி அமைப்பு செயற்படுகின்றது.

தேசிய இளைஞர் சேவைகள் சபையின் செயல் இலக்கிற்கு அமைய வலுவான இலங்கை நாட்டு இளைஞர்களை உருவாக்குவதற்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச வாய்ப்புக்களைப் பயன்படுத்தி வாழ்க்கைச் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக இலங்கை நாட்டு இளைஞரை வலுவூட்டுவதற்கான வசதிகளை வழங்கும் செயற்பாட்டின் ஊடாக 2018 ஆம் ஆண்டில் வெற்றிகரமான பெறுபேறுகளை ஈட்டிக்கொள்வதற்காக உறுதுணையாக நின்ற அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தலைவர் / பணிப்பாளர் நாயகம்
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.
மஹரகம.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | அறிமுகம் | ii |
| | செயல் இலக்கு/ செயற்பணி | iii |
| | நோக்கங்கள் | iV |
| | அமைச்சுச் செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி | V-*Vi* |
| | தலைவர் / பணிப்பாளர் நாயகம் அவர்களின் வாழ்த்துச் செய்தி | Vii-Viii |
| | உள்ளடக்கம் | iX |
| 1 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 1 |
| 1.1 | ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு | 2 |
| 1.2 | சபைக்குரிய பணிப்பாளர்கள் சபையின் பெயர்ப்பட்டியல் | 3-5 |
| 2 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு -2018 | 6 |
| 3 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வரவுகள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரங்கள் | 7-11 |
| 4 | அபிவிருத்திச் செயற்பாடுகள் -2018 | 12 |
| 4.1 | இளைஞர் அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 12-15 |
| 4.2 | தொழில்சார் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைச் செயற்பாடுகள் | 16 |
| 4.3 | விளையாட்டுத்துறை அபிவிருத்திச் செயற்பாடுகள் | 17-21 |
| 4.4 | அழகுக்கலைத் திறன் அபிவிருத்திச் செயற்பாடுகள் | 22-24 |
| 4.5 | தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சிச் செயற்பாடுகள் | 24-25 |
| 4.6 | சர்வதேச இளைஞர் தொடர்புகள் | 26-27 |
| 4.7 | நிஸ்கோ வீடியோ செயற்பாடுகள் | 27-28 |
| 4.8 | பொருளாதார ஊக்குவிப்பு மற்றும் விவசாயப் பண்ணைகள் அபிவிருத்திச் செயற்பாடுகள் | 28-29 |
| 4.9 | திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு | 30 |
| 4.10 | செயலாற்றுகை மதிப்பீடுகள் மற்றும் அலுவலர்களின் பயிற்சிகள் பிரிவு | 30-32 |
| 4.11 | ஊடகப் பிரிவு | 32-34 |
| 4.12 | தகவல் தொழிநுட்பப் பிரிவு | 34-35 |
| 4.13 | பரீட்சைகள் மற்றும் மதிப்பீடுகள் பிரிவு | 36-37 |
| 4.14 | விஷேட கருத்திட்டங்கள் பிரிவு | 37-43 |
| 4.15 | இளைஞர் விருது வழங்கல் அதிகார சபை | 43-44 |
| 4.16 | இளைஞர் கூட்டுறவு மற்றும் வியாபார அபிவிருத்திப் பிரிவு | 45-46 |
| 5 | நிருவாகப் பிரிவின் செற்பாடுகள் -2018 | 46 |
| 5.1 | தாபன நடவடிக்கைகள் | 46-48 |
| 5.2 | விநியோகப் பிரிவு | 48 |
| 5.3 | போக்குவரத்துச் செயற்பாடுகள் | 48-49 |
| 5.4 | உள்ளக கணக்காய்வுப் பிரிவு | 49 |
| 5.5 | செயலாளர் பிரிவு | 49 |
| 5.6 | சட்டப் புலனாய்வுச் செயற்பாடுகள் | 49-50 |
| 5.7 | நிர்மாணிப்புக்கள் மற்றும் பராமரிப்புப் பிரிவு | 50-51 |
| 6 | தொண்டர் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள் | 51-52 |
| 7 | நிறுவன செயலாற்றுகை மதிப்பீட்டின் சாராம்சம் | 53-55 |
| 8 | 2018 ஆண்டின் கணக்காய்வு விசாரணைகளை சரி செய்வதற்கான எடுக்கப்பட்ட நடவடிக்கை | 56-59 |
| 9 | சார்ந்த அறிக்கைகள் / ஆவணங்கள் | 60 |
| இணைப்பு 01 கணக்காய்வு குழு அறிக்கை | | 61 |
| இணைப்பு 02 நிதி கணக்காள்யு கூற்று | | 62-63 |
| இணைப்பு 03 கணக்காய்வாளர் நாயகம் அறிக்கை மற்றும் நிதிக் கூற்று | | 64-102 |

## 1.தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

இலங்கை நாட்டின் இளைஞர் யுவதிகளின் முழுமையான விருத்தியினை உறுதிப்படுத்த முடியுமான வகையில் அவர்களது சுய விருப்பங்களை மேம்படுத்துவதற்காக தாபிக்கப்பட்டுள்ள ஒரேயொரு அரச நிறுவனம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகும்.

<u>தேசிய இளைஞர் சேவைகள் சபையினைத் தாபிப்பதற்குரிய பாராளுமன்றச் சட்டங்கள்</u> :-

- 1967 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சுயாதீன தேசிய இளைஞர் சேவைகள் சட்டம்
- 1968 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க சுயாதீன தேசிய இளைஞர் சேவைகள் (திருத்த) சட்டம்
- 1969 சனவரி 23 ஆந்திகதிய **14837/6** ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் சட்டத்தின் 26 ஆவது பந்திக்கு அமைய ஒழுங்கு விதிகள் கோவையினை வெளியிடுதல்.
- 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சட்டம்.
- 1979 டிசம்பர் 20 ஆந்திகதிய **67/09** ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் 1967 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சுயாதீன தேசிய இளைஞர் சேவைகள் (திருத்த) சட்டத்தினை இரத்து செய்தல் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் தினத்தினை வெளியிடுதல்.
- 1980 சனவரி மாதம் 02 ஆந்திகதிய **69/09** ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தின் 34 ஆவது பிரிவின் கீழ் ஒழுங்கு விதிகள் கோவையினை வெளியிடுதல்.
- 1986 மார்ச் மாதம் 10 ஆந்திகதிய 392/05 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் 1979 ஆம் ஆண்டின் தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தின் 34 ஆவது பிரிவின் கீழ் 1986, 01 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் கட்டளைகளை வெளியிடுதல்.
- 1990 புனர்வாழ்வு ஆணையாளர் நாயக அலுவலகத்தினை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு உள்ளீர்ப்புச் செய்தல்.
- 2011 ஆம் ஆண்டில் சிரி லங்கா யூத் எண்ணக்கருவின் ஆரம்பம்

1978 ஆம் ஆண்டில் இளைஞர் விவகார மற்றும் தொழில் வாய்ப்புக்கள் அமைச்சு தாபிக்கப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு முன்னரிலும் பார்க்க விரிவான அதிகாரங்களுடன் கூடிய இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்புக்கள் கிடைத்தன.

## 1.1 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



## 1.2 2018.01.01 தொடக்கம் 2018.04.30 வரையான மன்றத்தின் பணிப்பாளர்கள் சபைப் பெயர்ப்பட்டியல்

| தொடரி லக்கம் | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | சட்டதரணி திரு. டபிள்யு.ஜீ.எஸ்.எரந்திக | தலைவர் / பணிப்பாளர் நாயகம் |
| 02 | திருமதி.அசோகா அலவத்த | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 03 | திரு. எச்.ஹேவகே | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 04 | திரு.கே.பீ. சிரிபத்தன | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 05 | திரு. சி.எச்.எஸ்.தங்கல்ல | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 06 | சட்டதரணி திரு. தசுன் நாகஸ்ஹேன | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 07 | சட்டதரணி திரு.மதுர பிரியபாஷன வெல்கம | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 08 | சட்டதரணி திருமதி. எச்.எம்.சுதர்ஷி பாக்யா கருணாரத்ன | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 09 | திரு.புன்சந்த விஜய குமார | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 10 | திரு. சமிந்த தல்கஸ்வத்த | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 11 | திரு.ரவி கிரிஷான் ஜயவர்தன | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 12 | திரு.பென்.ரஜித சியாமல் குணவர்தன | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 13 | திரு.டபிள்யு.புத்திக லக்மால் குணசேகர | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 14 | திருமதி.வி.ஏ.எச்.சந்தருவதி | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 15 | திருமதி.நிரோஷா விராஜினி | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 16 | திரு.நிலூக கருணாரத்ன | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் |

மூலம் – செயலாளர் பிரிவு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மஹரகம.

## 2018.08.03 ஆம் திகதிக்குப் பின்னர் நியமனம் பெற்ற மன்றத்தின் பணிப்பாளர் சபையின் பெயர்ப்பட்டியல்

| தொடரி லக்கம் | பெயர் | பதவி | நியமனம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 01 | சட்டதரணி திரு. டபிள்யு.ஜீ.எஸ்.எரந்திக | தலைவர் /பணிப்பாளர் நாயகம் | |
| 02 | திருமதி.எஸ்.எச்.ஏ.என்.டீ.அபயரத்ன | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.09.10 |
| 03 | திரு.எச்.ஹேவகே | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.09.10 |
| 04 | திரு.சி.எச்.எஸ்.தங்கல்ல | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.09.17 |
| 05 | திருமதி.டீ.எஸ்.விஜேசேகர | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.09.25 |
| 06 | சட்டதரணி,திரு. தசுன் நாகஸ்ஹேன | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.08.03 |
| 07 | திரு.புன்சந்த விஜயகுமார | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.08.03 |
| 08 | திரு.டபிள்யு. புத்திக லக்மால் குணசேகர | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.08.03 |
| 09 | சட்டதரணி,திரு.கனிஷ்க ராஜபக்ஷ | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.08.03 |
| 10 | திரு.கே.எம்.ரொமேஷ் சுகதபால | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.08.03 |
| 11 | திரு.நவோத்ய ஜயசிங்ஹ | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.08.03 |
| 12 | திரு.சம்பத் நிரோஷ திக்கும்புர | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.08.03 |
| 13 | திரு.சதிர சரச்சந்திர | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.08.03 |

மூலம் – செயலாளர் பிரிவு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மஹரகம.

**2018.11.02 ஆம் திகதிக்குப் பின்னர் நியமனம் பெற்ற மன்றத்திற்குரிய பணிப்பாளர்கள் சபையின் பெயர்ப்பட்டியல்**

| தொடரிலக்கம் | பெயர் | பதவி | நியமனம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 01 | திரு.மனுல சமல் பெரேரா | தலைவர் /பணிப்பாளர் நாயகம் | 2018.11.02 |
| 02 | திரு.எச்.ஹேவகே | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.09.10 |
| 03 | திருமதி. எஸ்.எச்.ஏ.என்.டி.அபயரத்ன | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.09.10 |
| 04 | திருமதி.டி.எஸ்.விஜேசேகர | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.09.25 |
| 05 | திருமதி விஜிதா செனவிரத்ன | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.11.26 |
| 06 | திருமதி. கே.குணவர்தன | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.11.26 |
| 07 | திரு. மெரில் குணதிலக | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.11.26 |
| 08 | திரு.ஆர்.டீ.அனுர ரணசிங்ஹ | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.11.26 |
| 09 | திரு.சமன்.டீ.வடுகே | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.11.26 |
| 10 | திரு. சி.எச்.எஸ்.தங்கல்ல | மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் | 2018.09.17 |

மூலம் – செயலாளர் பிரிவு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மஹரகம.

## 02. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு - 2018

- திரு.சி.எச்.எஸ்.தங்கல்ல - குழுவின் தலைவர்
  உதவிப் பணிப்பாளர்
  அரச நிதித் திணைக்களம்

- சட்டதரணி திரு. தசுன் நாகஸ்தன்ன - குழுவின் உறுப்பினர்
  மன்றத்திற்குரிய பணிப்பாளர் சபை உறுப்பினர்

- திரு.பென்.ரஜித சியாமல் குணவர்தன - குழுவின் உறுப்பினர்
- திருமதி. பீ.ஏ.காந்தி - கண்காணிப்பாளர்
  தலைமை உள்ளகக் கணக்காய்வாளர்
  தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு.
- திருமதி.எம்.ஏ.எஸ்.புஷ்பராணி - அதிதி
  கணக்காய்வு அத்தியட்சகர்
  கணக்காய்வாளர் நாயக திணைக்களம்
  அரச கணக்காய்வுப் பிரிவு
- திரு.டபிள்யு.எல். நாமரத்ன - செயலாளர் / அழைப்பாளர்
  தலைமை உள்ளகக் கணக்காய்வாளர்
  தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

- திருமதி.சி.கே. ஹேரத் - குழுவின் முன்னாள் செயலாளர்/ அழைப்பாளர்

மூலம் – உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மஹரகம.

## 3. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வரவுகள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகளின் வரவுகள்.

(ரூ. 000)

| | | 2018 |
|---|---|---|
| திறைசேரிகள் | | |
| | மீண்டெழும் | 999,930 |
| | அபிவிருத்திகள் | 531,475 |
| | மூலதனங்கள் | 221,000 |
| **திறைசேரிகள்** | | **1,752,405** |
| அமைச்சுக்கள் | | |
| | மீண்டெழும் | 482,783 |
| | மூலதனங்கள் | 497,202 |
| **அமைச்சுக்கள்** | | **979,985** |
| மாகாண சபைகள் | | |
| | மீண்டெழும் | 150 |
| **மாகாண சபைகள்** | | **150** |
| வெளிநாட்டு அமைப்புக்கள் | | |
| | மீண்டெழும் | 6,441 |
| | மூலதனங்கள் | 45,980 |
| **வெளிநாட்டு அமைப்புக்கள்** | | **52,421** |
| ஏனைய வெளி நிறுவனங்களின் வரவுகள் | | |
| | மீண்டெழும் | 1,213 |
| **ஏனைய வெளி நிறுவனங்களின் வரவுகள்** | | **1,213** |
| உள்ளக பண ஈட்டல்கள் | | |
| | உள்ளக வருமானங்கள் | 243,060 |
| **உள்ளக பண ஈட்டல்கள்** | | **243,060** |

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகளுக்குரிய செலவுகள்

(ரூ. 000)

| | | 2018 |
|---|---|---|
| திறைசேரிகள் | | |
| | மீண்டெழும் | 999,930 |
| | அபிவிருத்திகள் | 494,526 |
| | மூலதனங்கள் | 221,000 |
| **திறைசேரிகள்** | | 1,715,456 |
| அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களின் செலவுகள் | | |
| | மீண்டெழும் | 482,626 |
| | மூலதனங்கள் | 490,491 |
| **அமைச்சுக்கள்** | | 973,117 |
| மாகாண சபைச் | | |
| | மீண்டெழும் | 150 |
| **மாகாண சபைகள்** | | 150 |
| வெளிநாட்டு அமைப்புக்கள் | | |
| | மீண்டெழும் | 10,971 |
| | மூலதனங்கள் | 53,392 |
| **வெளிநாட்டு அமைப்புக்கள்** | | 64,363 |
| உள்ளக பண ஈட்டல்களுக்குரிய செலவுகள் | | |
| ஏனைய வெளி நிறுவனங்களின் செலவுகள் | மீண்டெழும் | 3,483.00 |
| ஏனைய வெளி நிறுவனங்களின் முழுசெலவுகள் | | 3,483.00 |
| **உள்ளக பண ஈட்டல்கள்** | | |
| | மீண்டெழும் | 124,806 |
| | அபிவிருத்தி | 109,798 |
| | மூலதனங்கள் | 3,115 |
| முழு உள்ளக பண ஈட்டல்கள் | | 237,719, |

**தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகளின் வரவுகள்**




**தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகளுக்குரிய செலவுகள்**



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு திறைசேரி,உள்ளக பண ஈட்டல்கள் மற்றும் ஏனைய வெளிவாரியான நிறுவனங்களின் ஊடாக நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் ஒதுக்கீடுகளின் மூலம் ஏற்கப்பட்ட நிருவாக மற்றும் அபிவிருத்திச் செலவுகள் (ரூபா மில்லியன்கள்)

2013– 2018

| **ஒதுக்கீடுகள்** | **ஆண்டு** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
| அபிவிருத்தி | 716 | 831 | 565 | 768 | 1212 | 1115 |
| நிருவாகம் | 745 | 795 | 1014 | 1014 | 1075 | 1124 |

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு திறைசேரி,உள்ளக பண ஈட்டல்கள் மற்றும் ஏனைய வெளிவாரியான நிறுவனங்களின் ஊடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒதுக்கீடுகளின் மூலம் ஏற்கப்பட்ட நிருவாக மற்றும் அபிவிருத்திச் செலவுகள் (ரூபா மில்லியன்கள்)

2013 – 2018



அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய செலவுகளின் சாராம்சம்

| தொடரி லக்கம் | நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை | ரூபா (மில்லியன்) | செலவிடப்பட்ட தொகை | ரூபா (மில்லியன்) ,000 |
|---|---|---|---|---|---|
| | | திறைசேரிகள் | அமைச்சுக்கள் | திறைசேரிகள் | அமைச்சுக்கள் |
| 1 | கலைத் திறன்கள் அபிவிருத்திச் நிகழ்ச்சித் திட்டங்கள் | 87.9 | | 75.64 | 17.84 |
| 2 | சர்வதேச இளைஞர்களின் தொடர்புகள் சார் செயற்பாடுகள் | 36 | | 44.39 | |
| 3 | இளைஞர் அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 71 | 50 | 65.73 | 35.54 |
| 4 | இளைஞர் பரிசு வழங்கல் அதிகார சபையின் செயற்பாடுகள் | 43 | | 10.12 | |
| 5 | விளையாட்டுத்துறை அபிவிருத்திச் செயற்பாடுகள் | 188 | | 120.76 | |
| 6 | கைத்தொழில் மற்றும் தொழில்சார் பயிற்சிச் செயற்பாடுகள் | 80.7 | | 97.32 | |
| 7 | இளைஞர் கூட்டுறவு மற்றும் வியாபார அபிவிருத்திச் செயற்பாடுகள் | 10 | | 6.9 | |
| 8 | பொருளாதார ஊக்குவிப்பு மற்றும் விவசாயப் பண்ணைச் செயற்பாடுகள் | 25 | | 11.28 | |
| 9 | ஊடகச் செயற்பாடுகள் | 10 | | 10.57 | |
| 10 | நிஸ்கோ வீடியோ செயற்பாடுகள் | 5 | | 2.75 | |
| 11 | திட்டமிடல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் | 6.6 | | 2.5 | |
| 12 | தகவல் தொழிநுட்பச் செயற்பாடுகள் | 25 | | 15.42 | |
| 13 | செயலாற்றுகைள் மற்றும் அலுவலர்களைக் பாராட்டும் செயற்பாடுகள் | 15 | | 9.78 | |
| 14 | நிர்மாணிப்புச் செயற்பாடுகள் | 169.8 | 300 | 75.83 | 263.37 |
| 15 | விநியோக செயற்பாடுகள் | 40 | | 77.48 | 0.29 |
| 16 | விஷேட கருத்திட்டச் செயற்பாடுகள் | 16 | 600 | 15.2 | 429.23 |
| 17 | தொழில்சார் வழிகாட்டல் செயற்பாடுகள் | 20 | | 6.15 | |
| 18 | காணிகள் | 1 | | 0.15 | |
| | மொத்தம் | 850 | 950 | 647.99 | 746.27 |

# 4. அபிவிருத்திச் செயற்பாடுகள் - 2018

## 4.1 இளைஞர் அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்.

1. கிராமிய மட்டம் தொடக்கம் தேசிய மட்டம் வரையில் இளைஞர் யுவதிகளை ஒன்றிணைத்து இளைஞர் யுவதிகள் பல்வேறு பொதுமக்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மேற்படி அமைப்புக்களின் வலையமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அதனூடாக வழங்கப்படும் அனுபவங்களின் ஊடாக அவர்களுள் தலைமைத்துவம் மற்றும் ஆளுமை விருத்தி அவ்வாறே தேசாபிமானம் மற்றும் ஒழுக்க நெறிமுறைகள் தொடர்பான உணர்வுகளை ஏற்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல் இளைஞர் அமைப்புக்கள் அபிவிருத்திப் பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

2. இளைஞர் அபிவிருத்திக்கான பிரவேசங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பேணி வருவதற்குத் தேவையான செயன்முறை ரீதியான மற்றும் தொழிநுட்ப ரீதியான வசதிகளை வழங்கி நிலையான இளைஞர் அமைப்புக்களின் வலையமைப்பு ஒன்றாக இளைஞர் கழகங்களின் வேலைத்திட்டத்தினை வலுவூட்டல்.

3. இலங்கையில் உள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவும் தழுவப்படும் வகையில் இளைஞர் கழக வியாபாரத்தினைப் பரவச் செய்தல் மற்றும் உறுப்புரிமையினை மேம்படுத்தல்.

4. இளைஞர் கழகங்கள், பிராந்திய சபைகள், மாவட்ட சபைகள் மற்றும் தேசிய சபைகளைத் தாபித்தல் மற்றும் இளைஞர் அமைப்புக்களின் தலைவர்கள் தேசிய அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்வதற்கான பிரவேசங்களை அறிமுகம் செய்தல்.

5. தற்போதைய தகவல் தொழிநுட்ப உலகிற்குப் பொருந்தும் வகையில் இளைஞர் யுவதிகளின் திறமையினை விருத்தி செய்தல்.

6. பிரதேச மட்ட இளைஞர்கள் மற்றும் முதியோர்களை அறிவூட்டும் போதைப்பொருள் தடுப்புக் குழுவினைத் தாபித்து பொதுமக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் இணைந்த நிகழச்சித்திட்டங்களை அறிமுகம் செய்தல் என்பவற்றின் ஊடாக பொது போதைப்பொருள் எதிர்ப்பு பொதுமக்கள் நிகழச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

7. இலங்கையில் வாழும் பிரதான இனத்தவர்களான சிங்களம்,தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்களுக்கு இடையில் பரஸ்பர நட்புறவினை ஏற்படுத்துவதன் ஊடாக சந்தேகம் மற்றும் நம்பிக்கையின்மை என்பவற்றினை அகற்றி தேசிய நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்காக இளைஞர்களின் மனதில் நிலையான உளப்பாங்குகளை உருவாக்குதல்.

**இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்துள்ள இளைஞர் கழகங்கள் தொடர்பான விபரங்கள்**

| தொடரிலக்கம் | மாவட்டம் | பிராந்திய சபைகளின் எண்ணிக்கை | கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை (ஆவணங்களுக்கு அமைய ) | சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்டு உள்ள இளைஞர் கழகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | கொழும்பு | **08** | **454** | 6916 | 287 |
| 2. | கொழும்பு 1 | **08** | **103** | 2102 | 84 |
| 3. | கம்பஹா | **13** | **1177** | 22007 | 732 |
| 4. | களுத்துறை | **14** | **762** | 16009 | 597 |
| 5. | காலி | **19** | **896** | 13840 | 631 |
| 6. | மாத்தறை | **16** | **650** | 4371 | 598 |
| 7. | ஹம்பாந்தோட்டை | **12** | **576** | 8302 | 470 |
| 8. | கண்டி | **20** | **1188** | 24849 | 868 |
| 9. | மாத்தளை | **11** | **545** | 8920 | 411 |
| 10. | நுவரெலியா | **05** | **491** | 10703 | 389 |
| 11. | மொனராகலை | **11** | **319** | 7933 | 306 |
| 12. | பதுளை | **15** | **567** | 16759 | 511 |
| 13. | கேகாலை | **11** | **573** | 10228 | 444 |
| 14. | இரத்தினபுரி | **17** | **575** | 15189 | 478 |
| 15. | குருணாகல் | **30** | **1610** | 21159 | 1200 |
| 16. | புத்தளம் | **16** | **548** | 9546 | 421 |
| 17. | அநுராதபுரம் | **22** | **694** | 13597 | 543 |
| 18. | பொலன்னறுவை | **07** | **295** | 6061 | 252 |
| 19. | திருகோணமலை | **11** | **230** | 9278 | 240 |
| 20. | மட்டக்களப்பு | **14** | **348** | 17076 | 352 |
| 21. | அம்பாறை | **20** | **503** | 19130 | 482 |
| 22. | வவுனியா | **04** | **102** | 5211 | 102 |
| 23. | மன்னார் | **05** | **153** | 5099 | 155 |
| 24. | கிளிநொச்சி | **04** | **95** | 2635 | 97 |
| 25. | முல்லைத்தீவு | **06** | **136** | 4721 | 142 |
| 26. | யாழ்ப்பாணம் | **15** | **435** | 10544 | 436 |
| | **மொத்தம்** | **334** | **14025** | 292185 | 11228 |

**பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களின் எண்ணிக்கை.**




**யொவுன்புர நிகழ்ச்சியின்போது நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் - 2018**

| தொடரிலக்கம் | நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்கள் |
|---|---|---|---|
| 1. | அனர்த்த முகாமைத்துவம் மற்றும் முன் ஆயத்தமாதல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் | 01 | 125 |
| 2. | யொவுன்புர நகர சபையினைத் தாபித்தல் மற்றும் பயிற்சி (சுவெதி நகர எண்ணக்கரு) | 01 | 52 |
| 3. | யொவுன்புரவில் பங்குபற்றுபவர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அழைப்பு விடுத்தல் | 01 | 6593 |
| 4. | ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் சார் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | 05 | 1610 |

இளைஞர் அமைப்புக்கள் அபிவிருத்திப் பிரிவின் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள்.

| தொடரி லக்கம் | நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்கள் |
|---|---|---|---|
| 01 | இளைஞர் கழகங்களைத் தாபித்தல் | 11238 | 292185 |
| 02 | பிராந்திய சபைகளைத் தாபித்தல் | 334 | 33400 |
| 03 | மாவட்ட சபைகளைத் தாபித்தல் | 26 | 3900 |
| 04 | ஆலோசகர் நிருவாக சபைகளைத் தாபித்தல் | 122 | 9034 |
| 05 | தைப்பொங்கல் வைபவம் | 01 | 1100 |
| 06 | தேசிய இளைஞர் தின விழா ( E-Library கிராமத்திற்கு அறிவு) | 35 | |
| 07 | சர்வதேச இளைஞர் தின விழா | 01 | 1680 |
| 08 | இளைஞர் தலைமைத்துவ பயிற்சி முகாம் | 280 | 19143 |
| 09 | No Drugs நாங்கள் Youth ( மாவட்ட மட்டம் ) | 15 | 14500 |
| 10 | No Drugs நாங்கள் Youth ( தேசிய மட்டம் ) | 01 | 1000 |
| 11 | உள்நாட்டு இளைஞர் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டம் | 20 | 1295 |
| 12 | சுவெதி இளமை தொற்றாத நோய்களைத் தடுத்தல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் | 25 | 1292 |

## இளைஞர் அபிவிருத்திச் செயற்பாடுகளின் விஷேட கட்டங்கள்








## 4.2 தொழில்சார் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைச் செயற்பாடுகள்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தொழில்சார் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள் பிரிவின் கீழ் உள்ள சகல வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் மத்தியநிலையங்களிலும் தொழில் சார் வழிகாட்டல் உத்தியோகத்தர் ஒருவரின் கீழ் தொழில்சார் வழிகாட்டல் அலகு ஒன்று தாபிக்கப்பட்டு உள்ளது. தொழில் ஒன்றிற்குச் செல்ல விரும்பும் இளைஞர் யுவதிகளுக்கு தொழில்சார் வழிகாட்டல் மத்தியநிலையங்களின் ஊடாக அதற்காகத் தேவைப்படும் வழிகாட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் பல்வேறு உளவியல் மற்றும் வேறு பிரச்சினைகளுள்ள நபர்களுக்கு ஆலோசனை வழங்கல் மத்திய நிலையங்களின் ஊடாகத் தேவைப்படும் வசதிகள் வழங்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த மாணவர்கள், பெற்றோர்கள், முதியோர்கள் மற்றும் ஏனைய அரச மற்றும் தொண்டர் அமைப்புக்களின் உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுக்கான அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், பொருத்தமான வகையில் அந்தந்தப் பிரதேசங்களில் நடைபெறும் கண்காட்சி நடவடிக்கைகளில் பங்குபற்றுதல் மற்றும் மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றுகைகளைக் கண்காணிப்பு செய்தல்.

### 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- **“பாடசாலையில் இருந்து வேலை உலகிற்கு”** - எதிர்கால வாழ்க்கை இலக்குகளைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நாட்டில் உள்ள சகல பாடசாலைகளும் தழுவப்படும் வகையில் சிங்களம் மற்றும் தமிழ் இளைஞர் யுவதிகளுக்கான தொழில் சார் திறன்கள் பரீட்சை ஒன்றிற்கு இளைஞர்களை உட்படுத்துதல், தனது தொழில் சார் எதிர்கால இலக்கினைக் கட்டியெழுப்புதல் மற்றும் தற்கால வேலை உலகின் வாய்ப்புக்கள் மற்றும் ஈட்டிக்கொள்ள வேண்டிய பெறுபேறுகள் என்பவற்றினை அடையாளம் காணல் / புரிந்து கொள்ளல் ஆகிய துறைகள் தழுவப்படும் வகையில் அறிவூட்டப்பட்டனர்.

- தொழில் சந்தை – மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் என்பவற்றுடன் இணைந்த வகையில் முதற்தர தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் பங்களிப்பில் நடாத்தப்பட்டதுடன் அதில் ஏராளமான இளைஞர் யுவதிகள் பங்குபற்றினர்.

- Vesume – தயாரித்தல்

தற்காலத்தில் தொழில்களை வழங்கும் நிறுவனங்கள் நவீன தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி தமது சேவைத் தேவைப்பாடுளைப் பூர்த்தி செய்து கொள்வதுடன் பாரம்பரிய முறையில் சுயவிபரத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதிலும் மேலே சென்று Vesume தயாரித்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

நாட்டின் பல மாவட்டங்கள் தழுவப்படும் வகையில் Vesume தயாரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதில் சிங்களம் மற்றும் தமிழ் இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டர்.

## 4.3 விளையாட்டுத்துறை அபிவிருத்திச் செயற்பாடுகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுள் விளையாட்டுத்துறை நிகழ்ச்சித்திட்டங்கள் இளைஞர்களுக்கு மிகவும் பயனுறுதியுள்ள வகையில் 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. மொத்த இலங்கைய இளைஞர் கழக உறுப்பினர்களினதும் விளையாட்டுத்துறைத் திறன்களை கிராமிய மட்டம் தொடக்கம் தேசிய மட்டம் வரை மேலுயர்த்தி வைப்பதற்காக ஆண்டு பூராகவும் பல்வேறு விளையாட்டுத்துறை நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அதனூடாக அவர்கள் உடல் மற்றும் உள ரீதியாக ஆரோக்கியமான மற்றும் வலுவான இளைஞர் ஒருவரை உருவாக்கி அவர்களுள் தோற்றுவிக்கப்படும் இளமையின் சக்தியினை தேசிய அபிவிருத்திப் பாய்ச்சலிற்கு விடுவிக்க இயலுமாகியமை நாம் பெற்ற வெற்றியாகும்.

வருடாந்த வேலைத் திட்டத்திற்கு அமைய ஆண்டு பூராகவும் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் விளையாட்டுத்துறை அபிவிருத்திப் பிரிவின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.



01. தேசிய இளைஞர் விளையாட்டு விழா

02. இளைஞர் சேவைகள் ரூபவாஹினி வொலிபோல் போட்டித்தொடர்

03. இளைஞர் சேவைகள் விளையாட்டுக் கழகம்

04. விளையாட்டுக் குலாம்

05. பயிலுநர் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான முகாம்கள் நிகழ்ச்சித்திட்டம்

06. இளைஞர் கழகங்களுக்காக விளையாட்டுப் பொருட்களைப் பகிர்ந்தளித்தல்



07. இரவு பகல் வொலிபோல் விளையாட்டு மைதானங்களை நவீனமயப்படுத்தல்.

08. யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த வகையில் விளையாட்டுத்துறை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

09. தைப்பொங்கல் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த வகையில் விளையாட்டுத்துறை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

10. புத்தாண்டு தின வைபவத்துடன் இணைந்த வகையில் சைக்கிள் ஓட்டப் போட்டி / கயிறு இழுத்தல் / மரதன்

தேசிய இளைஞர் விளையாட்டு விழாவிற்காக 26 மாவட்டங்களும் உள்ளடங்குமாறு 10போட்டிப் பிரிவுகளில் 3598 வீரவீராங்கனைகளின் பங்குப்பற்றுகையில் போட்டிகள் நடாத்தப்பட்டன

## புதிய போட்டிச் சாதனைகள்

| போட்டிப் பிரிவு | வீரர் வீராங்கனையின் பெயர் | மாவட்டம் | புதிய போட்டிச் சாதனை |
|---|---|---|---|
| **20 வயதின் கீழ் ஆண்கள்** | | | |
| உயரம் பாய்தல் | எஸ்.ஏ.தரிந்து தசுன் | காலி | 2.12 M |
| 200 மீற்றர் | எஸ்.பி.ஏ.தர்ஷன | மாத்தளை | 21.33 sec |
| 800 மீற்றர் (ஆரம்பப் போட்டிகள்) | ஆர்.பி.ஐ.லக்ஷான் | புத்தளம் | 1:55.20 sec |
| 400 மீற்றர் | பி.எம்.பி.எல்.கொடிகார | குருணாகல் | 48.58 sec |
| **20 வயதின் மேல் பெண்கள்** | | | |
| நீளம் பாய்தல் | ஏ.புல்வன்ஸ | கொழும்பு | 5.96 M |
| **20 வயதின் கீழ் பெண்கள்** | | | |
| 100 மீற்றர் தடை தாண்டி ஓட்டம் | எண்.ஜி.பி.ஆர்.குணதிலக | கேகாலை | 15.24 sec |

## திறமை மிகு வீரர் வீராங்கனைகள்

| | | | |
|---|---|---|---|
| 20 வயதின் கீழ் பெண்கள் | முப்பாய்ச்சல் | வி.ஆர்.ஹிமாஷ குரே | நகர்ப்புற இளைஞர் |
| 20 வயதின் கீழ் ஆண்கள் | 200 மீற்றர் | எஸ்.பி.ஏ.தர்ஷன | மாத்தளை |
| 20 வயதின் மேல் பெண்கள் | 400 மீற்றர் | நதீஷா ராமநாயக்க | ஹம்பாந்தோட்டை |
| 20 வயதின் மேல் ஆண்கள் | நீளம் பாய்தல் | டபிள்யு.பி.அமில ஜயசிரி | புத்தளம் |

## - தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் விஷேட கட்டங்கள்







## இளைஞர் சேவைகள் ரூபவாஹினி வொலிபோல் போட்டித்தொடர்

### சவால்கள் வெற்றிக் கிண்ணம் (பெண்கள்)

| தொடரிலக்கம் | பெற்றுக்கொள்ளப்பட்ட இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 01 | முதலாவது இடம் | கேகாலை மாவட்டம் |
| 02 | இரண்டாவது இடம் | புத்தளம் மாவட்டம் |
| 03 | மூன்றாம் இடம் | அம்பாறை மாவட்டம் |



### சவால்கள் வெற்றிக் கிண்ணம் (ஆண்கள்)

| தொடரிலக்கம் | பெற்றுக்கொள்ளப்பட்ட இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 01 | முதலாவது இடம் | ஹம்பாந்தோட்டை மாவட்டம் |
| 02 | இரண்டாவது இடம் | கேகாலை மாவட்டம் |
| 03 | மூன்றாம் இடம் | களுத்துறை மாவட்டம் |



### சுப்பர் லீக் (ஆண்கள்)

| தொடரிலக்கம் | பெற்றுக்கொள்ளப்பட்ட இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 01 | முதலாவது இடம் | இலங்கை இராணுவப் படைகள் குழு |
| 02 | இரண்டாவது இடம் | இலங்கை வான் படைகள் குழு |
| 03 | மூன்றாம் இடம் | இளைஞர் சேவைகள் விளையாட்டுத்துறைக் குழு |

### சுப்பர் லீக் ( பெண்கள்)

| தொடரிலக்கம் | பெற்றுக்கொள்ளப்பட்ட இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 01 | முதலாவது இடம் | கெஷுவலைன் விளையாட்டுக் குழு |
| 02 | இரண்டாவது இடம் | இலங்கை இராணுவப் படைகள் குழு |
| 03 | மூன்றாம் இடம் | இலங்கை வான் படைகள் குழு |

## விளையாட்டுத்துறைக் குலாம் நிகழ்ச்சித்திட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றிகள்

23 வயதின் கீழ் வொலிபோல் (பெண்கள்) கனிஷ்டக் குலாமிற்காக சங்ஸலா நெத்மினீ வீராங்கனை தெரிவு செய்யப்பட்டு உள்ளார்.

ஆசிய கபடி விளையாட்டுப் போட்டித் தொடர் –இந்தோனேசியா

- வீரர் டபிள்யு.ஜி. நிசாந்த

சந்துனி மல்ஷா மற்றும் கே.லஷினியா என்ற பெயர்களைக் கொண்ட வீராங்கனைகள் 2018 ஆம் ஆண்டு தேசிய பெரு விளையாட்டு விழாவில் வொலிபோல் (பெண்கள்) இறுதிச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றி உள்ளனர்.

இளைஞர் சேவைகள் ரூபவாஹினி சுப்பர்லீக் வொலிபோல் போட்டித் தொடரின் ஆண்கள் பிரிவில் மூன்றாம் இடத்தினை 2018 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் குழு பெற்றுக் கொண்டது.

**இளைஞர் சேவைகள் ரூபவாஹினி வொலிபோல் போட்டித் தொடரின் விஷேட கட்டங்கள்**







## விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

| தொடரிலக்கம் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய இளைஞர்கள் |
|---|---|---|---|
| 01 | தேசிய இளைஞர் விளையாட்டுக்கள் | | |
| | பிராந்திய மட்டம் | 337 | 253410 |
| | மாவட்ட மட்டம் | 26 | 31106 |
| | தேசிய மட்டம் | 01 | 1351 |
| 02 | விளையாட்டுக் குலாம்கள் | | |
| | வொலிபோல் | 01 | 40 |
| | கபடி | 01 | 15 |
| | ஜூடோ | 01 | 15 |
| 03 | இளைஞர் சேவைகள் விளையாட்டுக் கழகம் | 01 | 1370 |
| 04 | இளைஞர் சேவைகள் ரூபவாஹினி வொலிபோல் போட்டித்தொடர் | | |
| | சவால்கள் வெற்றிக் கிண்ணம் | 20 | 3600 |
| | மாவட்ட வெற்றிக் கிண்ணம் | 24 | 288 |
| | சுப்பர்லீக் | 01 | 520 |
| | தேசிய வெற்றிக் கிண்ணம் | 01 | 112 |
| 05 | பயிலுநர் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் | 12 | 760 |
| 06 | இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டுத்துறைப் பொருட்களைப் பகிர்ந்தளித்தல் | 201 | 1472 |
| 07 | பகல் இரவு வொலிபோல் விளையாட்டு மைதானத்தினைப் பார்வையிடுதல் | 01 | 453 |
| 08 | யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த வகையில் விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் | 09 | 4110 |
| 09 | தைப்பொங்கல் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த வகையில் விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். | 03 | 518 |
| 10 | பகலவனுக்கான படைப்பு புத்தாண்டு விழாவுடன் இணைந்த வகையில் விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். | 04 | 820 |
| | | | |

## 4.4 கலைத்திறன் விருத்திச் செயற்பாடுகள்

01. தேசிய இளைஞர் விருதுகள் போட்டித்தொடர் மற்றும் வைபவம்



இலங்கையின் கலைத் துறையினைப் போஷிப்பதற்காக முதிராத கலைஞர்களான அதாவது கலைத்துறைக்கு கைநூல்களை வழங்கும் நவீன இளம் கலைஞர்களை அடையாளம் காணல், படைப்புக்களுக்கான ஒத்துழைப்பினை வழங்குதல் மற்றும் அவற்றினைப் பாராட்டிற்கு உட்படுத்துதல் என்பன மிகவும் முக்கியமாவை ஆகும். இதனூடாகத் தோன்றும் இளம் படைப்பாளிகள் எதிர்காலத்தில் கலைத்துறையினைப் போஷிப்பதற்காக சிறந்த ஒரு சேவையினை மேற்கொள்வதுடன் அது இலங்கையின் கலைத்துறையினை வளப்படுத்துவதில் உறுதுணையாக அமையும்.

இதற்காக கிராமிய மட்டத்தில் நவீன இளம் படைப்பாளிகளை அடையாளம் காணல் மற்றும் தேசிய மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்கான முறையான வேலைத்திட்டம் ஒன்றினைத் தயாரித்தல் என்பன தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கடமைப் பொறுப்பு ஒன்றாகும். இதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தேசிய இளைஞர் விருதுகள் என்ற பெயரில் படைப்பாளிகளை கௌரவிப்பிற்கு உட்படுத்தி விருதுகளை வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதுடன் அது மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டம் என்ற வகையில் 03 கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும்.

02. தேசிய இளைஞர் நாடக விழா



இளைஞர் யுவதிகளுக்கு இடையில் நாடகக் கலை தொடர்பில் ஆர்வத்தினை ஏற்படுத்தல். பிராந்திய ரீதியில் நாடகக் கலையில் ஆர்வம் காட்டும் இளம் நாடகவியலாளர்களின் திறமைகளை தேசிய மட்டம் வரையில் மதிப்பீடு செய்வதற்காக மேற்படி கருத்திட்டம் ஸ்தாபிக்கப்பட்டு உள்ளது.

## 03. கலா நிலையங்களின் அபிவிருத்தி



கலைத் துறையினை விருத்தி செய்வதன் ஊடாக நல்லதொரு சமூகத்தினைக் கட்டியெழுப்புதல் நாடொன்றின் சிறந்த பேணல் ஒன்றிற்காக கலை சார் விடயங்களுக்கு உரிய துறைகளின் கருத்திட்டங்களை மேற்கொள்ளல் என்பன மிகவும் முக்கியமானவை ஆகும். இளைஞர் சேவைகள் மன்றமானது அரச நிறுவனம் என்ற வகையில் பெல்வூட் கலா நிலையம், எரமிணியாய கலா நிலையம் மற்றும் மஹரகம கலா நிலையம் என்பவற்றில் இசை மற்றும் நடனம் ஆகிய பிரிவுகள் தழுவப்படும் வகையில் டிப்ளோமாப் பாடநெறிகளை நடாத்துகின்றது. 03 வருட கால முறையான டிப்ளோமாப் பாடநெறி ஒன்றாக கோட்பாட்டு ரீதியான மற்றும் செயன்முறை ரீதியான செயற்பாடுகளை உள்ளடக்கிய பயிற்சி ஒன்றினை வழங்குவதன் ஊடாக பயிலுநர்களின் கலை சார் அறிவினை விருத்தி செய்தல் மேற்படி கருத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

## 04. நாடக மற்றும் நடனக் கலைகள் டிப்ளோமாப் பாடநெறி

சிரேஷ்ட மற்றும் திறமை உள்ள இளம் நாடகக் கலைஞர்களை உள்ளடக்கிய விரிவுரையாளர்களின் ஆலோசனைகளின் கீழ் இளம் நாடகக் கலைஞர்கள் குழு ஒன்றிற்கு தேசிய மட்டத்திற்குச் செல்வதற்கான வழிகாட்டல்களை வழங்குதல், நாடகக் கலையில் ஆர்வம் உள்ள நாடு பூராகவும் பரந்து காணப்படும் இளைஞர் யுவதிகளின் திறன்களை விருத்தி செய்தல் என்பன இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. நடித்தல், தயாரிப்பு, படைப்பாக்கம், ஒப்பனை ஒழுங்கமைப்பு, பின்னணி ஆக்கம் ஆகிய பரந்த துறைகளின் ஊடாக அறிவினை வழங்கி கலைஞர் ஒருவரினை உருவாக்குதல் மேற்படி ஆறு மாத காலப் பாடநெறியின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

## 05. இளைஞர் நாடகக் கண்காட்சிகள்

நாடகக் கலை மீது ஆர்வம் காட்டும் பண்புள்ள குழு ஒன்றினைத் தோற்றுவித்தல் மற்றும் உயர் ரசனையுள்ளம் படைத்த குழு ஒன்றினைத் தோற்றுவித்தல், இளைஞர் விருது விழாவின் ஊடாக விருதுகளைப் பெற்ற இளைஞர் யுவதிகளினால் தயாரிக்கப்பட்ட நாடகங்களை பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்தும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பவற்றிற்காக மேற்படி கருத்திட்டம் உருவாக்கப்பட்டு உள்ளது. விஷேடமாக இளம் படைப்பாளிகளின் ஊடாக புதிய நாடக ஆக்கங்களை உருவாக்குவதற்குக் கை கொடுத்தல் மற்றும் அவர்களை கௌரவித்தல் என்பன இங்கு மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது.



## 06. தேசிய கலாச்சார நிகழ்ச்சிகள்

பல்வேறு இனங்களின் கலாச்சார விழுமியங்களை இளைஞர் சமுதாயத்தினரிடம் அறிமுகம் செய்தல் மற்றும் இனங்களுக்கு இடையில் பரஸ்பர நட்புறவினை வளர்த்தல். இலங்கை நாடானது பல்வேறு இனத்தவர்கள் வாழும் பல சமயங்களைப்

பின்பற்றும் ஒரு பல்லின நாடாகும். மேற்படி பல்வேறு இனத்தவர்களினதும் கலாச்சார விழுமியங்களும் பல்வேறுபட்டவையாகும். இனங்களினாலும் அவ்வாறே சமய மற்றும் கலாச்சார விழுமியங்களினாலும் பல்வேறு வகைப்பட்ட இந்த நாடு பண்டைய காலம் தொடக்கம் ஒத்தழைப்புடனும் நல்லிணக்கத்தடனும் ஒன்றாக இணைந்து வாழ்வதற்கு சகல இனத்தவர்களும் ஆர்வம் காட்டி வந்துள்ளனர். மேற்படி நிலைமையினை பரம்பரை பரம்பரையாக எடுத்துச் செல்லல் மிகவும் முக்கியமானது ஆகும். இதற்காக இளைஞர் யுவதிகளின் பங்களிப்பில் பல்வகைமையுடன் கூடிய கலாச்சார நிகழச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

## 4.5 கைத்தொழில் மற்றும் தொழில்சார் பயிற்சிச் செயற்பாடுகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் சகல தொழிற் பயிற்சி மத்திய நிலையங்களையும் தர முகாமைத்துவச் சான்றிதழ் கிடைக்கப்பெற்ற பயிற்சி வழங்கும் மத்திய நிலையங்கள் என்ற நிலையினை அடையச் செய்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ச்சிகளுக்கு ஏற்ப பயிற்சியினை வழங்கி தேசிய தொழிற் பயிற்சிகள் தகைமைச் சான்றிதழினைப் பெற்ற பயிற்சி பெற்ற ஊழியர்களைத் தோற்றுவித்தல்.

**<u>பாடநெறிகளின் எண்ணிக்கை</u>**

| | |
|---|---|
| NVQ | = 187 |
| Non NVQ Full Time | = 39 |
| Part Time | =228 |
| **மொத்தப் பாடநெறிகளின் எண்ணிக்கை** | **= 454** |



**<u>ஆலோசகர்களின் எண்ணிக்கை</u>**

| | |
|---|---|
| **வெளிவாரியான** | = 303 |
| **அமய** | = 28 |
| **நிரந்தர** | = 62 |
| **மொத்த ஆலோசகர்களின் எண்ணிக்கை** | **= 393** |

பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் - 2018 (மாகாண மட்டத்தில்)

| மாகாணம் | பயிற்சிப் பாடநெறிகளின் எண்ணிக்கை | ஆட்சேர்ப்புக்கள் | பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மேல் | 217 | 9842 | 7439 |
| தென் | 41 | 1459 | 1099 |
| சப்ரகமுவ | 17 | 569 | 440 |
| ஊவா | 11 | 245 | 203 |
| வடமேல் | 36 | 1994 | 1555 |
| மத்திய | 51 | 3312 | 2598 |
| வட மத்திய | 26 | 1135 | 860 |
| கிழக்கு | 42 | 1963 | 1125 |
| வன்னி | 11 | 457 | 242 |
| வடக்கு | 2 | 49 | 40 |
| *மொத்தம்* | *454* | 21025 | 15601 |

மேற்படி சகல பாடநெறிகளும் NVQ மட்டங்களுக்குரிய I,II,III,IV என்ற வகையில் வெவ்வேறாக நடைபெறும்.

இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெறும்

பாடநெறிகளுக்குரிய சந்தர்ப்பங்கள்





## 4.6 சர்வதேச இளைஞர் தொடர்புச் செயற்பாடுகள்

சிறந்த முறையில் ஒழுக்க நெறிகளைப் பின்பற்றும், இலங்கை நாட்டின் பெறுமதியினை உறுதிப்படுத்தும், சிரேஷ்ட, உலகளாவிய அறிவினால் பரிபூரணமான இளைஞர் ஒருவரை உருவாக்குவதற்காக, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சர்வதேச இளைஞர் தொடர்புகள் பிரிவின் ஊடாக இளைஞர் யுவதிகளுக்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் சிறந்த மற்றும் நம்பிக்கைக்குரிய சேவை ஒன்றினை வழங்குதல்.



❖ **2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

- சர்வதேச இளைஞர்களின் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள்
- பாகிஸ்தான் இலங்கை இளைஞர் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள்
- இந்திய இலங்கை இளைஞர் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள்
- பங்களாதேஷ் இலங்கை இளைஞர் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள்
- ஜேர்மன் இலங்கை இளைஞர் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள்



- சர்வதேச இலங்கை இளைஞர்களைப் பங்குபற்ற வைத்தல்.
- தொண்டர் ஊழியர் நிகழ்ச்சித்திட்டங்கள்
- சர்வதேச இளைஞர் கப்பல் நிகழ்ச்சித்திட்டங்கள்
- ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்குரிய இளம் தலைவர் இருவரையும் தெரிவு செய்து கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டம்
- உத்தியோகத்தர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் (சம்மேளனங்கள்/ கருத்தரங்குகள்/ பயிற்சிகள்/ செயலமர்வுகளுக்காக)
- வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பங்குபற்ற உத்தேசிக்கும் இளைஞர் யுவதிகளைப் (வெளிநாட்டுக் குலாமிலுள்ள இளைஞர் யுவதிகள்) பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்





சர்வதேச இளைஞர் தொடர்புச் செயற்பாடுகள்

| நிகழ்ச்சித்திட்டம் | உண்மையான நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | உண்மையாக பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சர்வதேச இளைஞர் தொடர்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 10 | 169 |
| வலய சர்வதேச இளைஞர் கருத்தரங்குகள் | 14 | 81 |
| சர்வதேச இளைஞர் கப்பல் நிகழ்ச்சித்திட்டம் | 02 | 267 |
| இளைஞர் பிரதிநிதி நிகழ்ச்சித் திட்டம் | 01 | 02 |
| அலுவலர்களுக்காக வெளிநாட்டுப் பயிற்சிகளை வழங்கும் செயலமர்வு | 11 | 16 |
| தொண்டர் நிகழ்ச்சித்திட்டங்கள் | 21 | 114 |
| வெளிநாட்டுக் குழாமிற்கு தெரிவு செய்யப்பட்ட இளைஞர் யுவதிகளுக்காக நடாத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு | 02 | 208 |

## 4.7 நிஸ்கோ வீடியோ செயற்பாடுகள்.

போட்டித் தன்மையான வர்த்தக உலகில் பல்வேறு சிரமங்களின் காரணமாக தமது திறமைகளின் ஊடாக பயன் பெறுவதற்கு இலங்கை இளைஞர்களுக்கு இயலாத சூழல் ஒன்று கட்டியெழுப்பப்பட்டு இருந்தது. அதற்கு அரச நிறுவனம் ஒன்றின் தலையீடு தேவையாக இருந்தது. அந்தப் பின்னணியின் அடிப்படையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நிஸ்கோ வீடியோப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

- தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இலக்கு மற்றும் நோக்கங்களுக்கு ஒத்திசையும் வகையில் நிஸ்கோ வீடியோப் பிரிவின் இலக்கிற்கு அமைய இலங்கைய இளைஞர்களின் விருத்திக்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக உரிய தத்துவத்தினைப் பயன்படுத்தி தொலைக்காட்சி மற்றும் ஊடகத் துறை தொடர்பாக இளைஞர்களை அறிவூட்டல்.
- இளைஞர் அபிவிருத்திக்காக நிறைவேற்றப்படும் பணிகளை வீடியோப் பதிவு செய்தல் மற்றும் பாதுகாத்தல்.
- ஆற்றல்களுடன் இளைஞர் யுவதிகளை தேசிய மட்டத்தில் அடையாளப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ரூபவாஹினி ஊடகத்தின் மூலம் தேசிய மட்டத்திற்கு கொண்டுவருதல்.



- இலங்கை இளைஞர்களின் பொருளாதார,சமூக,அரசியல்,உளவியல் அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை வீடியோப் பதிவு செய்து தேவையான சந்தர்ப்பங்களில் மீண்டும் பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக பாதுகாத்தல்,தேவையான சந்தர்ப்பங்களில் தேவையானவர்களுக்கு வழங்குதல்.

2018 **ஆம் ஆண்டில் நிஸ்கோ வீடியோப் பிரிவின் அபிவிருத்திச் செயற்பாடுகள்**

| **தொடரிலக்கம்** | **நிகழ்ச்சித்திட்டம்** | **நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | செய்தித் தழுவல்கள் (நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிப்பு மற்றும் தொகுப்பு) | 140 |
| 02 | 7 ஆவது இளைஞர் திரைப்பட விழா | 05 |
| 03 | ஓவிய அறைச் சுத்திகரிப்புக்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | 02 |

அவ்வாறே இளைஞர்களின் ஆக்கபூர்வமான ஆற்றல்களை விருத்தி செய்தல்,திறன்களை விருத்தி செய்தல் அவ்வாறே மேற்படி நவீன தொழிநுட்பத்தினைக் கொண்ட பொருளாதார வலுவினை விருத்தி செய்துகொள்ளக் கூடிய தொழில் வாய்ப்புக்களைக்கொண்ட ரூபவாஹினி நிகழ்ச்சித்திட்டங்களின் உற்பத்தித் தொழிநுட்பம் NVQ 5 மட்டத்திலான ஒரு வருட கால பாடநெறி ஒன்றினை உள்ளக வருமான தோற்றுவாயின் கீழ் 2017/07/21 ஆம் திகதி 33 பயிலுநர்களின் பங்களிப்பில் ஆரம்பிக்கப்பட்டது. இக்குழுவின் பாடநெறியின் நிறைவு 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆம் திகதி ஆகும்.

## 4.8 பொருளாதார ஊக்குவிப்பு மற்றும் விவசாயப் பண்ணை அபிவிருத்திச் செயற்பாடுகள்.

### i . விவசாய அபிவிருத்திச் செயற்பாடுகள்.



- நவீன தொழில்நுட்பம் மற்றும் அறிவு என்பவற்றினைப் பயன்படுத்தி சூழற் சமநிலையினைப் பேணி, வளங்களை உச்ச வகையில் பயன்படுத்தி, நிதி முகாமைத்துவத்தின் ஊடாக எதிர்கால விவசாய நிலைத்தினை வெற்றிகொள்வதற்காக இலங்கை நாட்டு இளைஞருக்கு விவசாயப் பாடநெறியின் ஊடாக அறிவினை வழங்குதல்.
- மன்றத்திற்கு உரித்தான காணிகளை அபிவிருத்தி செய்து, உள்ளக வருமானங்களை ஈட்டுதல்.

## ii விவசாயப் பண்ணைகள் அபிவிருத்தி



- 11 விவசாயப் பண்ணை மத்திய நிலையங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்.
- விவசாயப் பண்ணை உற்பத்திகளின் விற்பனைச் சந்தை ஒன்று 2018 யொவுன்புர வளாகத்தில் நடாத்தபட்டமை.
- விவசாயப் பண்ணை உற்பத்திகளின் பெறுமதியினை அதிகரிப்பதற்கான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- விவசாயப் பண்ணை உற்பத்திகளை தலைமை அலுவலகத்திற்குக் கொண்டு வந்து அலுவலர் குழாத்திற்கு விற்பனை செய்தல்.
- சுய தொழில்களுக்கான பயிற்சிகளை வழங்குதல்.

## iii . விவசாயப் பாடநெறிகள் (NVQ ).



- 10 விவசாயப் பாடநெறிகள் 10 மத்தியநிலையங்களைச் சார்ந்த வகையில் சனவரி யூன் மற்றும் யூலை டிசம்பர் என்ற வகையில் இரண்டு குழுக்களாக நடைமுறைப்படுத்தல்.
- விவசாயப் பாடநெறிகள் :- நாற்று மேடைகள் அபிவிருத்தி உதவியாளர் மற்றும் வெளிக்கள உதவியாளர் (விவசாயம்) NVQ4

## iv . பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள்

- நிகவெரட்டியவில் நடைபெற்ற யொவுன்புர நிகழச்சித்திட்டத்திற்கான சிரமதானங்கள், ஆய்வுகள், விற்பனைக் கூடங்கள் (உள்நாட்டு உற்பத்திகள்) மற்றும் மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- தேசிய உணவு உற்பத்திப் பயிர்ச்செய்கை யுத்தம்- " ஒன்றா எழுவோம், களஞ்சியக் கொட்டகைகளை நிரப்புவோம்" நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பங்களிப்பினை வழங்குதல்.
- டெங்கு ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.

**விவசாய அபிவிருத்திப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் சாராம்சம்.**

| தொடரிலக்கம் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடைபெற்ற இடங்கள் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | விவசாயப் பண்ணைகள் அபிவிருத்தி | படங்கல,எரமிணியாய,பன்னல,எதுன்கம, பூநகரி,லெவ்வேகொட,தம்புள்ள,நுவரெலியா,ஹெய்யங்துடுவ,உலபனே,தொலுவ | 11 |
| 02 | விவசாயப் பாடநெறிகள் | படங்கல,எரமிணியாய,பன்னல,தம்புள்ள, லெவ்வேகொட,மொனராகல,அக்மீமன,எதுன்கம,பூநகரி,தொலுவ | 10 |

## 4.9 திட்டமிடல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்

நிறுவனத்தின் நடவடிக்கைகளை முறையாக திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றிற்காக வழிகாட்டுவதன் ஊடாக நிறுவனத்தின் செயலாற்றுகையினை விருத்தி செய்தல்.

<u>பிரிவின் கடமைப்பொறுப்பு</u>



- திட்டங்களைத் தயாரித்தல்.
- இணைந்த திட்டங்களைத் தயாரித்தல்.
- வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல்.
- வருடாந்த செயலாற்றுகைத் திட்டங்களைத் தயாரித்தல்.
- மாவட்டத் திட்டங்களைத் தயாரித்தல்.

இளைஞர் அபிவிருத்திக்கு உரிய கருத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அங்கீகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள்.

இளைஞர் அபிவிருத்திக்கு உரிய கணக்கெடுப்புக்களை மேற்கொள்ளல் மற்றும் கணக்கெடுப்பு அறிக்கைகளைத் தயாரித்து முன் வைத்தல்.

மஹரகம மத்தியநிலையத்தின் நூலகத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் மாவட்ட மற்றும் பயிற்சி நிலையங்களுக்காக நூலகப் புத்தகங்களை வழங்குதல்.

- செயலாற்றுகை தொடர்பான நடவடிக்கைகள்
  - வாராந்த செயலாற்றுகையினைத் தயாரித்தல்.
  - மாதாந்த செயலாற்றுகையினைத் தயாரித்தல்.
  - காலாண்டு செயலாற்றுகையினைத் தயாரித்தல்.
  - பிரிவுத் தலைவர்களின் செயலாற்றுகைக் கூட்டங்களை நடாத்துதல்.
  - மாகாண உத்தியோகத்தர்களின் கலந்துரையாடலினை நடாத்துதல்.
  - வலய உத்தியோகத்தர்களின் கலந்துரையாடலினை நடாத்துதல்.
  - வருடாந்த அறிக்கைகளைத் தயாரித்தல்.

## 4.10 செயலாற்றுகை மதிப்பீடுகள் மற்றும் அலுவலர்களின் பயிற்சிச் செயற்பாடுகள்.

உள்நாட்டு மற்றும் சர்வதேச வாய்ப்புக்களைப் பயன்படுத்தி வாழ்க்கையின் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக இலங்கை நாட்டு இளைஞர்களை வலுவூட்டுவதற்காக இளைஞர் அபிவிருத்தியின் முன்னோடி என்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு தனது சேவையினை சிறந்த முறையிலும் மற்றும் நம்பிக்கைக்குரிய வகையிலும் வழங்குவதற்காக அலுவலர் குழாத்திலுள்ள உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் போது எதிர்பார்க்கப்படும் மட்டத்திற்கும் மற்றும் நிலவும் மட்டத்திற்கும் இடையில் நிலவும் இடைவெளியினை நிரப்புவதற்காக அலுவலர்களின் அறிவு, திறன்கள் மற்றும் உளப்பாங்கினை விருத்தி (மனித வள அபிவிருத்தி) செய்தல், செயலாற்றுகை மதிப்பீடுகள் மற்றும் அலுவலர்களின் பயிற்சிகள் பிரிவின் பிரதான பணியாகும்.

செயலாற்றுகை மதிப்பீடுகள் மற்றும் அலுவலர்களின் பயிற்சிகள் பிரிவானது இரண்டு பிரதான திறைசேரி ஒதுக்கீடுகள் பிரிவுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

அதாவது,

- அலுவலர் குழாத்தினரின் பயிற்சித் துறை.
- செயலாற்றுகை மதிப்பீடுகள் நிகழ்ச்சித்திட்டம் என்ற வகையிலாகும்.



அலுவலர் குழாத்தின் பயிற்சித் துறையின் அடிப்படையாக சேவையில் ஈடுபட்டு உள்ள உத்தியோகத்தர்களுக்கு அவர்களது தொழிற்துறைக்கு உரிய பயிற்சிகளை வழங்குதல் மேற்கொள்ளப்படும். இதனூடாக ஊழியர்களின் வினைத்திறன் மற்றும் விளைதிறன் என்பவற்றினை விருத்தி செய்வதன் ஊடாக நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்தகொள்ளல் அடிப்படை அபிலாஷையாகும்.

மேலும் உத்தியோகத்தர்களுக்கு அவர்களது அறிவு, திறன்கள் என்பவற்றினை விருத்தி செய்வதற்காக வெளிவாரியான நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் கல்விச் செயலமர்வுகளில் பங்குபற்றுவதற்காக பாடநெறிகளுக்கு உரிய கட்டணங்களசை செலுத்துதல் செயலாற்றுகை மதிப்பீடுகள் மற்றும் அலுவலர்களின் பயிற்சிச் செயற்பாடுகள் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும். ஒரு உத்தியோகத்தருக்காக ஆகக் கூடியது 02 இலட்சம் ரூபாவுக்கு உட்பட்ட வகையில் தனது தொழிலுக்கு உரிய பாடநெறிகளுக்காக கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் பயனுறுதி வேலைத்திட்டத்தினை ஸ்தாபிக்கும் நோக்கில் செயலாற்றுகை மதிப்பீடுகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் பிரிவின் ஊடாக பயனுறுதிகள் எண்ணக்கருவினை பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதனூடாக பயனுறுதிகள் எண்ணக்கரு தொடர்பாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் சேவையில் ஈடுபட்டு உள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டுதல், பயிற்சி அளித்தல், சேவை நிலையங்களில் பயனுறுதிகள் எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

செயலாற்றுகை மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் சேவையில் ஈடுபட்டு உள்ள உத்தியோகத்தர்களின் செயலாற்றுகையினை அளவிட்டுப் பார்ப்பதற்காகவும் மற்றும் அவர்களின் செயலாற்றுகையினை விருத்தி செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதிகூடிய செயலாற்றுகையுடனான அலுவலர்களுக்கு பரிசுகள், சான்றிதழ் பத்திரங்களை வழங்குதல் மற்றும் அவ்வாறே செயலாற்றுகை ஆகக் குறைந்த மட்டத்தில் உள்ள அலுவலர்களுக்கு அவர்களின் அறிவு,திறன்கள் மற்றும் உளப்பாங்கு விருத்தி என்பவற்றில் சிறந்த மட்டத்தித்தினை அடைந்து கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் என்பன செயலாற்றுகை மதிப்பீடுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

அவ்வாறே ஒவ்வொவ்வொரு பதவிகளுக்கும் உரிய தொழில் சார் விவரக்குறிப்புக்களைத் தயாரிப்பதன் ஊடாக அவர்களுக்கு உறுதியான வகையில் ஒப்படைக்கப்பட்டு உள்ள கடமைப் பொறுப்புக்களை அறிமுகம் செய்தல் இதன் ஊடாக மேற்கொள்ளப்படும்.

 

2018 ஆம் ஆண்டில் 32 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைப்பெற்றதுடன் 2462 உத்தியோகஸ்தர்கள் பங்குப்பற்றினர்.

## 4.11 ஊடகப் பிரிவு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சகல இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகவும் பத்திரிகைகள் / வானொலி / தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களின் மூலம் பாரிய பிரச்சாரம் ஒன்றினை வழங்குதல். கண்காட்சிக் கூடங்களை வடிவமைத்தல். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் சகல இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் இளைஞர் யுவதிகள் அறிந்து கொள்ளும் வகையில் துண்டுப் பிரசுரங்கள்/ போஸ்டர்கள்/ கட்அவுட்ஹள் உட்பட சகல ஊடகக் கலை வடிவமைப்புக்களையும் மேற்கொள்ளல்.

- .தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இளைஞர் யுவதிகளுக்காக 2018 சனவரி 01 தொடக்கம் 2018 டிசம்பர் 31 வரை வருடத்தில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் அபிவிருத்தி சார் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் அறியச் செய்தல்.
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலம் எதிர்வரும் காலத்தில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் அபிவிருத்தி சார் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக ஒட்டுமொத்த இளைஞர் சமுதாயத்தினரையும் அறியச் செய்தல்.
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினை சுற்றி இணையாத இளைஞர்களை எதிர்வரும் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்ற வைப்பதற்காக ஊக்கப்படுத்தல் ஒன்றினை மேற்கொள்ளல்.

## 1. மாவட்ட ஊடகக் கலந்துரையாடல்கள் -

மாவட்டத்தில் இளைஞர் அபிவிருத்தி இலக்குகளை நோக்கிப் பயணிக்கும் போது இலங்கைய இளைஞர்களை அறிவூட்டுதல் எமது கடமைப்பொறுப்பு ஒன்றாகும். அதற்காக மாவட்டங்களில் உள்ள சகல இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகவியலாளர்களுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணிக்கொண்டு மாவட்ட ஊடகக் கலந்துரையாடல்களை முறையாக நடாத்துவதற்குரிய திட்டங்கள் காணப்பட்டன. மேற்படி நிகழ்ச்சித்திட்டம் 26 மாவட்டங்கள் பூராகவும் நடாத்தப்பட்டன.

➢ **ஊடகப் பாடசாலைகள் (செயலமர்வுகள்)**



நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலை ஊடக அலகுகளில் உள்ள, ஊடகத் துறையில் ஆர்வம் காட்டும் வயது 15 – 20 வருடங்களுக்கு இடைப்பட்ட இளைஞர் யுவதிகளை இலக்காகக் கொண்டு பாடசாலை ஊடகச் செயலமர்வினை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. அதனூடாக ஊடகங்கள் தொடர்பாக அவர்களின் திறன்களை மெருகூட்டி அவர்களை தேசிய மட்டத்திற்குக் கொண்டுவருதல் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர்களினால் முறையான பயிற்சி ஒன்றினை வழங்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- இளைஞர் யுவதிகளுக்கு ஊடகத் துறை தொடர்பாக முறையான அறிவு ஒன்றினை வழங்குதல்.
- பாடசாலை ஊடக அலகுகளை அபிவிருத்தி செய்தல்.
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிகழ்ச்சித்திட்டங்களை தேசிய மட்டம் தொடக்கம் கிராமிய மட்டம் வரை பிரச்சாரம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அது தொடர்பான விளக்கம் ஒன்றினை வழங்குதல்.

### செயற்பாடுகள் -

❖ பாடசாலை ஊடகச் செயலமர்விற்காக பாடசாலை மட்டத்தில் இளைஞர் யுவதிகள் 200 பேர் தெரிவு செய்யப்படுவர்.

❖ ஒரு நாள் செயலமர்வு ஒன்றாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் கோட்பாட்டு ரீதியான மற்றும் செயன்முறை ரீதியான பயிற்சி ஒன்றினை வழங்குதல் மேற்கொள்ளப்படும்.

### பயனாளிகளுக்குக் கிடைக்கும் பயன்கள்



மேற்படி பயிற்சியின் மூலம் பாடசாலையில் அறிவிப்பாளர், பேச்சு ஆற்றல்கள் என்பவற்றினைக் கொண்ட மாணவர்களுக்கு அவர்களது ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குதல் அவ்வாறே இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகப் பாவனை தொடர்பான பாரிய அறிவு ஒன்றினை வழங்குதல்.

மேற்படி பயிற்சியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவினால் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை ஊடக அலகின் ஊடாக முன்னரிலும் பார்க்க முறையாக தமது ஆக்கபூர்வ ஆற்றலினை காட்சிப்படுத்துவதற்கான ஆற்றல் கிடைத்தல்.

சிரேஷ்ட ஊடகவியலாளர்களின் அறிவு மற்றும் அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தல்.

- **ஊடகச் செயலமர்வுகள் (மாகாண/தேசிய)**

ஊடகத் துறையில் ஆர்வம் செலுத்தும் நாடு பூராகவும் இளைஞர் கழகங்களில் உள்ள வயது 15-29 வருடங்களுக்கு இடைப்பட்ட இளைஞர் யுவதிகளை இலக்காகக் கொண்டு 10 மாகாணங்களில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் 12 செயலமர்வுகளும் மற்றும் அதனூடாகத் தெரிவு செய்யப்படும் திறமை மிகுந்த 100 சிங்கள இளைஞர் யுவதிகளையும் மற்றும் 50 தமிழ் இளைஞர் யுவதிகளையும் இணைத்துக்கொண்டு 02 தேசிய ஊடகச் செயலமர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. மேற்படி கருத்திட்டத்தின் மூலம் இளைஞர் யுவதிகளின் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்கள் தொடர்பான அறிவு, திறன்கள் மற்றும் உளப்பாங்குகளை சிரேஷ்ட வளவாளர்களின் ஊடாக கோட்பாடுகள் மற்றும் செயன்முறை ரீதியாக அபிவிருத்தி செய்வதும் அதன் பின்னர் அவர்களை இந்நாட்டின் ஊடாக நிறுவனத்திடம் அறிமுகம் செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- நாடு பூராகவும் இளைஞர் கழகங்களில் உள்ள ஊடகத் துறையில் ஆர்வம் செலுத்தும் இளைஞர் யுவதிகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு ஊடக விடயம் தொடர்பாக கோட்பாடுகள் மற்றும் செயன்முறை ரீதியான அறிவினை வழங்குதல்.
- இலங்கை ஊடகத் துறைக்கு திறமை மிகு ஊடகவியலாளர் குழு ஒன்றினைத் தோற்றுவித்தல்.
- .தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினை சுற்றி இணையாத இளைஞர்களை நிறுவனத்தின் எதிர்வரும் இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்ற வைப்பதற்குத் தேவையான சூழல் ஒன்றினை மேற்படி பயிலுநர்களின் ஊடாக உருவாக்குதல்.
- மாகாண ஊடகச் செயலமர்வுகளில் பங்குபற்றும் இளைஞர் யுவதிகளினால் உரிய மாவட்டங்களில் இளைஞர் கழக உறுப்பினர்களுக்கு ஊடகங்கள் தொடர்பான பயிற்சி ஒன்றினை வழங்குதல்.

## 4.12 தகவல் தொழிநுட்பச் செயற்பாடுகள்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தகவல் தொழிநுட்ப அபிவிருத்திப் பிரிவின் ஊடாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சகல தகவல் தொழிநுட்பத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்படி பிரிவு தாபிக்கப்பட்டு உள்ளது. மேற்படி தேவைப்பாடுகளுள்,

01. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகளை நவீன தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி நிறைவேற்றுவதற்காக தேவையான தொழிநுட்ப வசதிகளை விருத்தி செய்தல்.
02. வினைத்திறன் மிக்க தொடர்பாடல் செயன்முறை ஒன்றினை அமைப்பதன் ஊடாக இலங்கை இளைஞர்களுக்கு வினைத்திறன் மிக்க தகவல் தொடர்பாடலினை வழங்குதல்.

03. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல் என்பவற்றின் ஊடாக தகவல்களை விரைவாக வழங்குதல்.
04. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நிலவும் கணனி வலையமைப்புக் கட்டமைப்பினைப் பராமரித்தல் மற்றும் பேணி வருதல் மற்றும் இற்றைப்படுத்தல்.
05. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் கழகங்கள் / பயிற்சி நிலையங்கள் என்பவற்றில் இளைஞர் யுவதிகளின் தகவல் தொழிநுட்பப் பாவனை மற்றும் பாதுகாப்பு என்பன தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

சமூக வலையமைப்புக்களின் பாவனை தொடர்பாக உரிய முறையிலான தெளிவு மற்றும் அறிவின்றி அதனைப் பயன்படுத்துவதன் ஊடாக தற்போதாகும் போது உலகில் ஏனைய நாடுகள் போன்றே எமது நாட்டிலும் ஏராளமான இளைஞர்கள் அவர்களது வாழ்க்கையினை இழந்து வருகின்றனர். அதனை அடிப்படையாகக் கொண்டு எம்மால் ஏற்பாடு செய்யப்பட்ட சமூக வலையமைப்புப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரிய நிகழ்ச்சித்திட்டங்கள் ஆறு மாவட்டங்கள் தழுவப்படும் வகையிலும் மற்றும் 334 பிரதேச செயலாளர் பிரிவுகள் தழுவப்படும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இளைஞர் சமுதாயத்தினரிடையே தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் திறன்கள் (ICT) தொடர்பான அறிவினைப் பயன்படுத்தி முன்னுரிமையினை அடிப்படையாகக் கொண்டு ஈ-கற்பித்தல் செயன்முறையின் ஊடாக தொழில் முயற்சியாண்மைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், தெரிவு செய்யப்பட்ட 20 இடங்கள் / பயிற்சி நிலையங்களில் 20 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இணையத்தளம் www.nysc.lk இனைப் பயன்படுத்துவதன் ஊடாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வரலாற்றுக் காலம் தொடக்கம் இது வரையான தகவல்களையும் தலைமை அலுவலகத்தின் சகல பிரிவுகள் / மாவட்ட அலுவலகங்கள்/ மாகாண அலுவலகங்கள் மற்றும் பயிற்சி நிலையங்கள் என்பவற்றின் தகவல்களையும் அவ்வாறே பயிற்சி நிலையங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் சகல பாடநெறிகள் தொடர்பான தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கு இலகுவான வகையில் மும்மொழிகள் இணையத் தளத்தினை செயற்படும் நிலையில் பேணி வருதல்.



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இணையத்தளப் பக்கத்தில் உள்ளடக்கப்பட்டு உள்ள ஊழியர்களின் தகவல் கட்டமைப்பின் கீழ் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு உரிய சகல இளைஞர் கழகங்களினதும் செயற்பாட்டு உறுப்பினர்களுக்கு சகல தகவல்களையும் உள்ளடக்கிய வகையில் 60,000 இற்கும் மேற்பட்ட தரவுக் கட்டமைப்பு ஒன்றினைப் பேணி வருதல் மற்றும் பராமரித்தல்.

# 4.13 பரீட்சைகள் மற்றும் மதிப்பீடுகள் பிரிவு.

## பிரதான கடமைப்பொறுப்பு

- ❖ நாடு பூராகவும் உள்ள 54 மத்திய நிலையங்களிலும் 64 பாடநெறிகளுக்காக ஆண்டு ஒன்றிற்கு இரண்டு முறை (ஆறு மாதங்களுக்கு ஒரு முறை) முழு நேர மற்றும் பகுதி நேர அடிப்படையில் NVQ மற்றும் NON NVQ கிட்டத்தட்ட 20000 எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு செயன்முறை மற்றும் எழுத்து மூல இறுதிப் பரீட்சைகளை மறையாகவும் மற்றும் ஒழுங்கு முறையிலும் நடாத்துதல் பிரதான பணியாகும்.
- ❖ இறுதிப் பரீட்சையினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் மூன்று மாதங்கள் கழியும் முன்னர் பரீட்சைப் பெறுபேறுகளை மத்திய நிலையத்திற்கு வழங்கி சித்தியடைந்த பயிலுநர்களுக்கு மாகாண, மாவட்ட மற்றும் மத்திய நிலைய மட்டத்தில் NVQ மற்றும் Non NVQ சான்றிதழ்களை மிகவும் விரைவாகவும் முறையாகவும் வைபவ ரீதியாக பகிர்ந்தளித்தல் மேற்கொள்ளப்படும்.
- ❖ பாடநெறிகளின் இறுதிப் பரீட்சைகள் பூர்த்தி அடைந்ததன் பின்னர் பயிலுநர்கள் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பயிற்சி ஒன்றிற்கு (OJT) அனுப்பப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு தொழில்களில் ஈடுபடுத்தப்பட்ட பயிலுநர்களின் மொத்தச் செயலாற்றுகைகளை மத்திய நிலைய மட்டத்தில் முழுமையாக மேற்பார்வை செய்யும் நடவடிக்கைகளை நாம் முறையான வகையில் நிறைவேற்றி வருகின்றோம்.



- ❖ தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படும் தேர்ச்சிகளை அடிப்படையாகக்கொண்ட பாடநெறிகளுக்காக மதிப்பீடுகளை நடாத்தி தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் தேசிய தொழில்சார் தகைமைகளைக்கொண்ட சான்றிதழ்களை ( NVQ Certificate ) வழங்குதல்.
- ❖ அதனூடாக தொழில்சார் தேர்ச்சிகளைப் பூர்த்திசெய்யும் இளைஞர் யுவதிகளுக்கு மிகவும் விரைவில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தினை வழங்குதல் மேற்கொள்ளப்படும்.
- ❖ தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மத்தியநிலையங்களில் உள்ள சகல பாடநெறிகளுக்குமாக ஒரு பொதுவான பாடத்திட்டத்தின் கீழ் கற்பிப்பதற்காக பாடத்திட்டங்களின் அபிவிருத்தியும் எமது பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.
- ❖ தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பயிற்சிப் பாடநெறிகள் நடைபெறும் சகல மத்தியநிலையங்களிலும் பிள்ளைகளுக்கான தொழில்சார் வழிகாட்டல்களை வழங்குவதற்காக ஆலோசகர்களைப் பயிற்றுவித்தல்.

2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரம்

| தொடரிலக்கம் | நிகழச்சித்திட்டத்தின் பெயர் | பங்குபற்றியவர்கள் | |
|---|---|---|---|
| | | முதலாவது காலாண்டு | இரண்டாவது காலாண்டு |
| 1. | செயன்முறைப் பரீட்சைகளை நடாத்துதல் | 9834 | 9718 |
| 2. | பாடநெறிகள் பூர்த்தியடைந்த பின் பரீட்சைகளை நடாத்துதல் | 9834 | 9718 |
| 3. | சான்றிதழ்களை வழங்குதல் | 6970 | 6866 |
| 4. | NVQ இறுதி மதிப்பீட்டு நடவடிக்கைகள் | 843 | 711 |

| | | | |
|---|---|---|---|
| 5. | NVQ எழுத்து மூலப் பரீட்சை | 1021 | 1098 |
| 6. | NVQ சான்றிதழ்களை வழங்குதல் | 810 | 600 |
| 7. | OJT நிகழ்ச்சித்திட்டம் | 1523 | 1753 |

## 4.14 விஷேட கருத்திட்டங்கள் பிரிவு.

- ❖ 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தின் இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டு உள்ள அ,ஆ,இ,ஈ,உ,ஊ,ஏ,ஐ,ஒ,ஓ,ட ஆம் பிரிவுகளுடன் நேரடியாகத் தொடர்புரும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்திட்டங்களைத் திட்டமிடல் / ஏற்பாடு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் மேற்படி பிரிவின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. விஷேடமாக
- ❖ இளைஞர் பாராளுமன்றம்
- ❖ யொவுன்புர
- ❖ துருணு கிராம சக்தி மக்கள் அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் விஷேச இளைஞர் தெரிவு
- ❖ விஷேட இசைக் குழு மற்றும் விஷேட நடனக் குழு பராமரித்தல்

இதனூடாக,

- ❖ நாட்டின் அபிவிருத்தி மற்றும் அரச கொள்கைகளைத் தயாரிக்கும் போது இளைஞர்களின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல்.
- ❖ தொண்டர் சேவை, மற்றும் சமூக வேலைகள் தொடர்பான உளப்பாங்கு மற்றும் திறன் என்பவற்றினை விருத்தி செய்தல்.
- ❖ தலைமைத்துவத்தினைக் கட்டியெழுப்பும் போது பல்வேறு செயற்பாடுகள் மற்றும் பொதுமக்கள் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- ❖ விஷேட ஆற்றல்களைக்கொண்ட இளைஞர் யுவதிகளை தேசிய மட்டத்திற்குக் கொண்டு வருதல்.
- ❖ இசை மற்றும் நடனத் துறையில் திறமைகளை வெளிக்காட்டும் கலைஞர்களை சிறந்த கலைஞர்களாக நாட்டிற்கு ஒப்படைத்தல்.

என்பன மேற்கொள்ளப்படுவதுடன், நிறுவனத்தின் முதன்மையான நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்துகின்ற, சிறந்து விளங்கும் ஒரு பிரிவாக கடமையினை நிறைவேற்றி வருகின்றது.

<u>2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்</u>

I. இளைஞர் பாராளுமன்றம்
II. இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டம்
III. Youth with Talent பொதுமக்கள் அபிவிருத்திக் கருத்திட்ட நிகழ்ச்சித்திட்டம்
IV. Youth with Talent ரியலிட்டி நிகழ்ச்சித்திட்டம்
V. யொவுன்புர
VI. விஷேட இசைக் குழு.
VII. விஷேட நடனக் குழு.

## இளைஞர் பாராளுமன்றம்- 2018

அரச கொள்கைகளை ஆக்கும்போதும் மற்றும் திட்டமிடும்போதும் இளைஞர்களுக்காக வாய்ப்புக்களை வழங்குதல்,சனநாயக முறைகள் தொடர்பாக செயன்முறை அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குதல்,பல்வேறு இனங்களுக்கு பல்வேறு கருத்துக்களையும்,எண்ணங்களையும் ஏற்று இணக்கப்பாட்டுடன் கலந்துரையாடலின் ஊடாக நல்லிணக்கத்தினைக் கட்டியெழுப்பி எதிர்கால இளம் அரசியல் தலைவர்களைத் தோற்றுவித்தல் என்பன இலங்கை இளைஞர் பாராளுமன்றத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

- கூட்டிணைவு - 225 உறுப்பினர்கள்
- பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் - 160
- நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் - 65

## யொவுன்புர நிக்கவெரட்டிய

இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தின் இளைஞர் கழகங்களைச் சுற்றி இணைந்துள்ள இளைஞர்களின் ஆளுமை விருத்திக்காக தலைமைத்துவச் செயலமர்வுகள், இளைஞர் முகாம்கள், இளைஞர் சந்திப்பு அமைப்புக்கள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்படும். மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் தேசிய மட்டத்தில் ஏற்பாடு செய்யப்படும் தேவைப்பாடு தோன்றும். அதற்காக, இலங்கை நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாடு என்பன தொடர்பாக புரிந்துணர்வு ஒன்றினைப் பெற்றுக்கொள்ளவும், இளைஞர் அபிவிருத்தித் துறையின் நடவடிக்கைகள் தொடர்பாக வெளிநாட்டு இளைஞர் யுவதிகளுடன் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளவும், பரஸ்பர புரிந்துணர்வின் ஊடாக ஒற்றுமை மற்றும் சகவாழ்வு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடவும், தேசிய அபிவிருத்தி தொடர்பாக இளைஞர் சமுதாயத்தினரிடையே பல்வேறு விவாதங்களை ஏற்படுத்தி கருத்துக்களையும் மற்றும் முன்மொழிவுகளையும் பெற்றுக்கொள்வதற்கும் யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இளைஞர் கழக உறுப்பினர்கள் 6710 ஆகும்.





**<u>யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தினைச் சார்ந்த வகையில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்.</u>**



- யொவுன்புர நகரசபை
- விளையாட்டுப் போட்டிகள்
- கல்வி நிகழ்ச்சிகள்
- கலாச்சாரப் போட்டிகள்
- தலைமைத்துவப் பயிற்சிகள்
- வெளிக்கள தலைமைத்துவப் பயிற்சி
- சிரமதான நிகழ்ச்சிகள்
- தீ மலை
- மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள்
- தொழில் முயற்சியாண்மை நிகழ்ச்சித் திட்டங்கள்
- ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள்
- இசை மற்றும் கலாச்சாரக் கண்காட்சிகள்
- கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சி

**<u>துருணு ஷ்ரம சக்தி மக்கள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 3000 நிகழ்ச்சித்திட்டம்</u>**

இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள், கிராமிய மற்றும் நகர மக்கள் முகங்கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளை அடையாளங் கண்டு, அவற்றிற்கு தீர்வுகளைக் காணவும், நாட்டின் பொருளாதாரத்தினை வலுப்படுத்தும் பணியில் இளைஞர்களின் கடமைப் பொறுப்பு தொடர்பாக இளைஞர்களில் புரிந்துணர்வு அவ்வாறே, அவற்றிற்கு செயலூக்கத்துடனான பங்களிப்பினை வழங்குவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் இளைஞர் கழகங்களின் இளைஞர் யுவதிகளுக்கு இடையில்,போட்டித்தன்மை மற்றும் வெற்றி தொடர்பான உணர்வினை ஊக்குவிப்பதற்கும் மேற்படி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

## <u>கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் துறைகள்</u>

1. பொது மக்கள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்
2. சுற்றாடல் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக் கருத்திட்டங்கள்
3. தொழிநுட்ப மற்றும் புத்தாக்கக் கருத்திட்டங்கள்
4. பொருளாதார மற்றும் தொழில் உருவாக்கக் கருத்திட்டங்கள்
5. விவசாய மற்றும் நீர்ப்பாசனக் கைத்தொழில் கருத்திட்டங்கள்
6. பிரதேசத்திற்கு விஷேடமான சிறந்த கருத்திட்டங்கள்

## நோக்கங்கள்

1. இளைஞர் யுவதிகளுக்கு செயன்முறை ரீதியில் தனது தலைமைத்துவ ஆற்றலினை தொண்டர் சேவையின் ஊடாக கிராமிய மற்றும் நகர அபிவிருத்திக்காக அர்ப்பணிப்பதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குதல்.
2. கிராமிய மற்றும் நகர இளைஞர்களுக்கு சமூகத்தில் வரவேற்பு ஒன்றினையும் மற்றும் பெறுமதி ஒன்றினையும் பெற்றுக்கொடுத்தல்.
3. இளைஞர் கழகங்களை வலுப்படுத்தல் மற்றும் இளம் தலைவர்களை ஊக்குவித்தல்.
4. நாடு பூராகவும் உள்ள இளைஞர் கழகங்களை சார்ந்த வகையில் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக, கிராமிய மக்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல்.
5. கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது பௌதீக மற்றும் மனிதவள முகாமைத்துவத்தினை மேற்கொண்டு, குறிப்பிட்ட காலப்பகுதியில் வினைத்திறனுடன் தனது கடமைப்பொறுப்பினைப் பூர்த்தி செய்வதற்கும் மற்றும் பின்னாய்வு செய்வதற்கும் பழக்கப்படுத்துவதன் மூலம், ஆக்கபூர்வமான இளைஞர் சமுதாயம் ஒன்றினை நாட்டிற்கு ஒப்படைக்கச் செய்தல்.

**2016-2018 கருத்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட நிதியுதவிகள்**

| ஆண்டு | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | கருத்திட்டம் ஒன்றிற்கு வழங்கப்பட்ட தொகை | பெறுமதி |
|---|---|---|---|
| 2016 | 1500 | ரூ.75,000.00 | ரூ.மில்லியன் 112.50 |
| 2017 | 3000 | ரூ.150,000.00 | ரூ.மில்லியன் 450.00 |
| **2018** | **1000** | **ரூ.300,000.00** | **ரூ.மில்லியன் 300.00** |

## துருணு ஷ்ரம சக்தி பொதுமக்கள் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் வெற்றிகள்

முதலாவது - குருணாகல்



முடிவுப் பெறுமதி ரூ.9,630,000.00

இரண்டாவது –நுவரெலியா



முடிவுப் பெறுமதி ரூ. 3,750,000.00

மூன்றாவது –மாத்தளை



முடிவுப் பெறுமதி ரூ.4,582,548.50

## Youth With Talent Show - 2018
## (விஷேட இளைஞரைத் தெரிவு செய்வதற்கான போட்டி)



விஷேட திறமைகளைக்கொண்ட இளைஞர் யுவதிகளை அடையாளம் கண்டு மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் போட்டிகளை நடாத்தி அவர்களின் திறமைகளை மேலும் மெருகூட்டி தேசிய மட்டத்திற்கு உயர்த்தி வைத்தல் இதன் நோக்கமாகும்.

❖ தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு என்பன இணைந்து ஏற்பாடு செய்யப்படுகின்றது.

❖ இதனூடாக மேற்படி திறமைகள் நிறைந்த இளைஞர்களின் பொருளாதார மற்றும் சமூக மட்டம் விருத்தி செய்யப்படும்.

## விஷேட இசைக்குழு



இசை சார் விடயம் தொடர்பாக விஷேட ஆற்றல்கள் மற்றும் திறைமைகளைக் காட்டும் இளைஞர் யுவதிகளின் திறமைகளை விருத்தி செய்து கண்காட்சிக்காக முன்வைத்தல்.

### நோக்கங்கள்

- இசை தொடர்பான திறமைகளைக்கொண்ட இளைஞர் யுவதிகளை தேசிய மட்டத்தில் அறிமுகம் செய்தல்.
- அவர்களுக்கு போட்டித்தன்மையான நுழைவுகளில் தனது திறமையினை வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- பொருளாதார அபிவிருத்தியின் ஊடாக மேற்படி இளைஞர் யுவதிகளின் எதிர்காலத்தினை வெற்றி கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- இசையின் பெறுமதியினை பாதுகாத்துக் கொள்வதற்கு நவீன இளைஞர் சமுதாயத்தை ஊக்குவித்தல் மற்றும் ஆன்மீக விருத்தி ஒன்றினை ஏற்படுத்தல்.
- தரமான நவீன இசைகளின் ஆக்கங்களை உருவாக்குவதன் ஊடாக சர்வதேசத்தினை வெல்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- அரச மற்றும் அரச சார்பற்ற வைபவ நிகழ்வுகளுக்காக இசைக் குழுவினை வழங்குவதன் ஊடாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு வருமானத்தினை ஈட்டுக்கொடுக்கும் ஊடகமாக செயற்படுதல்.

## <u>விஷேட நடனக் குழு</u>

நடன விடயங்கள் தொடர்பாக விஷேட ஆற்றல்கள் மற்றும் திறைமைகளைக் காட்டும் இளைஞர் யுவதிகளின் திறமைகளை விருத்தி செய்து கண்காட்சிக்காக முன்வைத்தல்.

### நோக்கங்கள்



- நடனம் தொடர்பான திறமைகளைக்கொண்ட இளைஞர் யுவதிகளை தேசிய மட்டத்தில் அறிமுகம் செய்தல்.
- அவர்களுக்கு போட்டித்தன்மையான நுழைவுகளில் தனது திறமையினை வெளிப்படுத்த சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- பொருளாதார அபிவிருத்தியின் ஊடாக மேற்படி இளைஞர் யுவதிகளின் எதிர்காலத்தினை வெற்றி கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- நடனத்தின் பெறுமதியினை பாதுகாத்துக் கொள்வதற்கு நவீன இளைஞர் சமுதாயத்தை ஊக்குவித்தல் மற்றும் ஆன்மீக விருத்தி ஒன்றினை ஏற்படுத்தல்.
- சிறந்த தரத்தினைக்கொண்ட புதிய நடன ஆக்கங்களை உருவாக்குவதன் மூலம் சர்வதேசத்தினை வெல்வதற்கான சந்தர்ப்பத்தினை உருவாக்கிக் கொடுத்தல்



- அரச மற்றும் அரச சார்பற்ற வைபவ நிகழ்வுகளுக்காக நடனக் குழுவினை வழங்குவதன் ஊடாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு வருமானத்தினை ஈட்டுக்கொடுக்கும் ஊடகமாக செயற்படுதல்.

.

## 4.15 இளைஞர் விருது வழங்கல் அதிகார சபை.

1956 ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சியத்தின் எடின்பரோ பிரபு சர்வதேச விருது வழங்கல் மன்றத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட எடின்பரோ பிரபு சர்வதேச விருது வழங்கல் நிகழ்ச்சித்திட்டம் 1980 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் 13-24 வயதிற்கு இடைப்பட்ட இளைஞர் யுவதிகளுக்காக அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்துதல் தேசிய இளைஞர் விருது வழங்கல் பிரிவின் பிரதான பணியாகும்.

கல்வி அமைச்சினதும் மற்றும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினதும் அனுமதியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் மேற்படி நிகழ்ச்சித்திட்டம், அரச பாடசாலைகள், கல்வியியல் கல்லூரிகள், இளம் குற்றவாளிகளின் சீர்திருத்த நிலையங்கள், சிறுவர் இல்லங்கள், அங்கவீனர்கள் மற்றும் விஷேட பாடசாலைகள் மற்றும் திறந்த விருது வழங்கல் அலகுகள் என்பவற்றை சார்ந்த வகையில் இளைஞர் யுவதிகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும்.




அதற்காக இளைஞர் யுவதிகளை நான்கு செயற்பாடுகளில் ( தொண்டர் சேவை, திறன்கள் இரசனை,உடற்றகைமைகள் மற்றும் சவாலுக்குரிய சுற்றுலா) குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஈடுபடுத்தி மேற்படி செயற்பாடுகளை மதிப்பீடுகளுக்கு உட்படுத்தி வெண்கலம், வெள்ளி, தங்கம் என்ற வகையில் தேசிய விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். அதன்போது அவர்களின் சுய விருத்தியில் பாதிப்புச் செலுத்தும் தலைமைத்துவப் பண்புகள், விழுமியங்கள், சுற்றாடல் கூருணர்வுகள், திறன்கள், பரஸ்பர தொடர்புகளின் அபிவிருத்தியின் ஊடாக ஏற்படும் ஆளுமை விருத்தி மற்றும் தனிநபர் விருத்தி என்பவற்றின் அபிவிருத்திக்கு மிகவும் உறுதுணையாக அமையும். அவ்வாறான தனியாள் விருத்தியின் ஊடாக ஈட்டிக்கொள்ளப்படும் இளைஞர்களின் சக்தியினை நாட்டை அபிவிருத்தி செய்யும் பணியில் பங்களிப்புச் செய்ய வைத்தல் மறைமுகமாகக் கிடைக்கும் விஷேட பயன் ஒன்றாகும்.



பல்கலைக்கழக நுழைவின் போது பொதுவான நுழைவின் கீழ் தெரிவு செய்யப்படாத மாணவர்கள் க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றும் காலப்பகுதியில் இளைஞர் விருது வழங்கல் பிரிவின் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படும் மேற்படி விருதினைப் பூர்த்தி செய்திருப்பின் பல்கலைக்கழக நுழைவின் போதும் மற்றும் கல்வியியல்கல்லூரிகளுக்கான நுழைவின் போதும் அவர்களுக்காக விருப்பப் புள்ளிகளை வழங்குவதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு சட்டரீதியான அனுமதியினை வழங்கி உள்ளது.

**2018வருடத்தில் செயற்படுத்தப்பட்ட 37நிகழ்ச்சிகளில் பங்குப்பற்றுகை 3211 ஆகும்**

## 4.16 இளைஞர் கூட்டுறவு மற்றும் வியாபாரங்கள் மற்றும் அபிவிருத்திப் பிரிவு.

இலங்கையில் இளைஞர் சமுதாயத்தின் பொருளாதார ஸ்திரமற்ற தன்மையினை குறைத்துக்கொள்வதற்கான வழிகாட்டல்களை வழங்கி தொழில் முயற்சியாளர்களின் கலாச்சாரம் ஒன்றினை நாட்டில் கட்டியெழுப்புவதற்கான முன்னோடி நிறுவனம் ஒன்று என்ற நிலையினை அடைதல்.

உச்சளவிலான வினைத்திறனுடன் அறிவு, உளப்பாங்குகள் மற்றும் தேர்ச்சிகள் நிறைந்த ஊழியர்கள் சபை ஒன்றினால் பல்வேறு உற்பத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு சேவைகளை வழங்குவதற்காக இளைஞர் கூட்டுறவு வலையமைப்பினை தரமான வகையிலும்,போதுமான வகையிலும் மற்றும் நிலையான வகையிலும் அபிவிருத்தி செய்தல் எமது செயற்பணி ஆகும்.

### 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்



- தொழில்முயற்சியாண்மை ஒருநாள் நிகழ்ச்சித்திட்டம்.
பங்குப்பற்றுகை -4408 நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை -26

- தொழில்முயற்சியாண்மை ஒருநாள் நிகழ்ச்சித்திட்டம்.
பங்குப்பற்றுகை -438 நடாத்தப்பட்ட --- --
நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை -16

-நிஸ்கோ மாவட்ட சங்கங்களின் செயலாற்றுகை மீளாய்வுகள் –. பங்குப்பற்றுகை 47

-சுயதொழில் தொழிநுட்பப் பயிற்சிகள் நிகழ்ச்சித்திட்டம் - பங்குப்பற்றுகை 122
நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை - 05

நிஸ்கோ பணிப்பாளர்கள் சபை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - பங்குப்பற்றுகை 85

நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை - 04



மேலே குறிப்பிடப்பட்டு உள்ள நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் ஊடாக சுயதொழில்கள் தொடர்பில் இளைஞர் யுவதிகளுக்கு ஆர்வமூட்டுதல் மற்றும் மேற்படி வருடத்தில் முன்வைக்கப்பட்ட கடன் பயனாளிகள்

I. நிஸ்கோ சங்கத்தின் மூலம் ரூ.: 5000.00 தொடக்கம் 350,000.00 வரையில் கடன் வழங்கப்பட்டு உள்ள பயனாளிகள் - 27 ரூ:920,000.00 தொகை கடன் வழங்கப்பட்டு உள்ளது.

II. தொழில் முயற்சியாண்மை நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தபட்டதன் பின்னர் சுயதொழில்களுக்காக ரூ: 500,000.00 கடன் வழங்கப்பட்ட பயனாளிகள் - 08 தொகை- ரூ: 4,000,000.00

III. வியாபாரத் தொழிநுட்பப் பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் 16 மாவட்டத்தில் நடாத்தப்பட்டு 438 தொழில் முயற்சியாளர்களுக்கு பயிற்சிகளை வழங்கி சுயதொழில் தொடர்பாக ஆர்வமூட்டப்பட்டு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

IV. சுயதொழில் தொழிநுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி 122 சுயதொழிலாளர்களைத் தோற்றுவித்தல்.

# 5. நிருவாகப் பிரிவின் செற்பாடுகள் - 2018

## 5.1 தாபன நடவடிக்கைகள்.

### 2018.01.01 தொடக்கம் 2018.12.31 ஆம் திகதி வரையான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிருவாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட கடமைப்பொறுப்புக்கள்

1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தேவையாள ஆளனியினரை ஆட்சேர்ப்புச் செய்வதன் கீழ் தாபனப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள கடமைப் பொறுப்பிற்கு அமைய 2018 ஆம் ஆண்டிற்குள் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டு உள்ளன. எனினும் இடமாற்றங்கள், ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்கு அமைய சேவை நீக்கல்கள்,பதவியினை விட்டு விலகிச் செல்லல், சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள், பதவியிலிருந்து ஓய்வு பெறச் செய்தல், மற்றும் பதவியனை இராஜினாமாச் செய்தல் என்பன முன்னைய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வகையிலேயே மேற்கொள்ளப்பட்டு உள்ளன. அனுமதிக்கப்பட்ட ஆளனி மற்றும் வெற்றிடம் நிலவும் ஆளனி என்பன தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டு உள்ளன.

- **புதிய ஆட்சேர்ப்புக்கள் (நிரந்தர)**

2018 ஆம் ஆண்டிற்காக கீழே குறிப்பிடப்பட்டு உள்ள புதி ஆட்சேர்ப்புக்கள் 11 (பெண் இல்லப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் 6 பேர் மற்றும் சாரதிகள் 05 பேர்) மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

- **புதிய ஆட்சேர்ப்புக்கள் (அமய)**

புதி ஆட்சேர்ப்புக்கள் 02 (உ.இ.சே.உ. -01 மற்றும் முகாமைத்துவ உதவியாளர் 01) மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

- **புதிய ஆட்சேர்ப்புக்கள் (ஒப்பந்த)**

புதி ஆட்சேர்ப்புக்கள் 10 (ஆலோசகர்- 10) மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

- **தொடர்பாடல் மற்றும் தகவல் தொழிநுட்பம்**

  புதி ஆட்சேர்ப்புக்கள் 01 (ஆலோசகர்- 01) மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

- **கணினி ஓவியர் வடிவமைப்பு**

புதி ஆட்சேர்ப்புக்கள் 01 (ஆலோசகர்- 01) மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

- **ஒப்பனை மற்றும் சிகை அலங்காரக் கலைஞர்**

புதி ஆட்சேர்ப்புக்கள் 01 (ஆலோசகர்- 01) மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

- **மோட்டார் வாகனத் தொழிநுட்பவியலாளர்**

புதி ஆட்சேர்ப்புக்கள் 02 (ஆலோசகர்- 02) மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

- **பதவியுயர்வுகளை வழங்குதல்**

இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் தரம் 1 இலுள்ள உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டு உள்ளன. அதாவது, இது சிரேஷ்ட இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்கள் 32 பேர்களுக்காக ஆகும்.

- **அமய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குதல்**

அமய ஊழியர்களுக்கு 20 நிரந்தர நியமனங்கள் (பெண் இல்லப் பொறுப்பு உத்தியோகத்தர் 02 உம் அலுவலகப் பணியாளர் 17 பேரும் சமையற்காரர் -01) வழங்கப்பட்டு உள்ளன.

- **ஓய்வு பெறச் செய்தல்கள்**

38 உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறச்செய்யப்பட்டனர்.

- **சேவையினை இராஜினாமாச் செய்தல்**

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டிலும் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள 50 உத்தியோகத்தர்கள் மன்றத்தின் சேவையினை இராஜினாமா செய்துள்ளனர்.

- **பதவியினை விட்டு விலகிச் செல்லல்**

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 09 உத்தியோகத்தர்கள் 2018 ஆம் ஆண்டில் பதவியினை விட்டு விலகிச் சென்றதாகக் கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

- **மீண்டும் சேவையில் அமர்த்துதல்**

2018 ஆம் ஆண்டிற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டு உள்ளனர்.

- **சேவையினை முடிவுருத்துதல்**

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டிலும் 03 உத்தியோகத்தர்களின் சேவை முடிவுருத்தப்பட்டு உள்ளது.

- **சேவையினை இடைநிறுத்துதல்**

2018 ஆம் ஆண்டில் ஒரு உத்தியோகத்தரின் வேலை இடைநிறுத்தப்பட்டு உள்ளது.

**வினைத்திறன் காண் தடைப்பரீட்சை**

2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை ஆண்டுகளுக்கு உரிய சகல பதவிகளுக்குமாக வினைத்திறன் காண் தடைப்பரீட்சைகள் நடாத்தப்பட்டு உள்ளன.

- **இறப்புக்கள்**

2018 ஆம் ஆண்டில் மன்றத்தின் மரணித்த உத்தியோகத்தர்கள் 06 பேர் ஆகக் காணப்பட்டனர்.

- **தனது சொந்த விருப்பின் பேரில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல்.**

2018 ஆம் ஆண்டில் மன்றத்தில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் 02 பேர் ஆவர்.

## 5.2 விநியோகப் பிரிவு.

பெறுகைகள் பிரிவின் பிரதான பணியானது, தலைமை அலுவலகம், மாகாண அலுவலகம், மாவட்ட அலுவலகங்கள், பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் ஏற்படும் தேவைப்பாடுகளுக்காக (சேவைகள் மற்றும் பொருட்கள் என்ற வகையில்) முறையான அனுமதி ஒன்றுடன் மேற்கொள்ளப்படும் கோரிக்கையின் பின்னர் பெறுகைகள் நடைமுறையினைப் பின்பற்றி மேற்படி பணிகளை நிறைவேற்றுவது ஆகும்.

2018 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமை அலுவலகத்தின் ஊடாகவும் ,ஏனைய அலுவலகங்களின் ஊடாகவும் மற்றும் பயிற்சி நிலையங்களின் ஊடாகவும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளன.

## 5.3 போக்குவரத்துச் செயற்பாடுகள்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக பல்வேறு பிரிவுகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களில் பிரதான உதவிச் சேவை ஒன்றாக வினைத்திறன் மிக்க போக்குவரத்துச் சேவை ஒன்றினை வழங்கி நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றியடையச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

- தலைமை அலுவலக குலாம் மாகாண அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள், பயிற்சி நிலையங்கள், விவசாயப் பண்ணைகள் என்பவற்றிற்காக இணைக்கப்பட்டு உள்ள வாகனங்களை சேவை செய்தல் மற்றும் பழுதுபார்த்தல்
- வாகன விபத்துக்கள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சாரதிகளின் நிருவாகம், நாளாந்த ஓட்டப்பதிவுப் புத்தகங்களைத் தருவித்துக்கொள்ளல், பரீட்சித்தல், தவறான நிலைமைகள் தொடர்பான விடயங்களைக் கேட்டறிதல், நாளாந்த ஓட்டப்பதிவுப் புத்தகங்களை அரச கணக்காய்விற்கு அனுப்புதல்.
- வருடாந்தம் வாகனங்களுக்கான புகைப் பரிசோதனை அறிக்கைகள், வாகன வருமான அனுமதிப் பத்திரங்கள், காப்புறுதிச் சான்றிதழ்கள் என்பவற்றினைப் பெற்றுக்கொள்ளல்.
- நிகழ்ச்சித்திட்டங்களுக்காக போக்குவரத்து சபையிடம் இருந்து பஸ் வண்டிகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- 2018.07.05 ஆம் திகதி ஏலவிற்பனை செய்யப்பட்ட வாகனங்களின் பட்டியல் 03
    1. 58 – 3574
    2. 18 -7600
    3. 51 -7263

- 2018.10.29 ஆம் திகதி நான்கு பழைய வாகனங்கள் கழித்து ஒதுக்குவதற்காக முன்மொழியப்பட்டன. கழித்து ஒதுக்குவதற்காக முன்மொழியப்பட்ட வாகனங்களின் பட்டியல்
    1. 29 ஶ்ரீ 6264
    2. 41 ஶ்ரீ 3420
    3. 27 ஶ்ரீ 5984
    4. 27 ஶ்ரீ 5985

## 5.4 உள்ளகக் கணக்காய்வுகள் பிரிவு.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு உரிய வகையில் கணக்காய்வாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் தலைவரின் ஆலோசனைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் புலனாய்வுகள் மற்றும் ஏனைய விஷேட கடமைகளை நிறைவேற்றுதல் என்பன மேற்படி பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

## 5.5 செயலாளர் பிரிவு.

செயலாளர் பிரிவின் ஊடாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின், பணிப்பாளர் சபைக் கூட்டத்தினை ஏற்பாடு செய்தல்,பேணி வருதல், அங்கு மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உரிய பிரிவுகள் மற்றும் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் ஆகியோரிடம் பகிர்ந்தளித்தல் என்பன மேற்கொள்ளப்படும். அதற்கு மேலதிகமாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உரிய வகையில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஒப்படைக்கப்படும் கடமை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

## 5.6 சட்டப் புலனாய்வு நடவடிக்கைகள்.

சட்டப் புலனாய்வுப் பிரிவு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள நிறுவனங்களில் தொடரப்பட்டு உள்ள வழக்குகள் தொடர்பாகவும் மற்றும் மேற்படி மன்றத்திற்கு எதிராக தொடரப்பட்டு உள்ள வழக்குகள் தொடர்பாகவும் மேற்படி மன்றத்திற்குப் பதிலாக மற்றும் தலைவர் பணிப்பாளர் நாயகத்திற்குப் பதிலாக தோன்றுதல் மற்றும் விடயங்களை முன்வைத்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

| நீதிமன்றம் | | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | உயர் நீதிமன்றம் | 01 |
| 2) | மேல் நீதிமன்றம் | 01 |
| 3) | மாவட்ட நீதிமன்றம் | 12 |
| 4) | நீதவான் நீதிமன்றம் | 04 |
| 5) | தொழிலாளர் நியாய சபை | - |
| 6) | தொழிலாளர் நஷ்டஈட்டு நீதிமன்றம் | - |
| | | 18 |

03. மேலும் தற்போதாகும் போது சட்ட ரீதியான நிறுவனங்களின் மூலம் பேணப்பட்டு வரும் முறைப்பாடுகள் கீழ்வருமாறு அமையும்.

| நிறுவனம் | | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | மனித உரிமைகள் ஆணைக்குழு | 14 |
| 2) | தொழிலாளர் அலுவலக முறைப்பாடுகள் | 03 |

01. அவ்வாறே, தாபனத்தின் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் போது ஒழுக்காற்று அதிகாரியின் கட்டளைகளின் அடிப்படையில் ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல், ஒழுக்காற்றுக் கட்டளைகளை வழங்குவதற்கான பரிந்துரைகள் மற்றும் /அல்லது அவதானிப்புக்களை வழங்குதல் மற்றும் உயர் அதிகாரிகளினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள் என்பன நிறைவேற்றப்படும்.

## 5.7 நிர்மாணிப்பு நடவடிக்கைகள்

நிர்மாணிப்புக்கள் / பராமரிப்புக்கள் பிரிவின் மூலம், நாடளாவிய ரீதியில் காணப்படும் சகல அலுவலகங்கள் மாவட்ட அலுவலகங்கள் ,இளைஞர் மத்திய நிலையங்கள் என்பவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் தொழில்சார் பயிற்சிகளுக்கு உரிய கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் என்பன மேற்கொள்ளப்படுவதுடன் இளைஞர் மத்தியநிலையங்களின் நாளாந்த பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் நவீனமயப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய நடவடிக்கைகளும் நிறைவேற்றப்படுகின்றன.





அதற்கு அமைய 2018 ஆம் ஆண்டிற்காக அமைச்சிலிருந்து ரூ.376.300 மில்லியன் ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றதுடன், அதன் மூலம் நிர்மாணிப்புக்கள் / நவீனமயப்படுத்தல் கருத்திட்டங்கள் 12 நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், 9.7 மூலதன ஒதுக்கீடுகள் ரூ. 169.80 மில்லியன்கள் கிடைக்கப் பெற்றதுடன், அதன் மூலம் 11 கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், திறன்கள் துறை சார் நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் ரூ. 65 மில்லியன் ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றதுடன், அதன் மூலம் 03 கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேற்படி 08 கருத்திட்டங்கள் முழுமையாகப் பூர்த்திசெய்து உரிய மத்திய நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளதுடன், ஏனைய கருத்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட உள்ளன. மேலதிக தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் அமையும்.

## 6. தொண்டர் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள்.

பிரதேச செயலாளர் பிரிவுகளில் பணிபுரியும் இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் இளைஞர் கழகங்களின் உறுப்பினர்களுடன் இணைந்து பிரதேச அடிப்படையிலும் மற்றும் காலத்தின் தேவைப்பாடுகளுக்கு ஏற்பவும் சுயமாகத் தேடிக்கொண்ட ஒதுக்கீடுகள் மூலம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தனர்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் சார்ந்த மேற்படி நிகழ்ச்சித்தட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன. மேற்படி நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக இளைஞர் கழக உறுப்பினர்களுள் மாத்திரமன்றி பிரதேச வாசிகள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கு இடையிலும் சகவாழ்வு,ஒற்றுமை என்பன ஏற்படுவதுடன் அபிவிருத்திப் பணிகளுக்காகவும் இளைஞர்களை தொண்டர் சேவை அடிப்படையில் ஈடுபடுத்திக்கொள்ளல் மேற்படி தொண்டர் சேவை நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டில் 27455 தொண்டர் சேவை நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய இதற்காக 473,222 இளைஞர்கள் பங்குபற்றியுள்ளனர். அவ்வாறே தொண்டர் சேவை நிகழ்ச்சித்திட்டங்களின் மொத்த நிதிப் பெறுமதி ரூ. 14,518,634.00 எனக் குறிப்பிட முடியும்.

தொண்டர் சேவை நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றுகை அட்டவணை - 2018

# Progress of Voluntary Programmes Implemented in 2018

| District | Community & Social Development | | | Environmental Programmes | | | Health & Sanitary Service Programme | | | Sports Development Programme | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Number of Programme | Number of Participation | Expenditure | Number of Programme | Number of Participation | Expenditure | Number of Programme | Number of Participation | Expenditure | Number of Programme | Number of Participation | Expenditure |
| rban Yout | 20 | 638 | 25,345 | 11 | 835 | 45,000 | 5 | 600 | 66,000 | 23 | 1100 | 78,000 |
| Colombo | 10 | 255 | 26,500 | 13 | 752 | 65,400 | 10 | 300 | 10,000 | 20 | 656 | 30,000 |
| Kaluthara | 7 | 95 | 16,000 | 17 | 1200 | 42,000 | 65 | 1020 | 60,000 | 15 | 825 | 75,000 |
| Gampaha | 5 | 15 | 29,160 | 6 | 45 | 74,000 | 14 | 1050 | 17,550 | 18 | 850 | 95,000 |
| Galle | 95 | 17800 | 15,620 | 21 | 205 | 17,000 | 11 | 152 | 60,000 | 30 | 650 | 70,000 |
| Matahara | 100 | 3165 | 25,520 | 11 | 123 | 18,000 | 5 | 390 | 65,000 | 9 | 680 | 736,000 |
| mbanthc | 26 | 2345 | 10,585 | 3 | 60 | 32,000 | 6 | 120 | 15,500 | 14 | 2320 | 153,500 |
| Kandy | 25 | 121 | 45,000 | 5 | 45 | 11,200 | 8 | 312 | 78,500 | 12 | 300 | 45,000 |
| Mathale | 23 | 23 | 14,500 | 8 | 25 | 3,600 | 10 | 100 | 65,120 | 10 | 102 | 11,500.0 |
| uwara Eli | 15 | 70 | 23,512 | 11 | 67 | 15,000 | 1 | 180 | 50,000 | 8 | 1394 | 325,000 |
| athnapur | 18 | 15 | 37,150 | 8 | 551 | 95,550 | 15 | 621 | 21,250 | 18 | 1697 | 502,000 |
| Kegalle | 15 | 65 | 12,400 | 5 | 195 | 54,000 | 12 | 95 | 11,500 | 6 | 120 | 7,500 |
| Badulla | 12 | 66 | 12,500 | 10 | 600 | 65,302 | 10 | 250 | 16,500 | 45 | 30352 | 15,000 |
| lonaragal | 10 | 120 | 65,000 | 4 | 312 | 56,000 | 6 | 65 | 45,000 | 5 | 112 | 32,100 |
| olonnaruv | 15 | 420 | 11,500 | 6 | 450 | 95,000 | 3 | 45 | 36,500 | 18 | 36 | 45,000 |
| uradhapu | 80 | 171 | 12,500 | 8 | 43 | 5,000 | 9 | 60 | 6,500 | 25 | 997 | 116,000 |
| incomale | 20 | 1560 | 15,120 | 12 | 600 | 17,500 | 25 | 1045 | 12,500 | 15 | 3924 | 11,200 |
| Ampara | 8 | 20 | 1,200 | 8 | 152 | 12,000 | 8 | 554 | 18,000 | 9 | 554 | 18,000 |
| Batticalo | 15 | 95 | 2,700 | 8 | 50 | 8,000 | 16 | 1000 | 80,000 | 10 | 116 | 260,000 |
| urunegal | 706 | 37445 | 56,000 | 13 | 270 | 26,000 | 18 | 608 | 23,850 | 22 | 730 | 64,000 |
| Puttalam | 31 | 640 | 30,495 | 7 | 73 | 5,000 | 9 | 219 | 15,000 | 21 | 1747 | 15,600 |
| Jaffna | 6 | 95 | 45,000 | 3 | 25 | 45,000 | 2 | 23 | 56,500 | 6 | 100 | 25,000 |
| Vavuniya | 22 | 65 | 15,000 | 6 | 30 | 32,000 | 4 | 25 | 36,000 | 16 | 95 | 15,000 |
| Mannar | 8 | 60 | 7,450 | 11 | 102 | 36,000 | 15 | 112 | 8,000 | 12 | 56 | 10,000 |
| Mulathivu | 10 | 50 | 45,000 | 52 | 450 | 16,000 | 6 | 65 | 4,000 | 18 | 300 | 13,500 |
| Kilinocch | 7 | 100 | 65,345 | 8 | 35 | 2,500 | 9 | 88 | 63,000 | 10 | 185 | 10,000 |
| Total | 1309 | 65514 | 666102 | 275 | 7295 | 894052 | 302 | 9099 | 941770 | 415 | 49998 | 2778900 |

| District | Educational & Development Programme | | | Youth Participatory Development Programme | | | Providing of job information | | | Religious Programme | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Number of Programme | Number of Participation | Expenditure | Number of Programme | Number of Participation | Expenditure | Number of Programme | Number of Participation | Expenditure | Number of Programme | Number of Participation | Expenditure |
| rban Yout | 5 | 300 | 95,000 | 18 | 978 | 11,250 | 23 | 755 | 11,023 | 13 | 522 | 75,000 |
| Colombo | 7 | 650 | 65,220 | 50 | 700 | 32,500 | 20 | 645 | 17,485 | 20 | 850 | 80,000 |
| Kaluthara | 5 | 614 | 11,200 | 12 | 1295 | 15,670 | 36 | 503 | 15,200 | 13 | 122 | 40,000 |
| Gampaha | 8 | 60 | 15,500 | 13 | 1058 | 21,300 | 15 | 200 | 17,000 | 16 | 783 | 30,000 |
| Galle | 4 | 708 | 89,000 | 20 | 800 | 65,000 | 15 | 300 | 16,000 | 45 | 1020 | 15,000 |
| Matahara | 10 | 203 | 85,000 | 24 | 3453 | 42,733 | 20 | 150 | 17,800 | 15 | 835 | 31,500 |
| mbanthc | 2 | 68 | 1,100 | 832 | 386 | 56,500 | 30 | 112 | 18,000 | 23 | 1694 | 66,500 |
| Kandy | 5 | 65 | 1,450 | 23 | 112 | 75,000 | 20 | 101 | 25,000 | 10 | 401 | 18,000 |
| Mathale | 6 | 89 | 4,500 | 20 | 203 | 57,000 | 12 | 103 | 45,000 | 5 | 250 | 56,000 |
| uwara Eli | 5 | 56 | 40,000 | 14 | 301 | 14,000 | 5 | 35 | 4,500 | 4 | 125 | 13,000 |
| athnapur | 8 | 25 | 20,000 | 5 | 328 | 6,800 | 12 | 300 | 12,500 | 38 | 373 | 134,500 |
| Kegalle | 9 | 14 | 65,000 | 12 | 8000 | 14,500 | 15 | 198 | 23,000 | 4 | 2318 | 26,000 |
| Badulla | 6 | 10 | 5,800 | 12 | 325 | 16,000 | 6 | 400 | 15,000 | 15 | 174 | 121,000 |
| lonaragal | 2 | 25 | 8,900 | 11 | 456 | 25,000 | 15 | 120 | 20,220 | 12 | 133 | 25,000 |
| olonnaruv | 6 | 78 | 4,500 | 9 | 75 | 89,000 | 14 | 203 | 456 | 10 | 218 | 45,000 |
| uradhapu | 6 | 55 | 6,000 | 7 | 95 | 6,500 | 10 | 300 | 6,000 | 8 | 102 | 109,500 |
| incomale | 11 | 300 | 11,000 | 36 | 1241 | 17,000 | 21 | 966 | 15,600 | 15 | 165 | 193,700 |
| Ampara | 5 | 99 | 9,500 | 8 | 115 | 7,500 | 11 | 825 | 45,000 | 7 | 85 | 3,000 |
| Batticalo | 10 | 110 | 1,200 | 7 | 189 | 44,600 | 13 | 200 | 15,000 | 12 | 359 | 4,700 |
| urunegal | 6 | 170 | 2,030 | 18 | 595 | 45,250 | 23 | 120 | 10,300 | 36 | 1295 | 24,450 |
| Puttalam | 10 | 301 | 6,000 | 8 | 90 | 3,000 | 15 | 603 | 50,000 | 11 | 549 | 50,500 |
| Jaffna | 4 | 58 | 5,000 | 11 | 85 | 45,000 | 15 | 455 | 60,000 | 12 | 366 | 12,500 |
| Vavuniya | 4 | 45 | 8,000 | 13 | 56 | 56,000 | 12 | 142 | 32,000 | 9 | 95 | 36,000 |
| Mannar | 13 | 150 | 8,000 | 18 | 800 | 14,000 | 12 | 125 | 8,000 | 14 | 300 | 25,000 |
| Mulathivu | 5 | 201 | 4,300 | 3 | 300 | 60,000 | 8 | 200 | 45,000 | 14 | 400 | 46,000 |
| Kilinocch | 12 | 11 | 4,500 | 47 | 5220 | 80,325 | 13 | 684 | 6,000 | 11 | 345 | 20,000 |
| Total | 174 | 4465 | 577700 | 1251 | 27256 | 921428 | 411 | 8745 | 551084 | 392 | 13879 | 1296850 |

| District | Enterprenurship & Economic Development Programme | | | Leadership & Personality Development Programme | | | Counseling Programme | | | Easthetic Programme | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Number of Programme | Number of Participation | Expenditure | Number of Programme | Number of Participation | Expenditure | Number of Programme | Number of Participation | Expenditure | Number of Programme | Number of Participation | Expenditure |
| rban Yout | 10 | 31 | 12,100 | 20 | 650 | 132,000 | 4 | 320 | 3,100 | 18 | 60 | 76,000 |
| Colombo | 12 | 330 | 55,000 | 80 | 1100 | 144,500 | 5 | 125 | 12,000 | 12 | 145 | 55,000 |
| Kaluthara | 10 | 120 | 75,000 | 145 | 1450 | 150,000 | 10 | 45 | 165,000 | 8 | 330 | 156,000 |
| Gampaha | 5 | 133 | 66,000 | 50 | 65 | 22,000 | 11 | 183 | 45,000 | 10 | 100 | 45,000 |
| Galle | 10 | 250 | 35,000 | 30 | 250 | 65,000 | 11 | 123 | 65,000 | 11 | 415 | 95,400 |
| Matahara | 11 | 115 | 45,000 | 35 | 110 | 13,200 | 5 | 96 | 15,000 | 6 | 60 | 14,000 |
| mbanthc | 10 | 102 | 14,500 | 23 | 80 | 12,500 | 6 | 56 | 15,000 | 1 | 60 | 480 |
| Kandy | 12 | 89 | 15,000 | 12 | 102 | 58,000 | 7 | 45 | 78,000 | 13 | 180 | 4,500 |
| Mathale | 23 | 125 | 13,500 | 12 | 302 | 16,500 | 5 | 23 | 4,500 | 5 | 95 | 1250 |
| uwara Eli | 11 | 45 | 40,000 | 13 | 102 | 75,000 | 6 | 120 | 56,000 | 10 | 120 | 65,000 |
| athnapur | 14 | 230 | 65,000 | 11 | 666 | 175,000 | 3 | 100 | 14,000 | 8 | 250 | 55,000 |
| Kegalle | 13 | 169 | 40,000 | 8 | 189 | 27,500 | 7 | 321 | 14,500 | 7 | 76 | 48,500 |
| Badulla | 10 | 362 | 35,000 | 10 | 200 | 25,000 | 5 | 200 | 20,000 | 10 | 275 | 75,000 |
| lonaragal | 8 | 201 | 15,500 | 8 | 112 | 13,500 | 8 | 100 | 15,600 | 5 | 56 | 18,500 |
| olonnaruv | 7 | 455 | 75,000 | 15 | 500 | 4,000 | 15 | 613 | 264,000 | 12 | 300 | 35,000 |
| uradhapu | 13 | 856 | 45,000 | 21 | 600 | 60,000 | 8 | 781 | 6,000 | 13 | 220 | 78,000 |
| incomale | 12 | 725 | 66,900 | 12 | 200 | 75,000 | 10 | 120 | 7,000 | 8 | 300 | 45000 |
| Ampara | 15 | 300 | 35,000 | 10 | 400 | 5,000 | 13 | 120 | 7,000 | 11 | 360 | 36,000 |
| Batticalo | 18 | 200 | 121,000 | 11 | 450 | 75,000 | 11 | 450 | 8,000 | 15 | 560 | 63,000 |
| urunegal | 15 | 502 | 96,000 | 123 | 7495 | 60,000 | 4 | 210 | 13,710 | 18 | 1002 | 232,000 |
| Puttalam | 10 | 158 | 15,000 | 14 | 895 | 172,035 | 20 | 45 | 8,000 | 10 | 326 | 25,000 |
| Jaffna | 9 | 111 | 15,000 | 6 | 45 | 80,000 | 12 | 300 | 56,000 | 12 | 400 | 45,000 |
| Vavuniya | 11 | 56 | 14,000 | 5 | 55 | 45,000 | 6 | 45 | 32,000 | 2 | 25 | 5,000 |
| Mannar | 13 | 145 | 3,000 | 16 | 400 | 7,000 | 14 | 276 | 40,000 | 11 | 121 | 75,000 |
| Mulathivu | 10 | 800 | 65,000 | 12 | 200 | 45,400 | 8 | 400 | 65,000 | 10 | 120 | 45,000 |
| Kilinocch | 11 | 1924 | 35,345 | 10 | 67 | 44,200 | 10 | 169 | 15,000 | 8 | 25 | 56,000 |
| Total | 303 | 8530 | 1112845 | 712 | 16685 | 1602335 | 224 | 5386 | 1044410 | 254 | 5981 | 1449630 |

| District | Decision Making & policy Development Programme | | | Other Programmes | | | Total Number of Programme | Total Number Youth participation | Total Expanditure |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Number of Programme | Number of Participation | Expenditure | Number of Programme | Number of Participation | Expenditure | | | |
| rban Yout | 7 | 25 | 5,000 | 11 | 650 | 30,000 | 188 | 7464 | 664,818 |
| Colombo | 7 | 15 | 3,000 | 13 | 81 | 20,000 | 279 | 6604 | 616,605 |
| Kaluthara | 6 | 52 | 4,000 | 6 | 13 | 7,500 | 355 | 7684 | 832,570 |
| Gampaha | 8 | 215 | 5,500 | 8 | 145 | 75,000 | 187 | 4902 | 558,010 |
| Galle | 6 | 45 | 5,000 | 16 | 123 | 23,200 | 18104 | 22841 | 636,220 |
| Matahara | 5 | 95 | 1,200 | 19 | 965 | 58,000 | 3429 | 10440 | 1,167,953 |
| mbanthc | 7 | 200 | 2,000 | 12 | 122 | 40,000 | 995 | 7725 | 438,165 |
| Kandy | 4 | 65 | 3,000 | 10 | 52 | 20,000 | 166 | 80178 | 472,650 |
| Mathale | 7 | 60 | 5,000 | 4 | 32 | 15,000 | 150 | 2687 | 312,970 |
| uwara Eli | 10 | 120 | 6,000 | 15 | 45 | 30,000 | 128 | 2780 | 757,012 |
| athnapur | 11 | 125 | 4,000 | 5 | 60 | 3,000 | 174 | 179675 | 1,145,750 |
| Kegalle | 13 | 201 | 6,000 | 5 | 25 | 7,500 | 131 | 11982 | 357,900 |
| Badulla | 11 | 25 | 5,000 | 10 | 175 | 8,500 | 172 | 33414 | 435,602 |
| lonaragal | 5 | 32 | 2,000 | 4 | 32 | 4,500 | 103 | 1876 | 346,820 |
| olonnaruv | 13 | 145 | 9,000 | 30 | 675 | 4,500 | 173 | 4213 | 718,456 |
| uradhapu | 5 | 133 | 6,500 | 10 | 23 | 2,500 | 223 | 16765 | 466,000 |
| incomale | 10 | 150 | 7,500 | 4 | 20 | 2,300 | 211 | 24876 | 497,320 |
| Ampara | 15 | 205 | 8,000 | 14 | 21 | 1,250 | 142 | 3810 | 206,450 |
| Batticalo | 12 | 210 | 10,000 | 6 | 65 | 5,000 | 169 | 5519 | 710,620 |
| urunegal | 12 | 450 | 56,000 | 25 | 56 | 35,158 | 1039 | 13523 | 744,748 |
| Puttalam | 13 | 36 | 5,000 | 6 | 92 | 29,000 | 185 | 5774 | 429,630 |
| Jaffna | 8 | 102 | 6,000 | 2 | 32 | 15,000 | 108 | 2197 | 511,000 |
| Vavuniya | 5 | 33 | 5,000 | 11 | 125 | 22,000 | 126 | 892 | 353,000 |
| Mannar | 9 | 45 | 3,000 | 5 | 50 | 3,000 | 171 | 2742 | 247,450 |
| Mulathivu | 8 | 60 | 2,000 | 9 | 60 | 4,000 | 173 | 3606 | 460,200 |
| Kilinocch | 10 | 138 | 25,000 | 8 | 62 | 3,500 | 174 | 9053 | 430,715 |
| Total | 227 | 2982 | 199700 | 268 | 3801 | 469408 | 27455 | 473222 | 14518634 |

## 7. செயலாற்றுகை மதிப்பீடு - 2018

### தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

**அ. நிறுவனத்தின் செயலாற்றுகை**

**1. ஒதுக்கீடுகளை வழங்குதல்**

2018 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மொத்த வருமதிகளில் ரூ.மில். 1752.4 பொதுத் திறைசேரியிலிருந்தும் அமைச்சு மற்றும் அரச நிறுவனங்களிலிருந்தும் ரூ.மில். 979.98 தொகையும் பெறப்பட்டுள்ளது. அதில் ரூ.மில1607.4 தொகை மீண்டுவரும் செலவினமாகவும் ரூ.மில். 1206 தொகை அபிவிருத்தி மற்றும் மூலதனச் செலவினமாகவும் செலவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தனது உள்ளக வருமான வழிகள் மூலம் ரூ.மில் 243 தொகையை உழைத்துள்ளது.

**2. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடத்தில் நடைமுறைப்படுத்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் இளைஞர் திறன் அபிவிருத்திக்கான 13059 உள்நாட்டு நிகழ்ச்சித்திட்டங்களில் 701025 இளைஞர் யுவதிகள் பங்கேற்றுள்ளனர். அதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை ரூ.மில். 351.90 ஆகும். 2018 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இளைஞர் விளையாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் 30 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா, 31 ஆவது இளைஞர் சேவைகள் ரூபவாஹினி கரப்பந்தாட்டப் போட்டி மற்றும் விளையாட்டுப் பயிற்சி முகாம்கள் என்பன குறிப்பிடத்தக்கவை. மேலும், நாடகம் மற்றும் அரங்கேற்றக் கலைகள் டிப்ளோமா பாடநெறி, இளைஞர் நாடக அரங்கேற்றம் மற்றும் தேசிய கலாசார நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

**3. தொழில்நுட்பம் மற்றும் தொழிற் பயிற்சி செயற்பாடுகள்**

தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சி செயற்பாடுகளின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பயிற்சி நிலையங்கள் 51இல் நடைபெற்ற முழுநேர மற்றும் பகுதிநேர பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 454க்காக ஆட்சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 21025 ஆகும். அதில் 15601 மாணவர்கள் 74.2% பாடநெறிகளைப் பூர்த்திசெய்துள்ளனர். தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 2018 ஆம் ஆண்டில் தொழிற் பயிற்சி அபிவிருத்திக்காக ரூ.மில். 77.2 செலவு செய்துள்ளது.

**4. தொழில் முயற்சியாண்மை ஆற்றல் அபிவிருத்தி**

தேசிய தொழில் முயற்சியாண்மை ஆற்றல்களை விருத்தி செய்யும் நோக்கில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2018 ஆம் ஆண்டில் ரூ.மில். 6.7 செலவு செய்யப்பட்டுள்ளதோடு, அதன் கீழ் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 79 க்காக 4392 பேர் பங்கேற்றனர்.

## 5. பண்ணை அபிவிருத்தி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 2018 ஆம் ஆண்டில் பண்ணை நிலையங்கள் 11 ஐ பராமரித்துள்ளதோடு, 10 நிலையங்களில் விவசாயப் பாடநெறிகள் 10ஐ நடாத்தியுள்ளது. அதற்காக இளைஞர் யுவதிகள் 286 பேர் பங்கேற்றுள்ளனர்.

## 6. சர்வதேச இளைஞர் தொடர்புகள்

சர்வதேச இளைஞர் தொடர்புகள் விடயத்திற்கு ஏற்புடையதாக 2018 ஆம் ஆண்டு நடைப்பெற்ற இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 172 பேரும், சர்வதேச இளைஞர் கப்பல் நிகழ்ச்சித் திட்டம் 02க்காக பிராந்திய இளைஞர் மாநாட்டுக்கு செயலமர்வுக்கு 75 பேரும் பிரதிநிதித்துவம் செய்துள்ளனர்.

## 7. இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித் திட்டம்

அரசாங்க கொள்கை வகுப்பாக்கத்திற்கும் செயல்முறை ரீதியில் அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் இளைஞர் சமுதாயத்திற்கு வசதியளிக்கும் நோக்கில் இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டம் 2018 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் போது "Youth with Talent இளைஞர் சிரம சக்தி" சமூக அபிவிருத்திக் கருத்திட்டத்தின் 3000 நிகழ்ச்சித்திட்டங்கள் கிராமிய மற்றும் நகர மக்கள் முகம்கொடுக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றுக்குத் தீர்வுகாணும் பொருட்டு இளைஞர் சமுதாயத்தை ஈடுபடுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், Youth with Talent Show - 2018 எனும் பெயரில் திறமை மற்றும் விசேட ஆற்றல் உள்ள இளைஞனை தேடும் பாடல் நிகழ்ச்சியொன்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## 8. ஆளணி நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி

வருடத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிரந்தர ஆளணிக்கு 11 உத்தியோகத்தர்கள் புதிதாக ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். வருடத்தில் ரூ.மில். 25.2 தொகை செலவு செய்து உத்தியோகத்தர்கள் 7186 பேர் 26 பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளனர். அத்தோடு, திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 3ஐ நடாத்தி 26350 பேரை பயிற்றுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 9. நிர்மாணப் பணிகள்

மேலும், 2018 ஆம் ஆண்டில் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூ.மில். 376.3ஐ பயன்படுத்தி நிர்மாண மற்றும் பழுதுபார்ப்பு கருத்திட்டங்கள் 12உம் திறன் துறை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற ரூ.மில்.ஐ பயன்படுத்தி 03 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## ஆ) குறுகியகால மற்றும் நடுத்தரகால நடவடிக்கைகள்

நிறுவனத்தின் செயலாற்றுகையை விருத்தி செய்துகொள்வதற்காக எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள குறுகியகால மற்றும் நடுத்தரகால நடவடிக்கைகள் பின்வருமாறு.

**குறுகிய கால நடவடிக்கைகள்**

1. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்து கொண்டுள்ள இளைஞர் யுவதிகளின் திறன்கள் ( விளையாட்டு, நுண்கலை, தொழில் பயிற்சி, தொழில் முயற்சியான்மை,..........) அபிவிருத்தி செய்வதற்காக புதிய நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.
2. தனியார், அரச மற்றும் அரசசார்பற்ற தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயல்படுதல்
3. அதிகாரிகளின் திறமைகளை இனங்கண்டு அவர்களை உரிய இடங்களில் வேலைக்ககமர்த்தல்.
4. இளைஞர் யுவதிகளின் பொருளாதாரத்தினை வலுவூட்டுவதற்கு தேவையான பயிற்சிகள் மற்றும் புதிய தொழில்நுட்ப அறிவு மற்றும் வசதிகளை வழங்குதல்.
5. சர்வதேச ரீதியில் போட்டியிடுவதற்கு ஏற்றவாறு இளைஞர் யுவதிகளுக்கு சர்வதேச மொழிப் பாடநெறிகளை ஆரம்பித்தல்.
6. கலாசார, கல்வி, அரசியல் துறைகளின் ஊடாக இளைஞர் சமூகத்தில் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் தலைமைத்துவத்தினை மேம்படுத்ததல்.
7. இளைஞர் சமூகத்தில் நேர்மறைச் சிந்தனை ஏற்படுத்துவதற்காக பல்வேறு நிகழ்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல்.

**மத்திய கால நடவடிக்கைகள்**

1. பயன்மிகு சேவைக்கு தேவையான புதிய தொழில்நுட்ப தொகுதிகளை (System) மேம்படுத்தல்
2. காலத்திற்கு ஏற்ற அடிப்படையில் நலன்புரி, ஊக்குவிப்புகளை மேம்படுத்தல் மற்றும் திறனுடனான பணிக்குழாத்தினரை உறுவாக்குவதற்காக பயிற்சி, மதிப்பீட்டு வாய்ப்புகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் நேயமிகு வேலைச் சூழலை உருவாக்குதல்.
3. நிறுவனத்தின் அபிவிருத்திக்கு பொருத்தமான வகையில் நிருவாக கட்டமைப்பினை நவீனமயப்படுத்தல்.
4. இளைஞர் திறன் அபிவிருத்திக்காக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அறிமுகப்படுத்தப்படும் புதிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைய நடைமுறை நிகழ்ச்சித்திட்டங்களை நவீனமயப்படுத்தல்.
5. தொழில் முயற்சி ஆற்றலினை மேம்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தினை வலுவூட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
6. இலங்கைவாழ் இளைஞர்களுக்கிடையில் இலங்கையின் அபிமானத்தினை ஏற்படுத்தல்.

**2018 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வு விசாரணைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டு உள்ள விடயங்களை சீர்செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை.**

| கணக்காய்வு விசாரணை இலக்கம் | கணக்காய்வு விசாரணை மற்றும் அதன் மூலம் சுட்டிக்காட்டப்பட்டு உள்ள விடயங்கள் | சீர் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட மற்றும் எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் நடவடிக்கைகள் |
|---|---|---|
| VTY/A/NYSC/ 2017/10 | நிஸ்கோ வீடியோப் பிரிவின் நடவடிக்கைகள் தொடர்பான பரீட்சிப்பு. | நிஸ்கோ வீடியோப் பிரிவினை நவீனமயப்படுத்துவதற்காக தேவையான சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. |
| VTY/A/NYSC/ 2017/11 | ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய மற்றும் பசிபிக் வலயத்தின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் (UNESCAP) நிதிப் பங்களிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டம். Strengthening the capacity of Governments in the ESCAP ECA and ESCWA regains to respond to the needs of youth in formulating inclusive sustainable Development policies | அரச நிறுவனங்களுக்காக வெளிநாட்டு அமைப்புக்களில் இருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் திறைசேரியுடன் கலந்துரையாடியதன் பின்னர் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான சுற்றுநிருபங்களின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. |
| VTY/A/NYSC/ 2017/12 | 2017 மார்ச் மாதம் நடைபெற்ற யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்திற்காக வாடகை அடிப்படையில் வீடியோ சுவரினைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய பரீட்சிப்பு | ஆகக் குறைந்த விலை மனுக்களை முன்வைத்து இருந்த Air Supply Production (pvt)Ltd , இற்கு பெறுகைகள் பணியினை வழங்கி உள்ளதுடன், அதிகமாகச் செலுத்தியுள்ள தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. |
| VTY/A/NYSC/ 2017/13 | நில்வலா இளைஞர் பூங்காவினை நிர்மாணித்தல் – மாத்தறை | இளைஞர் பூங்காவினை நிர்மாணிப்பதற்கு உரிய காணியினை சட்டரீதியாக சுவீகரித்துக் கொள்வதற்கு முன்னாள் இளைஞர் விவகார மற்றும் திறன் விருத்தி அமைச்சினால் சுவீகரித்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.<br>2015 ஆம் ஆண்டின் பின்னர் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதற்காக |

| | | |
|---|---|---|
| | | ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறாமை காரணமாக எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாமல் சென்றது. |
| VTY/A/NYSC/ 2017/14 | காணி தொடர்பான பரீட்சிப்பு | பேருவளை மற்றும் சூரியஆரச்சி மன்றத்தினால் வழங்கப்பட்டு உள்ள காணிகளுக்கு உரிய வகையில் ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட சிரமத்தின் அடிப்படையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆற்றல் இல்லை<br>விசாரணையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டு உள்ள சட்டரீதியான உரித்தினை சுவீகரித்துக்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| VTY/A/NYSC/ 2017/15 | திறன்கள் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடு- தேசிய இளைஞர் சேவைகள் மன்றம். | தம்புள்ள மற்றும் சிலாபம் பயிற்சி நிலையங்களின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை ஆதலால் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டிய தரச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் தாமதமாகி உள்ளன. |
| VTY/A/NYSC/SSDP/2017/16 | திறன்கள் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உத்தியோகத்தர்களுக்கு செயலாற்றுகைக் கொடுப்பனவுகளை செலுத்துதல் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம். | செயலாற்றுகைக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக வரவுச் சதவீதங்களை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் செயலாற்றுகை மட்டம் பலவீனமான நிலைமையில் உள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. |
| VTY/A/NYSC/2017/A/17 | நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு - 2017 | விசாரணையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டு உள்ள கணக்கீட்டுக் குறைபாடுகள் தற்போதாகும் போது சீர்செய்யப்பட்டு உள்ளன.<br>இணைந்த நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. |
| VTY/A/NYSC/2017/B/18 | கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை - 2017 | விசாரணையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டு உள்ள உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பரிந்துரைகள் தொடர்பான பின்னாய்வு நடவடிக்கைகள் தற்போதாகும் போது பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன. |
| VTY/A/NYSC/2017/B/19 | தாமதமாகிய நிர்மாணிப்புக்களின் பரீட்சிப்பு - 2017 - தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உள்ள மஹரகம இளைஞர் மத்தியநிலையத்தின் நிலக்கீழ் மலசலகூடக் கட்டமைப்பினை நவீனமயப்படுத்துவதற்காக தேசிய நீர்ப்பாசன மற்றும் வடிகாலமைப்பு சபையிடம் புரிந்துணர்வு |

| | | |
|---|---|---|
| | | ஒப்பந்தம் ஒன்றின் மூலம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.<br>தேசிய நீர்ப்பாசன மற்றும் வடிகாலமைப்பு சபையினால் 2016.08.25 ஆம் திகதி ஒப்பந்தகாரர் ஒருவருக்கு உரிய ஒப்பந்தம் வழங்கப்பட்டு உள்ளது. அதற்கு அமைய மேற்படி ஒப்பந்தம் 2018.02.22 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டு இளைஞர் மத்தியநிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.<br>தற்போதாகும் போது ஆலோசனைக் கட்டணம் உட்பட ரூ.மி. 28.85 தொகை செலுத்தப்பட்டு உள்ளதுடன் இறுதிக் கொடுப்பனவினைச் செலுத்தும் போது ஒப்பந்தத்தின் பிரகாரம் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.<br>தம்புள்ள மற்றும் லௌலேன் பயிற்சி நிலையத்தின் நவீனமயப்படுத்தல் ஒப்பந்தங்களின் மொத்த வேலைப் பெறுமதியில் பூர்த்தி செய்யப்பட்டு உள்ள வேலைப் பெறுமதியினை கவனத்தில் கொள்ளும் போது செயலாற்றுகை தொடர்பாக திருப்தியுற முடியவில்லை என ஆலோசகர் நிறுவனத்தினால் சுட்டிக் காட்டப்பட்டு உள்ளதனாலும் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் பல சந்தர்ப்பங்களில் ஒப்பந்த காலத்தினை நீடித்து வழங்கிய போதிலும் நிர்மாண வேலைகள் மிகவும் மந்தகரமான விதத்தில் மேற்கொள்ளப்படுவதனால் ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒப்பந்த நடவடிக்கையினை இடைநிறுத்துமாறு வழங்கப்பட்டு உள்ள பரிந்துரைகளுக்கு அமைய தடை செய்யும் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டு உள்ளன. |
| VTY/A/NYSC/2017/B/20 | கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை - 2017 | விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உள்ள கைவிரல் அடையாள இயந்திரங்களைப் பொருத்துதல் மற்றும் செயற்பாடுகள் என்பன தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காக பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களுள் மென்பொருட்களை உள்ளடக்காமை காரணமாக செயற்பாட்டு நிலையில் இல்லாத இயந்திரங்கள், வரவு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் சென்றுள்ளமை, இடிமின்னல் தாக்குதல் காரணமாக செயலிழந்தமை மற்றும் செயலிழந்த நிலையில் உள்ள இயந்திரங்கள் தொடர்பாகவும் மற்றும் அவற்றை மீண்டும் சீரமைப்பதற்காகவும் வழங்குனர்களுக்கு அறிவிக்கப்பட்டு உள்ளது. |

| | | |
|---|---|---|
| VTY/A/NYSC/2018/AQ/01 | 2018 மே 25 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொருட்களின் ஏலவிற்பனை மற்றும் ஒதுக்கப்பட்ட பொருட்களை அழித்து விடுதல். | மேற்படி விசாரணையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டு உள்ள விடயங்கள் தொடர்பாக எதிர்வரும் ஏலவிற்பனைகளில் சீராக்கல்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. கொள்வனவாளர்களினால் முன்வைக்கப்பட்ட விலைகள் தொடர்பாக திருப்தியுராமையின் காரணமாக ஏலவிற்பனை செய்யாத ரயர்கள் படங்கல பயிற்சி நிலையத்தின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மற்றும் மண்சரிவினைத் தடுத்தல் என்பவற்றிற்காக பயன்படுத்தப்பட்டன. |
| VTY/A/NYSC/2018/AQ/02 | பெல்வூட் பயிற்சிநிலையத்தின் பயன்பாட்டிற்காக காணப்பட்ட GI குழாய் 23 இனை வெட்டிப் போடுதல் தொடர்பான பரீட்சிப்பு | விசாரணைகளுக்கு அமைய பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய GI குழாய் 23 இனை வெட்டிப் போடுதல் தொடர்பாக மத்திய நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் விடயங்களை விசாரித்து அத்துமீறி வெட்டிப் போடப்பட்ட குழாய்களுக்குப் பதிலாக குழாய்களைப் பெற்றுத் தருமாறு அறிவிக்கப்பட்டதன் பின்னர் புதிதாக குழாய்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. மேற்படி குழாய்கள் 2018 ஆம் ஆண்டில் பொருட்கள் கணக்கெடுப்பில் உள்ளடக்கப்பட்டு உள்ளன. உரிய உத்தியோகத்தருக்கு தீவிரமாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு உள்ளன. |
| VTY/A/NYSC/2018/AQ/03 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த ஊழியர் நட்புறவு சந்திப்பின்போது செலுத்த வேண்டியுள்ள நிலுவைத் தொகை தொடர்பான பரீட்சிப்பு. | நிதி அனுசரனையினை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்த தரப்பினர் அனுசரனை வழங்காமையின் காரணமாக புதிய அனுசரனையாளர் ஒருவரைத் தேடிக்கொள்ளல் தாமதமடைந்தமையினால் மேற்படி கொடுப்பனவு தாமதம் அடைந்ததுடன், 2018.11.30 ஆம் திகதி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன |

8. **சார்ந்த அறிக்கைகள் / ஆவணங்கள்.**

- நிதி அறிக்கை 2013, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.
- நிதி அறிக்கை 2014, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.
- நிதி அறிக்கை 2015, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.
- நிதி அறிக்கை 2016, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.
- நிதி அறிக்கை 2017, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.
- நிதி அறிக்கை 2018, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.
- இணைந்த திட்டம் 2013 – 2018, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.
- செயலாற்றுகைத் திட்டம் 2018 , தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.
- மாவட்டச் செயலாற்றுகை அறிக்கைகள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமை அலுவலகப் பிரிவுகளின் செயலாற்றுகை அறிக்கைகள்.
- திறைசேறிகள் / அமைச்சின் அபிவிருத்திச் செலவுகள் அறிக்கை – 2018 , தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.

# இணைப்பு 01

## கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தினை நடாத்துதல் தொடர்பாக வெளியிடப்பட்டு உள்ள சுற்றுநிருபங்களின் பிரகாரம் நடாத்தப்பட வேண்டிய குழுக்களின் எண்ணிக்கை 04 எனத் தீர்மானிக்கப்பட்டு உள்ளது. 2018 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் வரை நிரல் அமைச்சாகக் காணப்பட்ட தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்ட மன்றத்திற்குரிய பணிப்பாளர்கள் சபையின் பதவிக்காலம் பூர்த்தியடைந்தமை, 2018 ஆம் ஆண்டின் ஏப்பிறல் மாதமாகும் போது கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் விவகார மற்றும் தெற்கு அபிவிருத்தி என்ற வகையில் அமைச்சானது திருத்தப்பட்டமை, மீண்டும் 2018 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதமாகும் போது இளைஞர் விவகார, கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு என்ற வகையில் திருத்தம் செய்யப்பட்டமை, 2018 ஆம் ஆண்டின் நவெம்பர் மாதமாகும் போது பௌத்த சாசன மற்றும் மத விவகார அமைச்சு என்ற வகையில் திருத்தம் செய்யப்பட்டமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை நியமனம் செய்தல் மேற்கொள்ளப்பட்டிருப்பது 2018.12.05 ஆம் திகதியில் ஆகும். மேற்படி நியமனத்தின் பின்னர் 2018.12.21 ஆம் திகதியன்று கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுக் கூட்டம் ஒன்றினைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மேற்படி சந்தர்ப்பத்தில் அரசியல் நிலையில் இடம்பெற்ற மாற்றங்கள் காரணமாக அதனை நியமனம் செய்வதற்கும் இயலாமல் சென்றது.

# இணைப்பு 02

**தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்**
**2018 டிசப்பர் 31 திகதி**
**நிதி நிலை அறிக்கை**

(ரூபா000)

| | உ.அ.இ. | 2018 | 2017 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| பணம் மற்றும் அதற்கு இணையான சொத்துக்கள் | 1 | 3,944 | 8,268 |
| பெற தக்க சொத்துக்கள் | 2 | 311,968 | 298,665 |
| மொத்த விற்பனை | 3 | 10,081 | 13,272 |
| மற்றும் நடைமுறை சொத்துக்கள் | 4 | 330 | 319 |
| | | 326,323 | 320,524 |
| **அசையா சொத்துக்கள்** | | | |
| முன்னைய மூலதன சொத்துக்கள் | 5 | 919,500 | 755,703 |
| தளபாடம் மற்றும் உபகரணங்கள் | 6 | 582,248 | 333,793 |
| இடம் மற்றும் கட்டிடடங்கள் | 7 | 1,128,090 | 748,046 |
| | | 2,629,838 | 1,837,542 |
| **மொத்த சொத்துக்கள்** | | 2,956,161 | 2,158,066 |
| **பொறுப்புக்கள்** | | | |
| **அசையும் சொத்துக்கள்** | | | |
| செலுத்தப்பட வேண்டியது | 8 | 110,554 | 129,506 |
| மற்றைய பொறுப்புக்கள் | 9 | 10,870 | 18,590 |
| | | 121,424 | 148,096 |
| **அசையா பொறுப்பு சொத்துக்கள்** | | | |
| நுகரவுக்காக ஒதுக்கப்பட் தொகை | 10 | 432,190 | 433,167 |
| **மொத்த பொறுப்பு** | | 553,614 | 581,263 |
| **நிகர பொறுப்பு** | | **2,402,547** | **1,576,803** |
| **நிகர சொத்துக்கள்** | | | |
| ஏனைய அரச நிறுவனங்களில் இருக்கின்ற சொத்துக்கள். | | | |
| சந்தா | 11 | 5,298,333 | 4,506,286 |
| ஒதுக்கப்பட்ட | 12 | 177,208 | 34,155 |
| சேர்க்கப்பட்ட மேலதிக சொத்துக்கள் (குறைபாடு) | | (3,072,994) | (2,963,638) |
| **மொத்த நிகர சொத்துக்கள்** | | **2,402,547** | **1,576,803** |

.................................................
ஜி.டி.ரி.எஸ் பெரேரா
பணிப்பாளர் (நிதி)
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

.................................................
சட்டத்தரணி.டப்.ஜி.எஸ்.எறந்திக
தலைவா.'. பணிப்பாளர் நாயகம்
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

நிதி கொள்கைகளுக்கு அமைவாக இலக்கம் 01 தொடக்கம் 02 வரை நிதி அறிக்கை 05 தொடக்கம் 08 வரை இந்த ஆரம்ப அறிக்கையை ஆய்வு செய்வதற்கும் மற்றும் அதனை முன் வைப்பதற்குமான அதிகாரம் சபையின் முகாமைத்துவ குழவிற்கு இருக்கின்றது அதனால் இங்கு இந்த அறிச்க்கை முன்வைத்தல் இவர்கள் ஊடாக முன்வைக்கப்படுகின்றது .

01. சட்டத்தரணி தசுன் நாகஸ்கேன    சபை பணிப்பாளர்    .....................
02. புன்சந்த விஜய குமார    சபை பணிப்பாளர்    .....................

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
## 2018.12.31 திகதி நிறைவுற்ற வருடத்திற்கான
## நிதி செயற்திறண் அறிக்கை

| விபரம் | உப இலக்கம் | 2018 | 2017 |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| அரச நிதி (மீண்டெழும் செலவு) | | 999,930 | 918,170 |
| அபிவிருத்திக்காக அரச நிதி(மீண்டெழும்) | | 531,475 | 304,969 |
| | | 1,531,405 | 1,223,139 |
| வெளி சேமிப்பு(மீண்டெழுதல்) | | | |
| மாகாண சபை | | 147 | 150 |
| அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவணங்கள் (மீண்டெழுதம்) | | 482,625 | 749,745 |
| வெளிநாட்டு குழமம் | | 10,972 | 30,128 |
| வேறு வெளி நிறுவனங்கள் | | 3,483 | 2,090 |
| | | 497,227 | 782,113 |
| உள்ளக வருமானம் | | | |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருமானம் (மகரகம்) | 6-1 | 45,731 | 41,594 |
| பயிற்சி நிலையங்களில் இருந்து வருமானம் | 6-2 | 158,044 | 146,888 |
| பல்வேறு வகை வருமானம் | 6-4 | 23,057 | 10,932 |
| கண்காட்சி மூலமான வருமானம் | | 3,001 | 3,823 |
| நிரந்தர சொத்துக்களில் இருந்து வருமானம் | | 4,518 | 597 |
| பண்ணை தொழில் வருமானம் | 6-5 | 8,269 | 7,931 |
| கடன் ஒதுக்கீடு | | 440 | 993 |
| | | 243,060 | 212,758 |
| | | 2,271,692 | 2,218,010 |
| இயக்க செலவு | | | |
| குறைந்த :- | | | |
| நிறுவனத்தின் முகாமைத்துவ செலவு | 7-1 | 1,124,736 | 1,075,990 |
| நிரந்தர சொத்துக்களின் தேய்மானம் | 2-4 | 154,759 | 189,495 |
| | | (1,279,495) | (1,265,485) |
| | | 992,197 | 952,525 |
| இளைஞர் அபிவிருத்தி செலவு | 07 | | |
| நுண்கலை திறண் அபிவிருத்தி பிரிவு | 2-1 | 94,017 | 39,019 |
| ஊடக பிரிவு | 2-2 | 10,569 | 6,438 |
| ஆய்வு மற்றும் திட்டமிடல் பிரிவு | 2-3 | 2,505 | 1,803 |
| தொழில்வழிகாட்டல் மற்றும் ஆலொசனைப் பிரிவு | 2-4 | 6,154 | |
| தொழில்நுட்பம் மறறும் தெரிற்பயிற்சிப் பிரிவு | 2-6 | 29,223 | 56,289 |
| இளைஞர் நிலையங்களின் பராமரிப்பு பிரிவு | 2-7 | 3,360 | 2,121 |
| சர்வதேச இளைஞர் தொடர்பு பிரிவு | 2-8 | 44,395 | 45,315 |
| இளைஞர் பரிசளிப்பு பிரிவு | 2-9 | 10,121 | 6,564 |
| விளையாட்டு அபிவிருத்தி பிரிவு | 2-10 | 120,955 | 107,630 |
| இளைஞர் அமைப்புக்களின் அபிவிருத்தி பிரிவு | 2-11 | 101,991 | 94,778 |
| பண்ணை அபிவிருத்தி பிரிவு | 2-12 | 13,433 | 9,509 |
| இளைஞர் கூட்டுறவு மற்றும் வியாபார பிரிவு | 2-13 | 6,906 | 2,600 |
| நிஸ்கோ வீடியோ பிரிவு | 2-14 | 3,765 | 3,277 |
| மதிப்பீட்டுப் பிரிவு | 2-15 | 9,774 | 8,356 |
| தகவல் தொழில்நுட்ப பிரிவு | 2-17 | 15,422 | 1,714 |
| விசேட கருத்திட்ட பிரிவு | 2-18 | 447,738 | 697,245 |
| காணி அபிவிருத்தி பிரிவு | 2-19 | 154 | |
| பயிற்சி நிலையம் | 2-6 | 146,071 | 145,524 |
| தேசிய இளைஞர் நிலையம் - மகரகம | 2-6-1 | 35,000 | 16,863 |
| | | 1,101,553 | 1,245,045 |
| வருடத்தின் மேலதிகம் | | (109,356) | (292,520) |
| கூட்டுக | | | |
| மேலதிக செலவு (2018.01.01) | | (2,963,638) | (2,671,118) |
| முன்னைய ஆண்டின் சமப்படுத்தல். | | | |
| மீதி கீழ்க் கொண்டு செல்லல் | | (3,072,994) | (2,963,638) |

# இணைப்பு 03 – கணக்காய்வாளர் அறிக்கை மற்றும் திசெம்பர்31ம்திகதிய நிதி அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

**தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதன் செயற்பாடுகள் மீது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது

1

முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான

உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் விசேட அதிகாரத்திற்கிணங்க கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்பட்டது எனவும் பிரயோகிக்கக்கூடிய அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அனுமதிப்பதற்கும் அவசியமாக கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததும் எனவும் சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பை பேணுவதற்கும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது விசேட அங்கீகாரத்திற்கு இணங்க மாத்திரம் சொத்துக்களை அணுகுவதை அனுமதிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ளவாறான சொத்துக்களுடன் நியாயமான இடைவெளிகளில் மற்றும் பொருத்தமான நடவடிக்கை ஏனைய வேறுபாடுகளுடன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டும் என்பவற்றையும் நியாயமாக உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்கீட்டு போதியளவு கட்டுப்பாடுகளிற்கு "திட்டமிடுதல் மற்றும் பராமரிப்பு" என்ற முறைமையொன்று நிறுவகத்திற்கு தேவைப்படுகின்றது. பொது பேரேடு,

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை. | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக நடப்பாண்டின் இறுதியில் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த 477 கட்டிடங்கள், 28,555 எண்ணிக்கையிலான தளபாட உபகரணங்கள் மற்றும் 1,797 எண்ணிக்கையிலான இயந்திர உபகரணங்கள் என்பன தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதன் இழுவுப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் பெறுமதி பூச்சியமான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுத்து அண்ணளவான இழிவுப் பெறுமதியை கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு அதனைப் பாவனைக்கு எடுப்பதற்காக தயார் நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னரே ஆரம்பிக்கின்ற போதிலும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 125,492,259 கிரயமான சொத்துக்களுக்காக மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2017 திசெம்பர் மாதத்தின் போது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட 57 மோட்டார் வாகனங்களுக்கான மீளாய்வாண்டிற்குரிய ரூபா 29,575,000 தொகையான பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது சகல சொத்துக்களும் நியமத்தின் பிரகாரம் சரியாக பெறுமானத்தேய்வு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பான பெறுமானத்தேய்வு சீராக்கங்கள் 2019 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படுகின்றது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 11 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை இருப்பாக இனங்காணப்பட வேண்டியவைகளுக்கு உரித்தாக்க முடியாத, மீளாய்வாண்டின் போது கால்நடை உற்பத்தியிலிருந்து ரூபா 4,644,701 தொகையான வருமானம் ஒன்று உழைக்கப்பட்ட மன்றத்தின் பண்ணைகளில் வளர்க்கப்பட்ட ரூபா 2,986,920 | கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் சுட்டிக்காட்டப்பட்ட கால்நடை வள இருப்பு நடைமுறையல்லா சொத்தாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களும் இருப்புக்களும் தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தொகையான கால்நடை வளங்கள் தொடர்புடைய இருப்பாக இனங்கண்டு நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி என்ற பெறுமதியின் குறைந்த பெறுமதியில் இருப்பு பெறுமதியிடப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக இருப்புக் கிரயத்தில் பெறுமதி இடப்படும் வகையில் இருப்புக் கொள்கை இனங்காணப்பட்டிருந்தது. | எதிர்காலத்தின் போது இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பு பெறுமதி இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கணக்கீட்டு நியமத்திற் கிணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிநிலைமைக் கூற்றில் உரிமை மூலதனத்தின் கீழ் அரசாங்க மானியம் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களிடமிருந்து கிடைத்த மானியமாக ரூபா 5,298,332,712 தொகையான மூலதன மானியம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை ஒழுங்குமுறையான அடிப்படையின் கீழ் வருமானமாக இனங்காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் மானியம் மற்றும் வெளிநாட்டிலிருந்து கிடைத்த மானியமாக நிதி நிலைமைக் கூற்றில் உள்ள சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வின் பிரகாரம் சொத்துக்களை அகற்றும் போது உரிய திரண்ட பெறுமானத் தேய்வு பெறுமதி இந்த உரிமை மூலதனத்தின் கீழ் சீராக்கும் | அரசாங்கத்தின் மானியம் ஒழுங்கு முறையான அடிப்படையின் கீழ் பிற்போட்ட வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கொள்கையொன்றாகப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 11 பயிற்சி நிலையங்களை நடாத்திச் செல்வதற்காக 1984 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது கையேற்கப்பட்டிருந்த காணி மற்றும் மன்றத்திற்கு சட்ட ரீதியான உரித்து காணப்பட்ட 05 காணிகளின் பெறுமதி மற்றும் மன்றத்திற்குச் சொந்தமான 06 வாகனங்களின் பெறுமதி என்பன மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடுசெய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்தக் காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்குப் பிரிவிற்கு அறிக்கை இடுவதற்காக காணிப்பிரிவு அறிவித்த கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வாகனங்கள் தொடர்பாக எதிர்காலத்தின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மன்றத்திற்கு சட்ட ரீதியான உரித்துக் காணப்பட்ட மற்றும் மன்றத்தினால் பயன்படுத்தப் படுகின்ற வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் மீள கையேற்கப்படாமையின் அடிப்படையில் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மன்றத்தின் சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பகிர்ந்தளிக்கப்பட்ட ரூபா 14,016,500 கூட்டுத்தொகையான 289 மினி லெப்டொப் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கணனி மற்றும் இலத்திரனியல் உபகரணங்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதனால் சொத்துக்கள் அப்பெறுமதியினாலும் வருடாந்த பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் என்ற கணக்குகளின் மீதி முறையே ரூபா 2,803,300 இனாலும் ரூபா 8,409,900 இனாலும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மன்றத்தினால் வ/ப இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட 02 வாகனங்களுக்காக 2012 நவம்பர் 06 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடுவதற்குள்ள ரூபா 4,075,000 தொகை கணக்கிடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய இரண்டு வாகனங்களுக்காக அறவிட வேண்டிய பணத்தை செலுத்துமாறு கம்பனிக்கு கடிதம் அனுப்பப்பட்ட போதும் பதிலளித்தல் அல்லது பணம் செலுத்துதல் இடம்பெறவில்லை. | பணத்தை அறவிடுவதற்கு அல்லது வாகனங்களை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 32,065,606 தொகையான செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 13,988,144 தொகையான அட்டுறு செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும், கிடைத்த நிதியின் பிரகாரம் செலவிடப்பட்டிருந்ததுடன் கையிலுள்ள பட்டியல்கள், நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் திறைசேரி | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அட்டுறு எண்ணக்கருவின் அடிப்படையில் செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

செயலாளரின் BD/CPB/4/1/9/- 2018 ஆம் இலக்க மற்றும் 2017.12.27 ஆந் திகதிய 3/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனால் 2017 ஆம் ஆண்டிற்குரிய உறுதிச் சீட்டுக்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டிற்குரிய கொடுப்பனவுகள் 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டுள்ளது.

### 1.5.5 ஒன்றிணைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 98 சதவீத பங்குகள் உரித்தாகவுள்ள வ/ப இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனி 1981 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட போதிலும், மன்றத்தின் நிதிக்கூற்றுக்களுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணைக்கப்பட்டு ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வ/ப இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியின் நிதித் தகவல்களுடன் மன்றத்தின் நிதித் தகவல்கள் இணைக்கப்பட்டு ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

1.6 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இரண்டு நபர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 600,000 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கு மன்றம் தவறியிருந்தது. | உரிய உத்தியோகத்தரிடமிருந்து மாதாந்தம் அறவிடுவதற்கு இருந்த பணம் தொடர்ச்சியாக அறவிடப்படாமை பற்றி சட்டப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டப் பிரிவின் மூலம் எடுக்கப்பட்டுள்ள வழிமுறைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு அறவிட வேண்டிய பணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 109,356,000 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 292,520,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 183,164,000 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு இளைஞர் அபிவிருத்திச் செலவினம் ரூபா 143,492,000 இனால் குறைவடைந்தமை மற்றும் உள்ளக உழைப்பு ரூபா 30,302,000 இனால் அதிகரித்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 சனவரி 30 மற்றும் 31 ஆந் திகதிகளின் போது ஐக்கிய அமெரிக்க குடியரசில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக மன்றத்தின் பணிப்பாளர் மற்றும் இளைஞர் பிரதிநிதிகள் இருவருக்காக விமானச்சீட்டு மற்றும் அமையச் செலவினங்களுக்காக ரூபா 1,029,518 கூட்டுமொத்தமாக செலவிடப்பட்டிருந்தது. எனினும் குறித்த காலத்தின் போது வீசா அங்கீகரித்துக் கொள்வதற்கு முடியாமையினால் உரிய மாநாடு முடிவடையும் நாளில் நாட்டிலிருந்து வெளியேறியமையின் காரணமாக செய்யப்பட செலவினம் சிக்கனமற்ற செலவினத்திற்கு உள்ளாகியிருந்தது. | 2018.01.30 ஆந் திகதி வீசா கிடைத்திருந்ததுடன், நிகழ்ச்சித்திட்டம் 2018.01.30 ஆந் திகதி ஆரம்பித்து 31 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், அதன் பின் தொடர் நடவடிக்கைகள் 2018.02.01 ஆந் திகதியில் நடாத்தப்பட்டதாக அறிந்திருந்தமையால் அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட அழைப்பின் பிரகாரம் இலங்கையின் இளைஞர் விவகாரங்களை மேற்கொள்கின்ற நிறுவனமான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எவரும் பங்குபற்றாதிருப்பின் எதிர்காலத்தில் இலங்கையின் இளைஞர்களுக்கு இவ்வாறானதொரு சந்தர்ப்பம் கிடைக்காது போகின்றமையால் தாமதமாகியேனும் இந்த மூன்று பேரும் உரிய | மாநாடு ஆரம்பமாகின்ற தினத்தின் போதே பங்குபற்றச் செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் மற்றும் வசதிகள் வழங்கப்பட வேண்டியிருந்த துடன் அரசாங்கத்தின் நிதியை சிக்கனமாக பயன்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிகழ்ச்சித்திட்டத்திற்காக வெளியே அனுப்பப்பட்டிருந்தனர். | |
| (ஆ) | சர்வதேச இளைஞர் பரஸ்பர நிகழ்ச்சித்திட்டத்திற்காக புதிய நாடுகளை தொடர்புபடுத்தும் செயற்பாடுகளின் கீழ் சீனாவின் இளைஞர் அமைப்புடன் ஒருநாள் கலந்துரையாடலுக்காக 2018 யூலை 09 ஆந் திகதி முதல் 2018 யூலை 14 ஆந் திகதி வரை 05 நாட்கள் மன்றத்தின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,738,966 தொகை செலவிடப்பட்டு சீனாவிற்கு சுற்றுலா சென்றிருந்த போதிலும், 2019 யூலை 30 ஆந் திகதி வரையிலும் உரிய கலந்துரையாடல்களின் விளைவாக மன்றத்திற்கு பிரதிபலனொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | கலந்துரையாடலின் போது சமர்ப்பிக்கப்பட்ட கருத்துரைகள் மற்றும் முன்மொழிவு இடங்கள் கண்டறியப்பட்டதுடன் நிறுவனங்களுக்கிடையே நடாத்தப்படுகின்ற இளைஞர் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொடர்புபடுத்துவதற்குரியதாக இருக்கின்ற சுற்றுலாவின் பின்னர் அந்த நிறுவனத்துடன் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போது செலவிடப்பட்ட முறை தொடர்பாக கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையும் உள்ளது. | அந்த கலந்துரையாடல் மூலம் மன்றத்தின் செயலாற்றலை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அரசாங்கத்தின் பணம் ஆக்கபூர்வமான பணிகளுக்காக செலவிடப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் சர்வதேச இளைஞர் தினம் கொண்டாடும் | 2018 இன் வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட No Drugs அபி Youth நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித் திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட |

14

| | | | |
|---|---|---|---|
| | விழாவிற்காக அங்கீகரிக்கப்பட்ட திறைசேரி நிதிஏற்பாடு ரூபா 5,000,000 ஆக இருந்த போதிலும், அந்த எல்லையினை விஞ்சி ரூபா 9,602,715 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், ஏனைய இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு அதற்காக பயன்படுத்தப்பட வில்லை. | மற்றும் 2018 youth with talent நிகழ்ச்சித்திட்டம் சர்வதேச இளைஞர் தின நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைக்கப்பட்டு, அமுல்படுத்துவதால் செலவினங்களைக் குறைப்பதற்கு முடியுமாக இருந்தது. No Drugs அபி Youth மற்றும் இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டம் மூலம் மேலதிக நிதி பெறப்பட்டிருந்தது. | நிதிஏற்பாட்டு எல்லையில் செலவினங்களை முகாமைத்துவம் செய்வதற்காக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் யொவுன்புற நிகழ்ச்சித்திட்டத்திற்கான செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 150 மில்லியனாக இருந்த போதிலும், அதற்காக ரூபா 176,578,040 தொகை செலவிடப்பட்டமையின் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட எல்லை ரூபா 26,578,040 இனால் விஞ்சியிருந்தது. | யொவுன்புற 2018 இன் நிகழ்ச்சித்திட்டம் ரூபா 150 மில்லியன் தொகையில் 7000 இளைஞர் யுவதிகளின் பங்குபற்றலுடன் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், மேலதிகமாக 250 கூடாரங்களை வெளி நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்வதற்கும், சுகாதார வசதிகள், குழாய் நீர் வசதிகளுக்காக மின்சார சபை மற்றும் நீர் வழங்கல், நீர்வடிகாலமைப்புச் சபை போன்ற அரசாங்க நிறுவனங்களுக்கு மில்லயன் கணக்கான பணத்தைச் செலுத்துவதற்கு ஏற்பட்டமையும், பங்குபற்றுகின்றவர்களுக்கு ரீ-சேர்ட், தொப்பி மற்றும் குவளை போன்ற நினைவுச் சின்னங்களை கையளிப்பதற்கும் மேலதிக பணத்தைச் செலவிட | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் செலவினங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வேண்டி ஏற்பட்டிருந்தது.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1979 இன் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தின் பிரகாரம் இளைஞர் அமைப்புக்களைத் தாபித்தல் மற்றும் இளைஞர் சுக நலன்களுக்காக தற்போது அமைக்கப்பட்டுள்ள அமைப்புக்களுக்கு ஒத்துழைப்பை வழங்குதல், இளைஞர் அமைப்புக்களைத் தாபித்து அவற்றைப் பதிவுசெய்து கொள்ளல், அந்த அமைப்புக்களுக்கு ஆலோசனை வழங்குதல், தொழில்நுட்ப அறிவை வழங்குதல், மற்றும் பணமாக உதவிகளை வழங்குதல் என்பன காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டில் சர்வதேச இளைஞர் தினத்தை கொண்டாடும் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய 09 வேலை விடயங்களை நிறைவேற்றுவதற்கும் யொவுன்புற நிகழ்ச்சித்திட்டத்திற்காக தேனீர் உபசரிப்புக்களுக்காக இலங்கை இளைஞர் சமூக சம்மேளனத்திற்கு முறையே ரூபா 3,050,000 தொகை மற்றும் ரூபா 3,219,500 தொகைகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், | மன்றத்தின் மன்ற பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இலங்கை இளைஞர் சமூக சம்மேளனத்திற்கு உதவி மானியமாக ரூபா 3,050,000 தொகை வழங்கி அந்த தொகையிலிருந்து 09 வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. யொவுன்புறயிற்குரிய பணிகள் இலங்கை இளைஞர் சமூக சம்மேளனத்தினால் நிறைவேற்றுவதற்கு கோரப்பட்டிருந்ததாகவும் அதனை மிகவும் பொறுப்புடனும், உரிய பிரகாரமும் நிறைவேற்ற வேண்டி இருந்தமையால் அது தொடர்பாக அனுபவமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு அந்த பணிகள் மன்றத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் இலங்கை இளைஞர் சமூக சம்மேளனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. உரிய கோவைகளை விரைவாக சமர்ப்பிக்குமாறு இலங்கை இளைஞர் சமூக சம்மேளனத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மன்றத்தின் சட்டங்களுக்கும் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் களுக்கும் இணங்க செயற்பட வேண்டும். |

இந்தப் பணிகள் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றாமல் இலங்கை இளைஞர் சம்மேளனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய செலவினங்களை பரீட்சிப்பதற்காக அதற்குரிய கோவைகள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி முறையே ரூபா 73,007,519 தொகை மற்றும் ரூபா 68,903,239 தொகையான திருகோணமலை லவ்லேன் பயிற்சி நிலையம் மற்றும் தம்புள்ளை சுவிஸ் பயிற்சி நிலையம் என்பவற்றை நவீனமயப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் வேலைகளுக்குரிய முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக 2018 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்ட போதிலும், 2019 யூலை 31 வரை | 02 செயற்திட்டங்களினதும் மிகுதி வேலைகளை பூர்த்திசெய்வதற்குத் தேவையான சகல திட்டங்களும், பொறியியலாளர் மதிப்பீடும் மதியுரை நிறுவனத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது. திறன் சார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களிலிருந்து 2019 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்டுள்ள நிதிஏற்பாடு போதியளவில் இல்லாமையினால் மேலதிக நிதியேற்பாடு கோரப்பட்டிருந்ததுடன், பாதீட்டில் இருந்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு கிடைக்கின்ற நிதியேற்பாட்டைப் பரீட்சித்து | பெறப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி செயற் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் தாமதங்களைத் தவிர்த்து பயிற்சி நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை குறித்துரைத்த பிரகாரம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த ஒப்பந்தகாரரை கறுப்புப்பட்டியலில் இடல் தொடர்பாக அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் மிகுதி வேலை பகுதிகளை பூர்த்தி செய்வதற்காக 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் வேறொரு ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | இரண்டு செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்தது. கறுப்பு பட்டியலில் இடுதல் தொடர்பாக வரிசை அமைச்சின் செயலாளருக்கு எதிர்காலத்தில் அறிவிக்கப்படும். | |
| (ஆ) | பெல்வூட் சவுந்தர்ய விடுதியை நவீனமயப்படுத்தல் மற்றும் புதிய நிர்மாண வேலையின் கட்டம் I மற்றும் கட்டம் II முறையே 2018 நவம்பர் 02 மற்றும் 2019 மார்ச் 31 ஆந் திகதிகளில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அதன் செயல் முன்னேற்றம் முறையே 60 சதவீதம் மற்றும் 8 சதவீதம் என்ற கீழ் மட்டத்தில் காணப்பட்டன. | பெல்வூட் கட்டம் I ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் பணிகள் மிகவும் மெதுவாக நிறைவேற்றப்படுகின்றது. சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களில் ரூபா 1,395,210 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. திருப்திகரமான செயல்முன்னேற்றம் காணப்படாமையினால் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் வேலைத் தளத்தை தடை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>கட்டம் II ஒப்பந்தம் மிகவும் | உடன்படிக்கையின் பிரகாரம் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மெதுவாக நிறைவேற்றப்படுவதுடன் இது தொடர்பாக ஒப்பந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |

3.5 **ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2016 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 100 மில்லியனுக்கும் 200 மில்லியனுக்கும் இடையிலான பெறுமதி உடைய ஒப்பந்தங்கள் அமைச்சின் பெறுகை சபையின் அங்கீகாரத்தின் கீழ் இடம்பெற வேண்டியிருந்த போதிலும், பெல்வூட் சவுந்தர்ய விடுதியை நவீனமயப்படுத்தல் மற்றும் புதிய நிர்மாணங்ள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அடிப்படைக்குப் புறம்பான கட்டம் I மற்றும் கட்டம் II ஆக முறையே ரூபா 99.66 மில்லியன் மற்றும் ரூபா 97.79 மில்லியன் என இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களின் போது திணைக்களப் பெறுகை சபையின் அங்கீகாரத்தின் கீழ் ஒரு ஒப்பந்தக்காரருக்கே கையளிக்கப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிர்மாணங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இந்த செயற்திட்டத்திற்காக வரையறுக்கப்பட்ட நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் அளவிற்கு ஈடாகும் வகையில் கட்டம் I ஆக ஒப்பந்தம் வழங்கல் 2017 யூலையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>2017 ஆம் ஆண்டின் இறுதிவரையில் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குரிய 07 செயற்திட்டங்கள் நிறைவேற்றப் படாமையினால் கிடைத்த நிதஏற்பாட்டை உச்ச பயன்பாட்டிற்கு எடுக்கும் நோக்கத்துடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் குறித்துரைத்த காலத்தில் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு உரிய மேற்பார்வையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மேலும், கட்டம் II இன் கீழான புதிய கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன் கட்டம் I இன் கீழான பழைய கட்டிடம் உடைத்து அகற்றப்படும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், கட்டம் I இன் ஒப்பந்தக்காலம் முடிவடைவதற்கு 10 மாதங்களுக்கு முன்னர் அதாவது வேலை ஆரம்பிப்பதற்குத் தேவையான அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்படாதிருக்கும் போது கட்டம் II இற்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு முற்பணமாக ரூபா 22,491,900 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

“அரசாங்கத்தின் பெறுகை பணியை துரிப்படுத்தல்'' அடிப்படையில் செயல்நடவடிக்கைத் திட்டம் திருத்தப்பட்டு பெல்வூட் கட்டம் II ஒப்பந்தம் 2017 திசெம்பர் 30 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது.

பெல்வூட் சவுந்தர்ய விடுதி அபிவிருத்திக்குரிய நிர்மாண நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் கட்டம் I ஒப்பந்தம் 2017.08.03 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018.11.02 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டும். கட்டம் II ஒப்பந்தம் 2018.01.05 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019.04.25 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதன் பிரகாரம் கட்டம் I கட்டிடம் உடைத்து அகற்றும் நடவடிக்கைகள் 2017 செப்தெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 சனவரி மாதம் கட்டம் II இற்குரிய ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் IV ஆம் அத்தியாயத்தின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நிரந்தர உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 09 மாதம் முதல் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 14 உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர்களும், ஒரு முகாமைத்துவ உதவி (தொழில்நுட்ப ரீதியற்ற) உத்தியோகத்தரும் அமைய அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். அதில் 11 பேர்களுக்கு ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகள் காணப்படவில்லை. | மன்றத்தின் தேவையின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டில் அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர். தகைமைகளைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக அமைச்சிடம் ஆலோசனை கோரப்பட்ட போதும், ஆலோசனை கிடைக்கப் பெறாமையினால் கிடைக்கின்ற ஆலோசனையின் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | ஆட்சேர்ப்பு நடைமுறையின் தகைமையின் பிரகாரம் உத்தியோகத்தர் களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.7 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்ட "நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030" இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் தேசிய இளைஞர் | கருத்துரை சமர்ப்பிக்கப் படவில்லை. | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய |

| | |
|---|---|
| சேவைகள் மன்றத்தால் தமது விடயப்பரப்பிற்கு கொண்டுவருகின்ற நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்கை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | NP/SP/SDG/17 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை.**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **தற்போதைய நிலைமை** | **விடயப் பொறுப் புப் பணிப்பா ளர்** |
|---|---|---|
| **1. நிதிக் கூற்றுக்கள்** | | |
| 1.1 **அபிப்பிராயம்**<br>வரைவு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு உள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் அபிப்பிராயம் தீர்மானிக்கப்படும். | | |
| 1.2 **அபிப்பிராயத்தின் மீதான அடிப்படை** | | |
| (அ) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 98% ஆன பங்குகளை உரித்தாகக் கொண்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனி 1981 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இருந்த போதிலும் மன்றத்தின் நிதிக்கூற்றுடன் மேற்படி கம்பனியின் நிதிக்கூற்றுக்களை ஒன்றிணைத்து இணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.<br>(கணக்காய்வு விசாரணைகளுக்கான முன்னளிப்பு VTY/A/NYSC/2018/AQ/16) | 2019 ஆம் ஆண்டின் இணைந்த நிதிக்கூற்றுக்களை முன்வைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பணிப்பாளர் (நிதி) |
| (ஆ). 2017 ஆம் ஆண்டிற்குரிய ரூ.32,065.606 தொகை செலவுகள் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குரிய செலவுகளாக கணக்குகளில் சேர்க்கப்பட்டு இருந்தது. | 2017 ஆம் ஆண்டிற்குரிய பற்றுச்சீட்டிற்கு உரிய பெறுமதிகள் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு கணக்குகளில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை.<br>1. வருடத்திற்குரிய ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டு இருந்த போதிலும் கிடைக்கப்பெற்ற தொகைக்கு ஏற்ப செலவு செய்யப்பட்டதுடன் கையிருப்பில் உள்ள | பணிப்பாளர் (நிதி) |

| | | |
|---|---|---|
| | விலைப்பட்டியல்கள், நிதி மற்றும் வெகுசன ஊடகங்கள் அமைச்சின் திறைசேரிச் செயலாளரின் BD/CPB/4/1/9 ஆம் இலக்க மற்றும் 2017.12.27 ஆம் திகதிய சுற்றுநிருப இலக்கம் 3/2017 04 ஆவது பந்திக்கு அமைய 2018 ஆம் ஆண்டின் ஒதுக்கீடுகளை பயன்படுத்தி கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. | |
| (இ). மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கு உரிய வகையில் செலுத்தப்பட வேண்டிய ரூ.13,988,144 தொகை செலவுகள் கணக்குகளில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை.<br>கணக்காய்வு விசாரணைகளுக்கான முன்னளிப்பு: - VTY/A/NYSC/2018/AQ/16) | பாதுகாப்புச் சேவைக் கட்டணங்கள் 2018 டிசம்பர் ரூ. 5,675,120 தொகை 2019 பெப்ரவரி மாதம் செலுத்தப்பட்டு உள்ளது. ஏனைய பற்றுச் சீட்டுக்களுக்கு உரிய கொடுப்பனவுகள் தற்போதாகும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் செலுத்தப்பட்டு உள்ளன.<br>(பிரிவுகளுக்கு உரிய வகையில்)<br>5 (34) துப்பரவு சேவைகளுக்கான செலவுகள் 2,836,283.40<br>5 (9) அப்பதிப்புகளுக்கான செலவுகள் 6,243,506.00<br>3(6) 5 (12) உணவு மற்றும் உபசரிப்புச் செலவுகள் 4,713,003.00 | பணிப்பாளர் (நிதி) |
| (ஈ). மன்றத்தினால் வ/ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியிடம் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டு இருந்த 02 வாகனங்களுக்காக 2012 நவெம்பர் 06 ஆம் திகதி தொடக்கம் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்படவுள்ள ரூ. 4,075,000 தொகை கணக்குகளில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை. கணக்காய்வு விசாரணைகளுக்கான முன்னளிப்பு : - VTY/A/NYSC/2018/AQ/15) | வ/ட இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியினால் அறவிடப்பட வேண்டிய மாதாந்த வாடகையாக கணக்குகளில் சேர்க்கப்பட வேண்டிய ரூ. 4,075,000/- தொகை படுகடனாக கணக்குகளில் சேர்க்கப்பட்டு இருந்தது. (ஜேர்னல் இலக்கம் 98) 2019 ஆம் ஆண்டில் மேற்படி தொகையினை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பணிப்பாளர் (நிதி) |
| (உ). இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம், அசையாத சொத்துக்களுக்கான பயனுறுதியுள்ள வாழ்வு காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை காரணமாக தற்போதைய ஆண்டு முடிவில் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்டு இருந்த 477 கட்டிடங்கள், 28,555 தளபாட உபகரண அலகுகள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தன. அதற்கு அமைய, ஏற்பட்டுள்ள மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை இலங்கை | இலங்கைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் 0 பெறுமதி வரை சென்ற சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு எதிர்வரும் காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டு மொத்த தேக்கப்பெறுமதியினை கணக்குகளில் வெளிக்காட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பணிப்பாளர் (நிதி) |

| | | |
|---|---|---|
| அரச துறையின் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. மேலும் அதன் மொத்தத் தேங்கியுள்ள பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டு இருக்கவில்லை. கணக்காய்வு விசாரணைகளுக்கான முன்னளிப்பு: - VTY/A/NYSC/2018/AQ/18) | | |
| (ஊ). 11 பயிற்சி நிலையங்களைப் பேணி வருவதற்காக 1984 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுவீகரிக்கப்பட்டு இருந்த மன்றத்திற்கு சட்ட ரீதியான உரித்துக் காணப்பட்ட ஐந்து காணிகளின் பெறுமதி மற்றும் மன்றத்திற்கு உரித்தான 08 வாகனங்களின் பெறுமதி என்பன மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் சேர்ப்பதற்கு மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி வரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | மேற்படி 11 பயிற்சி நிலையங்களினதும் காணிகளின் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்குகள் பிரிவிற்கு அறிக்கையிடுவதற்காக அறிவித்து கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளன. மேலும் மேற்படி 05 காணிகளின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து உரிய தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு காணிகள் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டு உள்ளதுடன் பெறுமதிகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் கணக்குளில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.<br>27-5984 மற்றும் 27-5985 ஆகிய இலக்கங்களைக் கொண்ட வாகனங்கள் மன்றத்திற்கு உரித்தற்றது ஆகையினால் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. மேற்படி வாகனங்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு உரித்தற்றது என்பதுடன் அதனை மனித வலுப்பயன்பாடுகள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது என போக்குவரத்து உத்தியோகத்தரினால் 2013.12.06 ஆம் திகதி எழுத்து மூலம் அனுப்பிவைக்கப்பட்டு உள்ளது.<br>பின்னர் மேற்படி வாகனங்கள் இரண்டும் மீண்டும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளதனால் கழித்து ஒதுக்குவதற்காக மீண்டும் மன்றத்திற்கு பொறுப்பேற்றுக் கொண்டு சபுகஸ்கந்தைப் பயிற்சி நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது.<br><br>37-6665 ஆம் இலக்க டிரக்டர் வண்டி எத்துன்கம பயிற்சி நிலையத்தின் பயிற்சிப் பாடநெறிக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனம் ஒன்றாகும் எனப் | பணிப்பாளர் (நிதி) |

| | | |
|---|---|---|
| | போக்குவரத்துப் பிரிவினால் அறிவிக்கப்பட்டு உள்ளது.<br>NC -0859 ஆம் இலக்க மோட்டார் கோச் வாகனம் தொடர்பான தகவல்களைப் போக்குவரத்துப் பிரிவில் இருந்து பெற்றுக்கொண்டு எதிர்வரும் காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.<br><br>மேற்படி மோட்டார் சைக்கிளுக்குத் தேவையான தகவல்கள் போக்குவரத்துப் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்கு அமைய YG-7110 ஆம் இலக்க முச்சக்கர வண்டி நிதிக்கூற்றுக்களின் கணக்குகளில் சேர்க்கப்பட்டு உள்ளது.<br>TD- 9198 ஆம் இலக்க மோட்டார் சைக்கிள் , TD- 9206 மோட்டார் சைக்கிள் , TD- 9263 மோட்டார் சைக்கிள் , YG-7110 ஆம் இலக்க முச்சக்கர வண்டியின் பெறுமதி ரூ. 334,320 தொகை ஆவதுடன் அட்டவணையின் பக்க இலக்கம் 3 இல் பதிவு செய்யும் போது தவறுதலாக 207-4654 எனப் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த 207-4654 ஆம் இலக்க முச்சக்கர வண்டியின் பெறுமதி அட்டவணையின் 2 ஆம் பக்கத்தில் ரூ. 160,350 என கணக்குகளில் சேர்க்கப்பட்டு உள்ளது. | |
| (எ). இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமம் 7 இற்கு அமைய சொத்து ஒன்று தேய்மானம் செய்ய ஆரம்பிக்கப்படுவது அதனைப் பயன்படுத்துவதற்கான ஆயத்த நிலைமைக்குக் கொண்டு வரப்பட்ட பின்னரான போதும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த செலவு ரூ. 125,492,259 தொகையான சொத்துக்களுக்காக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காக தேய்மானம் செய்யப்பட்டு இருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் சகல சொத்துக்களும் தரப்படுத்தல் நியமங்களின் பிரகாரம் சரியான முறையில் தேய்மானம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பணிப்பாளர் (நிதி) |
| (ஏ). நிதி நிலைமை தொடர்பான கூற்றின் | அரசின் கொடைகள் மற்றும் வெளிநாட்டு | பணிப்பாளர் |

| | | |
|---|---|---|
| உரிமை முதலின் கீழ் அரசின் நன்கொடைகள் மற்றும் வெளிநாட்டு அரசுகளில் இருந்து கிடைக்கப்பெற்று இருந்த கொடைகள் என்ற வகையில் ரூ. 5,298,332,212 தொகை குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் அவை முறையான வகையில் அடிப்படை ஒன்றின் கீழ் வருமானங்களாக அடையாளம் காண்பதற்காக கணக்கீட்டுக் கொள்கை ஒன்று அடையாளம் காணப்பட்டு இருக்கவில்லை.<br>(கணக்காய்வு விசாரணைகளுக்கான முன்னளிப்பு VTY/A/NYSC/2018/AQ/16) : - | அரசுகளிடமிருந்து கிடைக்கப்பெற்று இருந்த கொடைகள் என்ற வகையில் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ள சொத்துக்கள் பௌதீகக் கணக்கெடுப்பிற்கு அமைய சொத்துக்களை நீக்கும் போது உரிய திரண்ட தேய்மானங்களின் பெறுமதி மேற்படி உரிமை முதலின் கீழ் சீராக்கம் செய்வதனை கொள்கை ஒன்றாகப் பேணி வருவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | (நிதி) |
| (ஐ). 2016 ஆம் ஆண்டில் மன்றத்தின் தீர்மானம் ஒன்றின் அடிப்படையில் மீளப் பொறுப்பேற்காமையின் அடிப்படையின் கீழ் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த ரூ. 14,016,500 தொகை பெறுமதியான மினி மடிக்கணினி 289 இனை 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை தொடர்பான கூற்றில் கணினி மற்றும் மின் உபகரணங்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டு இருந்தது. ஆதலால் சொத்துக்களை மேற்படி பெறுமதியிலும் வருடாந்தத் தேய்மானங்கள் மற்றும் தேய்மானங்களை ஒதுக்கும் கணக்கின் மீதிகள் முறையே ரூ. 2,803,300 தெகையாலும் மற்றும் ரூ. 8,409,900 தொகையாலும் அதிகமாகக் காட்டப்பட்டு இருந்தது.<br>கணக்காய்வு விசாரணைகளுக்கான முன்னளிப்பு : -<br>VTY/A/NYSC/2018/AQ/A) | 2019 ஆம் ஆண்டில் சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பணிப்பாளர் (நிதி) |
| (ஒ) மன்றத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு அமைய மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் வரையருக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டிய கடன் உரிமை மீதி ரூ. 110,000 தொகை எனக் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் மேற்படி கம்பனியினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கு அமைய மேற்படி தினத்தன்று | வ/ட இளைஞர் சேவைகள் கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டிய கடன் உரிமை மீதி 2015 ஆம் ஆண்டின் கணக்குகளில் சேர்க்கப்பட்ட மீதியில் இருந்து இது வரை சீர்செய்யப்படாது காணப்பட்ட தொகை ரூ. 110,000/- ஆகும். மேற்படி தொகைக்காக கணக்குகள் பிரிவிடம் பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கையிருப்பில் உள்ள விலைப்பட்டியல்களாக முன்வைக்கப்பட்ட வவுச்சர் பத்திரங்கள் 20 மில்லியன் தற்போதாகும் போது செலுத்தப்பட்டு | பணிப்பாளர் (நிதி) |

| | | |
|---|---|---|
| மன்றத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் மொத்தம் ரூ. 79,713,942 தொகையாக இருந்ததனால் ரு. 79,603,942 வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது.<br>கணக்காய்வு விசாரணைகளுக்கான முன்னளிப்பு : - VTY/A/NYSC/2018/AQ/16) | உள்ளது. | |
| (ஓ). இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமம் 9 இன் 11 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு உள்ள வகையில் மொத்தமாக அடையாளம் காணப்பட வேண்டியவைகளுக்கு ஏற்புடையதாகக் கொள்ள முடியாத 2018 ஆம் ஆண்டில் கால்நடை உற்பத்திகளினால் ரூ. 4,644,701 தொகை வருமானம் ஒன்று ஈட்டப்பட்ட மன்றத்தின் விவசாயப் பண்ணைகளில் ஏற்படுத்தப்படும் மொத்தம் ரூ. 2,986,920 தொகை ஆகிய கால்நடை வளங்களின் மொத்தம் பொருத்தமற்ற வகையில் மொத்தமாக அடையாளம் காணப்பட்டு அமையும் சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்தது. மேலும் மேற்படி கால்நடை வளங்களை அரச துறையின் கணக்கீட்டு நியமம் இலக்கம் 1 இன் 76 ஆம் பந்தியின் பிரகாரம் அசையும் சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்ததனால் பொருத்தமற்றது என்பது அவதானிக்கப்படுகின்றது. | கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு அமைய சுட்டிக்காட்டப்பட்டு உள்ள கால்நடை வளங்களின் தொகையினை அசையாத சொத்துக்களாக கணக்குகளில் சேர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பணிப்பாளர் (நிதி) |
| (ஔ). இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமம் 09 ஆம் இலக்கத்தின் 15 ஆம் பந்திக்கு அமைய செலவு அல்லது தேறிய காசாகும் பெறுமதியாகிய தொகையிலும் குறைந்த பெறுமதிக்கு மொத்தத் தொகைகள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனினும் அதற்கு மாற்றமான வகையில் செலவிற்கு மதிப்பீடு செய்யப்படும் வகையில் மொத்தங்களுக்குரிய கொள்கை அடையாளம் காணப்பட்டு | எதிர்வரும் காலத்தில் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பந்திக்கு அமைய மொத்தத் தொகைகளை மதிப்பீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பணிப்பாளர் (நிதி) |

| | | |
|---|---|---|
| இருந்தது.<br>கணக்காய்வு விசாரணைகளுக்கான முன்னளிப்பு : - VTY/A/NYSC/2018/AQ/16) | | |
| (க) 2017 டிசம்பர் மாதத்தில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட 57 மோட்டார் வாகனங்களுக்கு உரிய வகையில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான ரூ. 29,575,000 தொகை தேய்மானங்கள் கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை.<br>கணக்காய்வு விசாரணைகளுக்கான முன்னளிப்பு : - VTY/A/NYSC/2018/AQ/18) | 2019 ஆம் ஆண்டில் சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பணிப்பாளர் (நிதி) |

| | | |
|---|---|---|
| **1.3 நிதிக்கூற்று தொடர்பான முகாமைத்துவத்தினதும் மற்றும் நிருவகிக்கும் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்.** | | |
| **1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர்களின் பொறுப்பு** | | |
| **2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்புத் தேவைகள் தொடர்பான அறிக்கை** | | |
| (அ). 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பாவனையில் இருந்து நீக்கப்பட்ட 14 வாகனங்கள் மற்றும் பழுதுபார்க்கக் கூடிய நிலையில் உள்ள 14 வாகனங்கள் என்பன தொடர்பாக கணக்காய்வு செய்யப்பட்ட தினமாகிய 2019 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் 31 ஆம் திகதியாகும் போது கழித்து ஒதுக்குதல் அல்லது பழுது பார்த்தல் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | **<u>பாவனையில் இருந்து அகற்றப்பட்ட வாகனங்கள் தொடர்பானவை</u>**<br>கழித்து ஒதுக்கப்படாத வாகனங்களின் பட்டியலில் இலக்கம் 1 தொடக்கம் 4 வரையான 27 ஶ்ரீ 5984 / 25 ஶ்ரீ 5985/ 41 ஶ்ரீ 3420/ 29 ஶ்ரீ 6264 ஆம் இலக்க வாகனங்களை கழித்து ஒதுக்குவதற்கு உரிய பொக்குவரத்துப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய சகல கடமை நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டு இனிவரும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வதற்காக 2018.11.19 ஆம் திகதி உதவிப் பணிப்பாளரிடம் (விநியோகங்கள்) சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. 50-4585 ஆம் இலக்க நிஸான் கெப் வண்டி மொனறாகலை இணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மொனராகலை மாவட்ட அலுவலகத்திற்கு வழங்கப்பட்டு உள்ள போதிலும் வாகனத்தின் சட்ட ரீதியான உரிமை செயலாளர், திட்டங்களை அமுல்படுத்தும் அமைச்சிற்கு உரித்தானதாகும். 2016 ஆம் ஆண்டு மேற்படி கருத்திட்டங்களின் ஊடாக வழங்கப்பட்ட வாகனங்களின் உரித்தினை சுவீகரித்துக் கொள்ளுமாறு கருத்திட்டப் பணிப்பாளரினால் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு அறிவிக்கப்பட்டு உள்ளதுடன் அதற்கு அமைய ஒப்படைப்பதற்கு உரிய ஆவணங்களை பூர்த்தி செய்து மேற்படி நிறுவனத்திடம் முன்வைக்கப்பட்டு உள்ளது. எனினும் மேற்படி ஒப்படைப்பு உரிய வகையில் நடைபெறவில்லை. மீண்டும் ஒரு முறை 2013 ஆம் ஆண்டு ஒப்படைப்பதற்கு உரிய ஆவணங்களைப் பூர்த்தி செய்து திட்டமிடல் பணிப்பாளர் அவர்கள் மொனராகலை மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி உள்ளார். எனினும் 2015 ஆம் ஆண்டு வரையும் மேற்படி பணி நிறைவேற்றப்படவில்லை என்பதுடன் இது தொடர்பாகத் தொடர்ந்தும் விசாரணைசெய்யும் போது பணிப்பாளர் மாவட்டச் செயலாளர் (திட்டமிடல்) 2015 ஆம் ஆண்டில் | பணிப்பாளர் (நிருவாகம்) |

| | | |
|---|---|---|
| | ஒப்படைப்பதற்கு உரிய ஆவணங்களைத் தயாரித்து அனுப்பி வைக்குமாறு எமக்கு அறியத் தரப்பட்டது. அதற்கு அமைய மீண்டும் உரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்ட போதிலும் இதுவரை உரிய உரிமை ஒப்படைத்தல் ஒன்று மேற்கொள்ளப்படவில்லை. கெப் வண்டியானது ஏற்கனவே சப்புகஸ்கந்தப் பயிற்சி நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளதுடன் கோளாறுகள் காரணமாக என்ஜின் தீப்பற்றியமையால் என்ஜின் பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளது. உடற்சட்டகமும் (Body) துருப்பிடிக்க ஆரம்பித்து உள்ளது. 50-6575 ரொயோட்டா ஹைஎஸ் வேன் வண்டி வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் மற்றும் வாகனத்தின் செஸி இலக்கம் என்பவற்றிற்கு இடையில் முரண்பாடு ஒன்று காணப்பட்டமையினால் மீண்டும் வாகனத்தினை மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திடம் முன்வைத்து திருத்தம் செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழ் ஒன்றினை பெற்றுக்கொள்ளுமாறு மோட்டார் வாகனப் பரிசோதகரினால் தெரிவிக்கப்பட்டது. அதற்கு அமைய உரிய கடமை நடவடிக்கைகளை நிறைவேற்றி புதிய பதிவுச் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுத்தருமாறு 2018.04.26 ஆம் திகதி மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளருக்கு அறிவித்து அனுப்பப்பட்டு உள்ளது. புதிய பதிவுச் சான்றிதழ் 2019.01.23 ஆம் திகதி கிடைக்கப்பெற்றவுடன் ஏலவிற்பனை செய்வதற்கு உரிய வாகனங்களை அடையாளம் காணும் சபையிடம் முன்வைக்கப்பட்டு உள்ளது. 51-7262, 52-0751, 52- 0274, 53-5863, 56-7964, 56-7970, 56-7972 எனும் வாகனங்கள் ஏலவிற்பனை செய்வதற்கு உரிய வாகனங்களை அடையாளம் காணும் கணக்கெடுக்கப்புக்கள் சபையிடம் 2019.01.11 ஆம் திகதி முன்வைக்கப்பட்டு உள்ளது. 207-4654 பஜாஜ் முச்சக்கர வண்டியின் செஸி இலக்கத்துடனான பகுதி முழுமையாக சேதமடைந்து உள்ளமையினால் வாகனத்தின் அடையாளத்தினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாமையினால் இனிவரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது உள்ளது என மோட்டார் வாகனப் பரிசோதகரினால் தெரிவிக்கப்பட்டதற்கு அமைய இது தொடர்பான எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ள முடியாது உள்ளதுடன் நிறுவனத்தின் முகாமைத்துவத்தின் மூலம் இனிவரும் நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படல் வேண்டும். | |

| | | |
|---|---|---|
| | **<u>பழுது பார்க்கப்படக் கூடிய நிலையில் உள்ள வாகனங்கள் தொடர்பானது</u>**<br><br>41-6415, 41-9248, 42-0118, 56-7973, 62-2258, எனும் வாகனங்கள் 2019 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்கள் என்பனவற்றை பழுதுபார்க்கும் ஒதுக்கீடுகள் பூர்த்தியடைந்து உள்ளதனால் எதிர்வரும் காலத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் ஒதுக்கீடுகளின் மூலம் பழுது பார்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டு உள்ளது. 41-9226 வாகனத்தினை பழுதுபார்ப்பதற்காக 2018.11.13 ஆம் திகதி பணிப்பாளர் நாயகம் அவர்களின் அனுமதி கிடைக்கப்பெற்று உள்ளதுடன் விலைமனுக்களை கோருவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. 53-5859 ,56-7967, 56-7971 ஆகிய இலக்கங்களை உடைய ஏல விற்பனை செய்யும் வாகனங்கள் அடையாளம் காணும் கணக்கெடுப்பு சபையிடம் முன்வைக்கப்பட்டு உள்ளன.<br>53-5860, ஹெய்யந்துடுவ பயிற்சி நிலையத்திற்கு இணைக்கப்பட்டு உள்ளதுடன் பழுதுபார்ப்பதற்காக தலைமை அலுவலகத்திகுக் கொண்டு வரப்பட்டு உள்ளதுடன் தற்போதாகும் போது பழுது பார்த்தல் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது.<br>56-7968 தம்புள்ள பயிற்சி நிலையத்திற்கு இணைக்கப்பட்டு உள்ளதுடன் இன்ஜெக்டர் பம்பியின் கோளாறு ஒன்று காரணமாக பழுதுபார்த்தலுக்காக அனுப்பப்பட்டு இருந்ததுடன் தற்போதாகும் போது பழுதுபார்த்தல் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது.<br>56-7965 ரத்மலானப் பயிற்சி நிலையத்திற்கு இணைக்கப்பட்டு உள்ளது.<br>KC- 6600 இளைஞர் விவிகார விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டு உள்ள பெஜரோ வகையான இந்தக் கார் வண்டி மேற்படி அமைச்சிடம் இருந்து பொதுமுகாமையாளர் வரையருக்கப்பட்ட இலங்கை தேசிய இளைஞர் சேவை கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டு உள்ளதுடன் 2012 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக இளைஞர் சேவைகள் மன்றத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டு உள்ளது. 2015 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட இந்தக் கார் வண்டி செலுத்தப்படாமையினால் தற்போதாகும் போது நாளாந்த ஓட்டத்தில் இல்லாமையினால் கருத்திட்ட முகாமைத்துவ இளைஞர் விவகார | |

| | | |
|---|---|---|
| | மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சிற்கு மீண்டும் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு 2018.05.04 ஆம் திகதி அறிவித்து அனுப்பப்பட்டு உள்ளது.<br>PE- 0697 ஆம் இலக்க கெப் வண்டி 2017 மே மாதம் விபத்துக்கு உள்ளானதன் பின் பழுதுபார்ப்பதற்காக உள்நாட்டு முகவர்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. பழுதுபார்த்தல் 2018.12.17 ஆம் திகதியாகும் போது பூர்த்தி செய்யப்பட்டு உள்ளதுடன் 2019.01.11 ஆம் திகதி தொடக்கம் வாகன ஓட்டத்திற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டு உள்ளது. | |
| (ஆ). 2018- டிசம்பர் 31 ஆம் திகதியன்று நுகர்வோர் மொத்த மீதியில் ரூ. 554,525 பெறுமதியான விளையாட்டுத்துறை உபகரணங்கள் உட்பட 08 வகையான பொருட்களுக்கு உரித்தான பொருட்களின் 1455 அலகுகள் பொருத்தமான தரப்பினரிடம் பகிர்ந்தளிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாது இரண்டு வருடங்களுக்கும் மேலான காலப்பகுதி ஒன்று களஞ்சியசாலையில் செயலிழந்து காணப்பட்டன.<br>கணக்காய்வு விசாரணைகளுக்கான முன்னளிப்பு :- VTY/A/NYSC/2018/AQ/15) | G-09-349 இன்வென்ட்ரி இலக்கத்தில் குறிப்பிடப்பட்டு உள்ள ரூ. 51,925 தொகை பெறுமதியான ஏர்த் கூறுகள் ஏற்கனவே களஞ்சியசாலையில் உள்ளன. மேற்படி ஏர்த் கூறுகள் எதிர்வரும் நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவைப்படுவதனால் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டு உள்ளன.<br>B- 10-545 இன்வென்ட்ரி இலக்கத்தில் குறிப்பிடப்பட்டு உள்ள 14 வொலிபோல்கள் தற்காலிகமாக வழங்கப்பட்டு உள்ள போதிலும் அவை வழங்கப்படாமை காரணமாக (குறைபாடுகள் காணப்படுவதனால்) அறவிட்டுக் கொள்ளுமாறு அறியத்தரப்பட்டு உள்ளது.<br>10 வொலிபோல்கள் கழித்து ஒதுக்கும் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டு உள்ளன. எஞ்சிய வொலிபோல்கள் களஞ்சியசாலையில் இருந்து வழங்கப்பட்டு உள்ளன. அதற்கு மேலதிகமாக உள்ள அனைத்துப் பொருட்களும் தற்போதாகும் போது மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன. | பணிப்பாளர் (நிதி) |
| (இ). 2018 ஆம் ஆண்டில் மன்றத்தினால் நடாத்தப்பட்ட சர்வதேச இளைஞர் தின வைபவம் மற்றும் யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிற்காக அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டினை மிஞ்சிய வகையில் முறையே ரூ. 9,602,715 தொகையும் மற்றும் ரூ. 26,568,040 தொகையும் செலவிடப்பட்டு இருந்தது.<br>கணக்காய்வு விசாரணைகளுக்கான முன்னளிப்பு :- VTY/A/NYSC/2018/AQ/07) | 2018 ஆம் ஆண்டின் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும் போது திறைசேரி ஒதுக்கீடுகளின் ரூ. 5,000,000.00 இனால் சர்வதேச இளைஞர் தினத்தினை கொண்டாடுவதற்குத் திட்டமிடப்பட்டு இருந்தது. 2018 ஆம் ஆண்டின் வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்திற்கு அமைய திட்டமிடப்பட்டு இருந்த No Drugs நாம் Youth நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 2018 Youth with talent நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிற்கு உரிய ஆரம்ப வைபவத்தினை வெவ்வேறான இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களாக நடாத்துவதற்கு அதிகளவான நிதித்தொகை ஒன்று செலவிட வேண்டி உள்ளமையினால் மேற்படி இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒன்றிணைத்து நடைமுறைப்படுத்துவதன் ஊடாக செலவினைக் | பணிப்பாளர் (அபிவிருத்தி) |

| | | |
|---|---|---|
| | குறைத்துக்கொள்ள முடிந்தது. இதன் காரணமாக மிகவும் பாரியதொரு நிகழ்ச்சித்திட்டமான சர்வதேச இளைஞர் தினத்தினைக் கொண்டாடுவதற்கு மேலதிக ஒதுக்கீடுகளாக ரூ. 9,602,715 தொகை ஒன்றினை செலவிட வேண்டி ஏற்பட்டது. மேற்படி தொகை No Drugs நாம் Youth மற்றும் இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.<br>சர்வதேச இளைஞர் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரிய வகையில் பாரிய பிரச்சாரம் ஒன்றினை வழங்கியமை மற்றும் தாமரைத் தடாக அரங்கினை மிகவும் கவர்ச்சிகரமான முறையில் அலங்கரித்து கோலாகலமாக காணப்பட்டமை என்பன காரணமாக இளைஞர் கழக உறுப்பினர்கள் பயிற்சி நிலையப் பயிலுநர்கள் மற்றும் ஏனைய ஏராளமான இளைஞர் யுவதிகள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினைப் பார்வையிடுவதற்கு வருகை தந்தனர். விஷேடமாக கொழும்பு மாவட்ட சாரணர் இயக்க ஜம்போரியின் 5000 இளைஞர் யுவதிகள் பங்குபற்றியமை மற்றும் இரவு நேர இன்னிசை நிகழ்ச்சி மற்றும் Food festival என்பவற்றிற்காக பாரியளவில் பங்குபற்றியமை காரணமாக சர்வதேச இளைஞர் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டம் மிகவும் வெற்றிகரமாக இருந்தது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.<br>“யொவுன்புர 2017” நிகழ்ச்சித்திட்டம் 150 மில்லியன் ரூபா செலவு செய்து 6000 இளைஞர் யுவதிகளின் பங்களிப்பில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கு அமைய “யொவுன்புர 2018” நிகழ்ச்சித்திட்டத்தினையும் 150 மில்லியன் ரூபாவினைக்கொண்டு 7000 இளைஞர் யுவதிகளின் பங்குபற்றலுடன் நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>I. பங்குபற்றும் இளைஞர் யுவதிகளுக்கு வதிவிட வசதிகளை வழங்குவதற்காக இலங்கை இராணுவப் படையில் இருந்தும் மற்றும் அனர்த்த முகாமைத்துவத் திணைக்களத்தில் இருந்தும் கூடாரங்களைப் பெற்றுக்கொள்ள ஆரம்ப கட்டமாகத் திட்டமிடப்பட்டது. எனினும் மேற்படி இரண்டு நிறுவனங்களிடமும் போதியளவான கூடாரங்கள் காணப்படாமையினால் தேவைப்பாட்டிற்கு அமைய மேலதிகக் கூடாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு | |

| | | |
|---|---|---|
| | பாரியளவான தொகை ஒன்றினைச் செலவிட வேண்டி ஏற்பட்டது.<br>II. யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தில் 7000 இளைஞர் யுவதிகள் பங்கபற்றியமையின் காரணமாக சுகநலன்பேண் வசதிகள் , நீர்ப்பாசனக் குழாய் வசதிகள் போன்றவற்றைப் போதியளவில் வழங்க வேண்டி இருந்தமையினால் மேற்படி பணியினை நிறைவேற்றிக்கொள்வதற்கு சிவில் பாதுகாப்புப் படையணி போன்ற நிறுவனங்களின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் மின்சார சபை மற்றும் நீர்வடிகாலமைப்பு மற்றும் நீர்ப்பாசன சபை போன்ற அரச நிறுவனங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக மில்லியன் கணக்கான தொகை ஒன்றினைச் செலுத்த வேண்டி ஏற்பட்டமையினால் எதிர்பார்க்கப்பட்ட செலவினை மீறிச் சென்றது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.<br>III. யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தினை 7000 எண்ணிக்கையான இளைஞர் யுவதிகளின் பங்களிப்பில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டதனால் சகல நிகழ்ச்சித்திட்டங்களும் உரிய வகையில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கும் பங்குபற்றியவர்களுக்கு ரீசேர்ட் – கெப் (தலைக்கவலசம்) மற்றும் மக் (mug) போன்ற பரிசுகளை வழங்குவதற்கும் மேலதிகத் தொகை ஒன்றினை செலவிட வேண்டி ஏற்பட்டது.<br>IV. இதற்கு அமைய யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட 150 மில்லியன் ரூபா போதியதாக இல்லாமையினால் மேலதிக ஒதுக்கீடுகளைப் பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது என்பதனைக் குறிப்பிடுகின்றேன்.<br>V. மேற்படி நிகழ்ச்சித்திட்டம் பாரிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்று என்பதனையும் மற்றும் அது மிகவும் சிக்கலான நிகழ்ச்சித்திட்டம் ஒன்று என்பதனையும் உறுதிப்படுத்தவற்கான புகைப்படங்கள் ஆவணப்படுத்தப்பட்டு உள்ளன.<br><br>உரிய விடயங்களை சீர் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டு உள்ள நடவடிக்கைகள் | |

| | | |
|---|---|---|
| | • இம்முறை யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தில் (2019) மேற்படி நிதிப் பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்வதற்கு சகல பிரிவுகளுக்கும் ஆலோசனைகள் வழங்குதல். | |
| (ஈ). 2018 ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 2019 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்வதற்கு உரிய ஒப்பந்தங்களின் பெறுமதி ரூ. 750,698,584 ஆகக் காணப்பட்ட 08 கருத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பௌதீகச் செயலாற்றுகை நூற்றிற்கு 7 தொடக்கம் 67 வரையான சதவீதம் ஒன்றினைக் கொண்டிருந்தது. | (ஈ). 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட இருந்தன. எனினும் 2018 ஆம் ஆண்டு பூராகவும் எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாமையின் காரணமாக விலைப்பட்டியல்களுக்கான கொடுப்பனவு தாமதமடைந்தமை காரணமாக சகல ஒப்பந்த நடவடிக்கைகளும் தாமதமடைந்தன.<br>அவ்வாறே 2019 ஆம் ஆண்டில் தற்போதாகும் போது கூட மேற்படி சகல ஒப்பந்த நடவடிக்கைகளும் மிகவும் குறைந்த செயலாற்றுகையினைப் பெற்றுக்கொண்டு உள்ளதுடன் சனவரி தொடக்கம் இதுவரை எந்தவொரு விலைப்பட்டியலுக்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை. | பணிப்பாளர் (நிருவாகம்) |
| (உ). தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2016 பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதிய மற்றும் 02/2016 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய ரூ. 100 மற்றும் 200 மில்லியன்களுக்கு இடைப்பட்ட பெறுமதி ஒன்றினைக்கொண்ட ஒப்பந்தங்கள் அமைச்சின் பெறுகைகள் சபையின் அனுமதியின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனினும், பெல்வூட் கலா நிலையத்தின் நவீனமயப்படுத்தல் மற்றும் புதிய நிர்மாணிப்புக்கள் என்பன ஏற்றுக்கொள்ளக் கூடிய அடிப்படை ஒன்றின் கட்டம் 1 மற்றும் கட்டம் II என்ற வகையில் முறையே ரூ. 99.66 மில்லியன்கள் மற்றும் ரூ. 97.79 மில்லியன்கள் என்ற வகையில் இரண்டு பகுதிகளாகப் பிரித்து 2017 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் சபையின் அனுமதியின் கீழ் ஒரே ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டு இருந்தது. மேலும் | 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அனுமதிக்கப்பட்ட நிர்மாணிப்புக்கள் தொடர்பான செயலாற்றுகைத் திட்டத்தில் மேற்படி கருத்திட்டத்திற்காக குறிப்பிடப்பட்ட அளவான ஒதுக்கீட்டுத் தொகை ஒன்று ஒதுக்கப்பட்டு இருந்தது.<br>ஆலோசகர் நிறுவனத்தினால் மேற்படி கருத்திட்டத்திற்காக வழங்கப்பட்டு இருந்த மொத்தக் கருத்திட்ட மதிப்பீடு பெறுகைகள் குழுவினால் பரீட்சிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டு உள்ள ஒதுக்கீட்டுத் தொகைக்குப் பொருந்தும் வகையில் முன்னுரிமை வழங்கி நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் உள்ளடங்கலாக (விடுதி,சாப்பாட்டு அறை, சமையலறை மற்றும் மலசலகூடம்) கட்டம் 1 என்ற வகையில் ஒப்பந்தம் வழங்கல் 2017 யூலை மாதம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.<br>2017 ஆம் ஆண்டு பூர்த்தியடையும் போது செயலாற்றுகைத் திட்டத்திற்கு உரிய 07 கருத்திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. ஆகையினால் கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடுகளில் இருந்து உச்சளவிலான பயன்களைப் பெறும் நோக்குடன் பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் “அரச பெறுகைகள் பணிகளைத் துரிதப்படுத்தல்” என்பதனை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுகைத் திட்டத்தில் நவெம்பர் மாதம் திருத்தம் செய்து புதிய கருத்திட்டங்கள் | பணிப்பாளர் (நிருவாகம்) |

| | | |
|---|---|---|
| கட்டம் 1 இன் பணி ஒன்றாகிய பழைய கட்டிடத்தினை உடைத்து அகற்றுதல் பூர்த்தியடைவதற்கு முன்னர் கட்டம் இரண்டிற்கான முற்பணம் என்ற வகையில் ரூ. 22,491,900 செலுத்தப்பட்டு இருந்தது.<br><br>கணக்காய்வு விசாரணைகளுக்கான முன்னளிப்பு :- VTY/A/NYSC/2018/AQ/05)) | உள்ளடக்கப்பட்டன.<br>அதன்போது முன்னுரிமை வழங்கி நிறைவேற்றப்பட வேண்டிய கருத்திட்டங்களை அடையாளம் கண்டு அதற்காக ஒதுக்கீடுகளை ஒதுக்கிக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. அதற்கு அமைய பெல்வூட் கட்டம் II ஒப்பந்தம் 2017 டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி வழங்கப்பட்டு உள்ளது.<br>கட்டம் 1 ஒப்பந்தத்தில் பிரதான கட்டிடத்தினை உடைத்து அகற்றுதல் உள்ளடக்கப்பட்ட போதிலும் கட்டம் II ஒப்பந்தத்தில் அதனோடு இணைந்த மற்றும் சுற்றியுள்ள மின்நிலைமாற்றி அறையினைத் தயாரித்தல் மற்றும் ஏனைய அகற்றும் வேலைகள் என்பன உள்ளடக்கப்பட்டு உள்ளன. அதற்கு அமைய ஆலோசகர் நிறுவனத்தினால் 2018.01.03 ஆம் திகதி கட்டம் II இற்கு உரிய ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டு உள்ளதுடன் ஒப்பந்த நிறுவனம் ஆரம்ப நடவடிக்கைகளை நிறைவேற்ற ஆரம்பித்து உள்ளது. எனினும் மேற்படி சகல நடவடிக்கைகளையும் நிறைவேற்றிக்கொண்டு செல்லும் போது பழைய பிரதான கட்டிடத்தினை உடைத்து அகற்றுதல் தொடர்பாக வெளித் தரப்பினர்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகள் காரணமாக பணியினை மேற்கொள்ளல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அதற்கு அமைய திட்டமிடப்பட்ட சகல பணிகளும் பாரிய தாமதம் ஒன்றிற்கு உட்பட்டது. | |
| (எ). 2018 சனவரி 30, மற்றும் 31 ஆம் திகதிகளில் ஐக்கிய அமெரிக்க குடியரசில் நடாத்தப்பட்ட இளைஞர் சம்மேளனம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக மன்றத்தின் பெண் பணிப்பாளர்கள் மற்றும் இளைஞர் பிரதிநிதிகள் இரண்டு பேர்களுக்கான விமானப் பயணச் சீட்டுக்கள் மற்றும் அமயச் செலவுகள் என்பவற்றிற்காக மொத்தம் ரூ. 1,029,518 தொகை செலவழிக்கப்பட்டு இருந்தது. எனினும் உரிய காலப்பகுதியில் விசாவினை அங்கீகரித்துக்கொள்ள முடியாமல் போனதன் காரணமாக உரிய சம்மேளனம் முடிவுரும் தினத்தில் நாட்டில் இருந்து வெளியேறி உள்ளமை காரணமாக ஏற்கப்பட்ட செலவு பயனற்ற செலவு ஒன்றாகக் காணப்பட்டது. | 2018.01.30 மற்றும் 31 ஆம் திகதிகளில் ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் நடைபெற்ற ECOSOC Youth Forum 2018 நிகழ்ச்சித்திட்டத்திற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினை பிரதிநிதித்துவம் செய்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் திருமதி. சுதர்ஷி பாக்யா கருணாரத்ன மற்றும் இளைஞர் பிரதிநிதிகள் இரண்டு பேரும் பங்குபற்றினர்.<br><br>உரிய சுற்றலாவிற்காக மூன்று பேருக்கு விமானப் பிரயாணச் சீட்டுக் கட்டணங்கள், விசாக் கட்டணங்கள், விமானப் பிரயாணச் சீட்டுக்களை இரத்து செய்வதற்கான கட்டணங்கள் அமயக் கொடுப்பனவுகள் மற்றும் உணவுகள் மற்றும் வதிவிடச் செலவுகள் என்பவற்றிற்காக ரூ. 1,029, 518.00 தொகை ஒன்று செலவழிக்கப்பட்டு உள்ளது. மேற்படி மூன்று பேரையும் பங்குபற்றச் செய்யும் போது உரிய தினங்களில் விசாவிற்காக விண்ணப்பிக்கப்பட்ட போதிலும் அமெரிக்க தூதரகத்தில் பின்பற்றப்படும் பல்வேறு சட்ட ரீதியான காரணங்களின் அடிப்படையில் மேற்படி | பணிப்பாளர் (அபிவிருத்தி) |

| | | |
|---|---|---|
| (கணக்காய்வு விசாரணைகளுக்கான முன்னளிப்பு :- VTY/A/NYSC/2018/AQ/09) | மூவரினதும் விசா இரத்து செய்யப்பட்டதுடன், நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றச் செய்யவிருந்த தீவிர தேவைப்பாட்டின் அடிப்படையில் அப்போதாகும் போதும் போதியளவிலான காலம் இருந்தமையினால் மீண்டும் விசாவிற்காக விண்ணப்பிக்கப்பட்டது. (இரண்டாவது தடவை விசாவினை விண்ணப்பிப்பதற்காக செலவழிக்கப்பட்ட தொகையினை மேற்படி மூவரும் பிரத்தியேகமாகப் பொறுப்பேற்று உள்ளனர்.) அதற்கு அமைய மேற்படி மூவருக்கும் 2018.01.30 ஆம் திகதி விசா கிடைக்கப் பெற்றதுடன் அப்போதாகும் போது விமானப் பிரயாண வசதிகளுக்கு அமைய ஒரு இளம் பிரதிநிதி 2018.01.31 ஆம் திகதி முற்பகலிலும் மற்றும் அடுத்த இளைஞர் பிரதிநிதி 2018.01.30 ஆம் திகதி பிற்பகலிலும் அமெரிக்கா நோக்கிச் சென்றார்.<br>நிகழ்ச்சித்திட்டம் 2018.01.30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 31 ஆம் திகதி நிறைவுபெற்ற போதிலும் அதன் பின்னாய்வு நடவடிக்கைகள் 2018.02.01 ஆம் திகதியும் நடைபெறும் என்பதனை அறிந்து இருந்ததனால் (மேற்படி நிகழ்ச்சித் திட்டத்திற்கு முன்னைய வருடங்களில் கலந்துகொண்டவர்களிடமிருந்தும் மற்றும் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரிய நேரத்தில் கலந்துகொண்டு இருந்த அப்போதைய இளைஞர் விவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர் (இளைஞர் விவகார) தொலைபேசியின் மூலம் அறிவித்ததற்கு அமையவும் அமெரிக்காவில் இருந்து மேற்கொள்ளப்பட்ட விஷேட அழைப்பிற்கு அமைய இலங்கையின் இளைஞர் விவகாரங்களை மேற்கொள்ளும் நிறுவனம் என்ற வகையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒருவரும் பங்குபற்றவில்லை எனின் எதிர்வரும் காலத்தில் இலங்கை நாட்டு இளைஞர்களுக்கு இவ்வாறானதொரு வாய்ப்புக் கிடைக்காமல் போகும் என்றபடியாலும் தாமதமாகியேனும் மேற்படி மூவரையும் உரிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக வெளியேற்றி அனுப்பி வைத்தேன் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எவ்வாறெனினும் மேற்படி மூவரும் இறுதித் தருணத்திலாவது மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள் என்பதனைக் குறிப்பிடுகின்றேன்.<br>மேலும் மேற்படி இளம் பிரதிநிதிகள் இருவருக்கும் மற்றும் மன்றத்தின் பணிப்பாளர் அவர்களுக்கும் எதிர்வரும் காலத்தில் நடைபெறவுள்ள 2019 வெளிநாட்டு இளைஞர் யுவதிகள் குழாம்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தில், சர்வதேச இளைஞர் சம்மேளனம் ஒன்றில் (உலகின் | |

| | | |
|---|---|---|
| | வலுமிக்க நாடுகள் தொடர்பாக) பெற்றுக்கொள்ளப்பட்ட தனது அனுபவங்கள் மற்றும் அறிவு என்பவற்றினை விளக்குவதற்கு சந்தர்ப்பம் ஒன்றும் வழங்கப்பட்டு உள்ளது என்பதனைக் குறிப்பிடுகின்றேன்.<br>இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடு ஒன்றின் இளைஞர்களுக்கு இவ்வாறான சந்தர்ப்பங்களுக்கு இறுதித் தருவாயிலாவது பங்குபற்றக் கிடைத்தமை அவர்கள் பெற்ற அரிய சந்தர்ப்பம் ஒன்றாகக் கருதப்படுவதுடன் அதற்காக செலவழிக்கப்பட்ட நிதி பயனற்ற செலவு ஒன்றல்ல என நம்புகின்றேன். இது தொடர்பாக இதற்கு முன்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட கணக்காய்வு விசாரணைகளின் போது வழங்கப்பட்ட பதிவுகளிலும் கூட, பங்குபற்றியமை, தெரிவு செய்யப்படல் மற்றும் பிரயாணத்தின் தேவைப்பாடு என்பன தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டு உள்ளது என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.<br>. | |